இலங்கை முதலீட்டுச் சபை
வருடாந்த அறிக்கை
2019

BOI
SRI LANKA

வருடாந்த அறிக்கை

2019

இலங்கை முதலீட்டுச் சபை

உள்ளடக்கம்

பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி

பணிப்பாளர் சபை 2019

நோக்கு பணிக்கூற்று

இமுச இன் பக்கத் தோற்றம், நோக்கங்கள், பங்களிப்பு

மைல் கற்கள்

விசேட நிகழ்வுகள் 2019

ஒரே பார்வையில் இமுச	**01**
சமீபத்திய முன்னெடுப்புக்களின் முன்னேற்றம்	**03**
உலக முதலீடுகளின் போக்கு 2019	**04**
முதலீட்டுச் செயலாற்றுகை 2019	**06**
பிரிவுகளின் செயலாற்றுகை	**13**
1. முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவு	**13**
2. முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு	**17**
3. ஆய்வு மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவு	**20**
4. முதலீட்டாளர் சேவைகள் பிரிவு	**23**
5. கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவு	**24**
6. கருத்திட்டம் அமுல்படுத்தும் பிரிவு	**25**
7. சட்டப் பிரிவு	**26**
8. தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு	**28**
9. வலய முகாமைத்துவப் பிரிவு	**30**
10. சூழல் முகாமைத்துவப் பிரிவு	**32**
11. பொறியியல் அங்கீகாரம் மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு	**34**
12. கைத்தொழில் உறவுகள் பிரிவு	**36**
13. தகவல் தொழில்நுட்பப் பிரிவு	**38**
14. ஊடக மற்றும் பிரச்சாரப் பிரிவு	**40**
15. நிர்வாகப் பிரிவு	**42**
16. மனித வள முகாமைத்துவப் பிரிவு	**43**
17. உள்ளக கணக்காய்வுப் பிரிவு	**44**
18. பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு	**45**
19. அறவீட்டு அலகு	**46**
20. நிதிப் பிரிவு	**47**
நிதிக் கூற்றுக்கள் 2019	**51**
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை	**81**
31.12.2019 இல் உள்ளவாறு இமுச இன் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள்	**82**
இமுச இன் அலுவலக விபரக்கொத்து	**83**
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2019	**87**
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான இமுச இன் பதில்கள்	**107**

பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி

இலங்கை முதலீட்டுச் சபை அரசாங்கத்தின் பொருளாதார மூலோபாயங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகளுடன் வெளிநாட்டு அபிவிருத்தி முதலீட்டைக் கவரும் ஒரு உச்ச நிறுவனமாகத் தொடர்ந்துவருகிறது. இமுச மத்திய வசதியளிப்பவர் என்ற வகையில் முதலீட்டாளர்கள் சீராக செயற்படும் வண்ணம் இலகுவாக அணுகுவதுடன், வசதிகளை அளித்தும் சிறந்த சேவையை வழங்கிவருகிறது.

இலங்கை ஒரு திறந்த பொருளாதாரமாக வளர்ந்துவரும் இந் நேரத்தில் இமுச உயர்ந்த அளவிலான கைத்தொழில்களைக் கவருவதில் உள்ள சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு அபிவிருத்தியடைந்த கட்டமைப்புடன் சகல நேர்மறையான தலைமைத்துவம், கொள்கைகள் மற்றும் அமைதியுடன் தொழிற்படுகிறது. நாட்டின் வளர்ச்சியில் நேர்மறையான சமிக்ஞைகளின் விளைவுகளை மேம்படுத்துவதற்காக, இலங்கையை உலகளாவிய மதிப்பு சங்கிலியில் செயலாற்றும் பங்குதாரராக ஆக்குவதற்கு உள்நாட்டு மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இமுச மேற்கொண்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இமுச இனால் அடைந்த சாதனைகள் 2019 ஆம் ஆண்டின் செயல்திறனினால் மேலும் வலுவூட்டப்பட்டுள்ளன. இமுச இன் வசதியான பயணத்தில் அதன் அனைத்து சிறந்த முயற்சிகளால் நாட்டிற்குச் சேவை செய்வதில் ஒரு அங்கமாக இருப்பதில் நான் திருப்தியடைகிறேன்.

இலங்கையில் அபிவிருத்தி முன்னுதாரணத்தில் முதலீடு முக்கிய பங்காற்றிவருவதுடன் கடந்த சில தசாப்தங்களாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் பாரிய பங்காற்றியுள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்ந்தும் பொருளாதார வளர்ச்சி, சமூக சமத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பு என்ற மூன்று அம்சங்களிலும் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்துவதே இன்று எமது இலக்காகும்.

முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடிய பல கொள்கைச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தி, முதலீட்டாளர் நட்பு நிலைமைகளை உருவாக்குவதில் இமுச அதிக பிரயத்தனம் செய்துள்ளது. இது தவிர, இமுச நாட்டின் பிராந்திய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு 18 ஆண்டுகளின் பின்னர் புதிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தை பிங்கிரியவில் சேர்த்துள்ளது. இந்த முயற்சிகளின் மூலம் இமுச நிச்சயமாக ஒரு உலகத் தரம் வாய்ந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக ஆகும். இன்று நாங்கள் ஆதரிக்கும் இந்த மாற்றங்கள் பல மில்லியன் கணக்கானோரின் வாழ்க்கையை சிறப்புற மாற்றக்கூடியதென நான் உறுதியாக நம்புகிறேன்.

இலங்கை இமுச விசேட பொருளாதார வலயங்களில் நிலைபேறான முதலீடுகளை ஊக்குவிப்பதில் சிறந்ததாக யு.என்.சீ.ரீ.ஏ.டீ (UNCTAD) இனால் அடையாளம் காணப்பட்டு, 2019 ஆம் ஆண்டு “ஐக்கிய நாடுகளின் முதலீட்டு ஊக்குவிப்பு பரிசு 2019” இமுச க்கு வழங்கப்பட்டது.

உத்தியோகத்தர்களின் திறமை மற்றும் செயல்திறன் அடிப்படையில் திறம்பட முகாமைத்துவம் செய்வதன் மூலமும், அவர்களுடைய நிபுணத்துவ துறையில் அவர்களை மேம்படுத்துவதன் மூலமும் வலுவான போட்டி விளிம்புடனான ஒரு நிறுவனமாக இமுச மீண்டும் வெளிப்படும்.

இறுதியாக நான் தலைவருக்கும், பணிப்பாளர் சபைக்கும் 2019 ஆம் ஆண்டு செயற்பாட்டிற்கு விதிவிலக்கான பங்களிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதுடன், சிறந்த குழுவான தகைமையுடைய இமுச அதிகாரிகளின் கடின உழைப்பையும். அர்ப்பணிப்பையும் பாராட்டுகிறேன்.

பணிப்பாளர் சபை 2019

பொறி. மங்கள பீ.பி.யாப்பா
தலைவர்

டாக்டர். நிஹால் சமரப்புலி
சபை அங்கத்தவர்

டாக்டர் ஹர்ஷா சுபசிங்க
சபை அங்கத்தவர்

திரு. துமிந்த ஹுலங்கமுவ
சபை அங்கத்தவர்

திரு.அனில் எஸ்.அமரசூரிய
சபை அங்கத்தவர்

நோக்கு

“ஆசியாவின் நிலையான முதலீடுகளுக்காக அதிசிறந்த கவர்ச்சிமிக்க கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல் ”

பணி

“இலங்கைக்கு தரமான முதலீட்டினைக் கவர்ந்தீர்ப்பதற்கும், அதனைத் தக்க வைப்பதற்கும் உள்ள சாத்திய தன்மையை நிறைவேற்றுவதற்காக மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதி அடிப்படையொன்றுக்கு இட்டுச் செல்வதற்கும், மிகச்சிறந்த தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கம் என்பவற்றினூடாக அறிவையும், திறன்களையும் மேம்படுத்துவதற்கும், இலங்கை முதலீட்டுச் சபை நேர்மறையாகவும், வேகமாகவும் செயலாற்றுகின்றது.”

இமுச இன் பக்கத்தோற்றம்

இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) 1978 ஆம் ஆண்டு குறிப்பாக வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கும் உத்தரவுடன் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவாக (கொ.பெ.பொ.ஆ.) பெயரிடப்பட்டு, நியதிச்சட்ட நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டது. பின்னர் 1992 ஆம் ஆண்டு கொ.பெ.பொ.ஆ. நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக, முதலீட்டாளர்களுக்கு வசதி வழங்குவதற்கும், சுலபமாகத் தொடர்பு கொள்ளக்கூடியதாகவும், தகவல் வழங்கவும் ஒரு வசதி வழங்கும் மையமாகத் தொழிற்படுவதற்கான ஆணையுடன் புனரமைக்கப்பட்டது. தற்போது இமுச புதிதாக 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தாபிக்கப்பட்ட பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்துடன், 14 ஏற்றுமதி செயலாக்க வலயங்களை முகாமைத்துவம் செய்து வருவதுடன், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ள 1,700 க்கும் மேற்பட்ட தொழில் முயற்சிகளுக்கு உதவி செய்ததில் பெருமைப்படுகிறது. இன்று இமுச நாட்டின் முதலீட்டு சூழலில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை நோக்கி உறுதியாக உள்ளது.

நோக்கங்கள்

பொருளாதார அபிவிருத்தியை வளர்த்து, உருவாக்குதல், பொருளாதாரத்தின் அடித்தளத்தை விரிவுபடுத்தி பலப்படுத்துதல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்கப்படுத்தி மேம்படுத்துதல், அந்நிய செலவாணி வருவாயின் மூலங்களைப் பன்முகப்படுத்தலுடன், ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல், குடியரசிற்குள் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகளை நிறுவி, அபிவிருத்தியை ஊக்குவித்தல் என்பவற்றில் கவனம் செலுத்துவதுமே இமுச இன் பிரதான நோக்கங்களாகும்.

பங்களிப்பு

- அரசாங்கத்தின் முதலீட்டு கொள்கையை அமுல்படுத்துவதை ஆதரித்து முன்னுரிமை துறைகளை நோக்கமாகக் கொண்டு, முதலீடுகளைக் கவர்வதுடன், தேசிய வளர்ச்சியின் நோக்கத்தை அடைவதற்குப் பங்களித்து, வெ.நே.மு. இன் மட்டத்தைப் படிப்படியாக அதிகரித்தல்

- இலங்கையில் உயர் பெறுமதிசேர்/உயர் தொழில்நுட்ப உற்பத்தி, உயர் பெறுமதிசேர் ஆடை, த.தொ. (IT) செயல்படுத்தப்பட்ட சேவைகள், சுற்றுலாத்துறை, உணவு பதனிடுதல், ஏற்பாட்டியல், கல்வி, மற்றும் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அல்லது ஏனைய தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளில் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ள முதலீட்டாளர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முதலாவது புள்ளியாக இமுச தொழிற்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக தகவலும், வழிகாட்டுதலும் வழங்கப்படுவதுடன், மற்றைய நிரல் நிறுவனங்களிடமிருந்து வேண்டப்படும் ஒப்புதல்கள் இமுச இனால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

- கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்காக அந்தந்தத் துறை முதலீட்டு விண்ணப்பங்கள் இமுச இனால் மதிப்பீடு செய்யப்பட்டு, சலுகைகள் வழங்கி, வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்குவது எளிதாக்கப்படுகிறது.

- கருத்திட்டத்தை ஆரம்பித்தது முதல் அதனை அமுல்படுத்தி, கருத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு மூலதன பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதி மற்றும் முடிவுப் பொருட்களின் ஏற்றுமதி என்பவற்றின் இறக்குமதி/ஏற்றுமதிக்கான சுங்கச் சேவைகளை இலகுவாக்கி, கவனித்துக்கொள்வதன் மூலம் இமுச முதலீட்டாளர்களுக்கு கருத்திட்ட காலம் முழுவதும் உதவி வழங்கிவருகிறது.

- இமுச குறைந்தளவு காலப்பகுதிக்குள் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான தளங்களில் உடனடியாகக் கிடைக்கக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்றுமதி செயலாக்க வலயங்களை அபிவிருத்தி செய்துவருகிறது.

மைல் கற்கள்

1978	1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொ.பெ.பொ.ஆ) தாபிக்கப்பட்டது.
1979	1979 ஆம் ஆண்டு கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபிக்கப்பட்டது. இதுவே பராமரிக்கப்படவேண்டிய முதலாவதும், பெரியதுமான வலயமாகும்.
1986	வலய தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்காக கொ.பெ.பொ.ஆ. இனால் ஒரு தொழில் வங்கி அமைக்கப்பட்டது. இமுச இன் இரண்டாவது வலயமாக 1986 இல் பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபிக்கப்பட்டது.
1990	வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு, கொ.பெ.பொ.ஆ இரண்டும் ஒன்றாக வெளிப்பட்டதுடன், கொ.பெ.பொ.ஆ. இலங்கையின் வெளிநாட்டு முதலீட்டை அங்கீகரிக்கும் ஏக அதிகார சபையாக ஆகியது.
1991	தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொக்கல ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபிக்கப்பட்டது.
1992	1992 ஆம் ஆண்டின் சட்ட இல.49 இன் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக இணைக்கப்பட்டது. இமுச கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் வாரிசாகும்.
	அரச பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலையில்லாமையைக் குறைப்பதற்காக "200 தைத்த ஆடைகள் கைத்தொழில் நிகழ்ச்சி" அறிமுகப்படுத்தப்பட்டது.
1995	கண்டி கைத்தொழில் பூங்கா தாபிக்கப்பட்டது.
1998	முதலீட்டுச் சபை, உட்கட்டமைப்பு முதலீட்டுப் பணியகத்துடன் (உமுப (BII)) ஒன்றிணைக்கப்பட்டது.
	மீரிகம ஏ.செ.வ. உம், மல்வத்த ஏ.செ.பூ உம் தாபிக்கப்பட்டன.
1999	ஹொரண ஏ.செ.வ உம், வத்துபிற்றிறவல ஏ.செ.வ உம் தாபிக்கப்பட்டன
2000	பொல்காவெல ஏ.செவ, மாவத்தகம ஏ.செ.வ. மற்றும் மிரிஜாவில ஏ.செ.வ. என்பன தாபிக்கப்பட்டன.
2001	சீத்தாவக ஏ.செ.வ. ஆக சீத்தாவக கைத்தொழில் பூங்கா இலங்கை முதலீட்டுச் சபைக்கு சுவீகரிக்கப்பட்டது.
2006	கைத்தொழில்துறையை கிராமப்புறத்திற்குக் கொண்டுசெல்லும் நோக்குடன் "300 தொழில்முயற்சிகள் நிகழ்ச்சி திட்டம்" ஆரம்பிக்கப்பட்டது.
2008	உலக வர்த்தக மையத்தின் 09 தளங்களை கொள்வனவு செய்ததன் மூலம் இமுச இன் தலைமையகம் உலக வர்த்தக மையத்தில் நிரந்தரமாக தாபிக்கப்பட்டது.
2009	இமுச ISO 9901:2000 ஐப் பெற்ற முதலாவது அரச நிறுவனம் ஆகியது.
	இமுச யாழ்ப்பாண காரியாலயம் நிறுவப்பட்டது.
2011	ஐ.அ.டொ. 1 பிலி. இலக்கு எட்டப்பட்டது.
2013	"பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் (CHOGM) 2013" இற்கு சமாந்திரமாக நடைபெற்ற "பொதுநலவாய வர்த்தக மன்றத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளராக இமுச இருந்தது.
2014	இமுச "ஆசிய பசுபிக் வர்த்தக மன்றம் 2014" க்கு அனுசரணை வழங்கியது.
2017	இமுச இன் 40 வது ஆண்டு விழா
2018	ஐ.அ.டொ. 2.37 பிலி. பெறுமதியான வெ.நே.மு பெறப்பட்டது
2019	பிங்கிரிய ஏ.செ.வ. : இமுச இன் ஏற்றுமதி செயலாக்க வலயங்களுடன் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டது.

BOI
SRI LANKA

விசேட நிகழ்வுகள் 2019

இமுச இன் கீழ் 2150 இற்கும் மேற்பட்ட கம்பனிகள் வர்த்தக நடவடிக்கைகளில் 548 (பீரிவு 16) - 1,642 (பீரிவு 17).

பொருளாதார அபிவிருத்திக்கு ஐ.அ.டொ. 18.5 பிலியனுக்கு மேற்பட்ட திரண்ட வெ.நே.மு. பங்களிப்பு.

2019 இல் ஐ.அ.டொ. 1.19 பிலி. பதிவு செய்யப்பட்டுள்ளது.

68% தேசிய ஏற்றுமதிக்கும், 86% கைத்தொழில் ஏற்றுமதிக்கும் பங்களிப்புச்செய்துள்ளது.

521,000 (எண்ணிக்கையில்) க்கும் மேற்பட்ட திரண்ட நேரடி வேலைவாய்ப்பு.



14 ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்/கைத்தொழில் பூங்காக்களை நீர்வகிக்கின்றது. முன்மொழியப்பட்ட புதிய வலயங்கள் 3 திட்டமிடப்படுகின்றன.

இலங்கை இமுசः “விசேட பொருளாதார வலயங்களில் நிலையான முதலீடுகளை ஊக்குவிப்பதில் சிறந்து விளங்குகிறது”

என்பதற்காக ஐக்கிய நாடுகள் முதலீட்டு ஊக்குவிப்புப் பரிசு 2019 ஐ வென்றுள்ளது

ஒரே பார்வையில் இமுச

வெளிநாட்டு நேரடி முதலீடு (2010 - 2019) ஐ.அ.டொ. மிலி.



மூலம் : இமுச

இலங்கையில் முதலீடு செய்யும் முதல் 10 நாடுகள் (2010 - 2019) ஐ.அ.டொ. மிலி



மூலம் : இமுச

துறை ரீதியாக வெளிநாட்டு நேரடி முதலீடு (2010 - 2019) ஐ.அ.டொ மிலி



மூலம் : இமுச

மொஉஉ(GDP)இன் சதவீதமாக வெளிநாட்டு நேரடி முதலீடு (2010 - 2019) - (%)



மூலம்: இமுச மற்றும் மத்திய வங்கி

தேசிய ஏற்றுமதிகளுக்கான பங்களிப்பு (2010 - 2019) ஐ.அ.டொ. மிலி



மூலம்: இமுச மற்றும் மத்திய வங்கி

தேசிய வேலைவாய்ப்புக்கான பங்களிப்பு (2010 - 2019) (000 களில்)
இமுச தொழில்முயற்சிகள் : மொத்த தொழிலாளர் படைக்கு 6%



சமீபத்திய முன்னெடுப்புக்களின் முன்னேற்றம்

கொள்கை முன்னெடுப்புகளில் முன்னேற்றம் முதலீடுகளைக் கவர்வதற்காக தற்போதுள்ள ஊக்குவிப்பு ஆட்சிக்குத் தேவையான கொள்கை மாற்றங்கள் பற்றி நிதி அமைச்சிற்கு பிரேரணைகள் சமர்ப்பித்தல்

2019 பாதீடு பிரேரணை மூலம் பிரேரிக்கப்பட்ட பாரிய அளவிலான கம்பனிகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பை ஒழுங்குபடுத்துவதற்கு, ஐ.அ.டொ. 50 மிலி.க்கு மேற்பட்ட முதலீடுகளைக் கொண்ட கருத்திட்டம் தொடர்பான விடயங்களுக்கு தே.க.வ. (NBT), து.வி.வ. (PAL) மற்றும் செஸ் (CESS) மீது வழங்கப்பட்ட விலக்கு அறிமுகம் சம்பந்தமாக இமுச பாதீடு பிரேரணை 2019 க்கு பிரேரணைகளைச் சமர்ப்பித்தது.

அதனைத் தொடர்ந்து தே.க.வ. நீக்கப்பட்டதுடன், முறையே 03.10.2019 மற்றும் 06.12.2019 முதல் ஐ.அ.டொ. 50 மிலி. க்கு மேற்பட்ட முதலீடுகளைக் கொண்ட திட்டங்களுக்கு செஸ் மற்றும் து.வி.வ. க்கு விலக்கும் வழங்கப்பட்டன.

2019 வரைவு மைய ஒழுங்குமுறை இல.01 மீதான இமுச இன் கருத்துக்கள் சமர்ப்பிப்பு

தற்போதுள்ள மைய கம்பனிகள், சாத்தியமான முதலீட்டாளர்கள் இருசாராருக்கும் வசதி அளிப்பதற்காக வர்த்தக மைய ஒழுங்குமுறைகள் பல தேவையான திருத்தங்களுடன் நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இமுச இனால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கி 2019 இன் இலங்கையின் வர்த்தக மைய ஒழுங்குமுறை இல. 01 என்ற புதிய ஒழுங்குமுறை 05.12.2019 அன்று வெளியிடப்பட்டது

முதலீட்டு உட்கட்டமைப்பை மேம்படுத்தல் இமுச இன் தற்போதுள்ள ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் பாரிய உட்கட்டமைப்பைப் பெருக்குதல்

காலப்போக்கிலும், பல வருடங்களாக ஏற்றுமதி செயலாக்க வலயங்களுக்குள் நடவடிக்கைகளின் அதிகரிப்பினாலும், ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் பாரிய பொது உட்கட்டமைப்பைப் பெருக்கவேண்டிய தேவை அவசியமாக உள்ளதுடன், தேவையான இடங்களில் புனர்வாழ்வு பெற்றவர்கள் இன்றைய கோரிக்கைகளைப் பூர்த்தி செய்கிறார்கள்.

சேவைகள் பிரிவு ஏற்கெனவே கட்டுநாயக்க மற்றும் பியகம ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் கழிவுநீர் திட்டங்களைப் பெருப்பித்துள்ளது.

அதேவேளை கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் நீர் விநியோக வலையமைப்பு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு வலையமைப்பு என்பவற்றை மறுசீரமைப்பதற்கான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய வலயங்களின் அபிவிருத்தி

முதலீட்டு வலயங்களாக அபிவிருத்தி செய்வதற்குப் பொருத்தமான காணிகளில் பிங்கிரிய, மிலேனிய, மற்றும் வகவத்த எனப்படும் மூன்று தளங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவை பிற வரி முகவர்களுடைய ஒத்துழைப்புடன் வெவ்வேறு நிலைகளில் அபிவிருத்தி முன்னெடுப்புகளில் உள்ளன.

தற்போது 12 ஏசெவ/கைபூ க்களும் இமுச வின் கீழ் இயங்குகின்றன. இதில் கடைசி வலயம் 2002 இல் அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆகவே இந்த முயற்சி மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட வலயங்கள் 18 வருடங்களின் பின்னர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவை ஆகும்.

பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் (ஏசெவ) கட்டுமான பணி 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி 164 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் உருவாக்குவதற்கு ஒதுக்கப்பட்டவாறு ஆரம்பிக்கப்பட்டது. இது 10,000 நேரடி தொழில் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் 25 தொழில்முயற்சிகளுக்கு உதவும்.

காணிகளை அடையாளம் கண்டு, முதலீட்டு திட்டங்களுக்கு இடமளிப்பதற்கு, விசேடமாக கழிவு முகாமைத்துவ தேவைகளுடன் ,புதிய வலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு சுற்றுச்சூழல் விடயங்கள் சம்பந்தமாக இமுச விசேட கவனம் செலுத்துவதுடன், வலயங்களுக்குள் சகல திட்ட நடவடிக்கைகளும் தேசிய சுற்றாடல் ஒழுங்குமுறைகளுக்கு அமைய வசதிகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்துகிறது.

உலக முதலீடுகளின் போக்கு 2019

வே.நே.மு. உட்பாய்ச்சல்கள்

2018 ஆம் ஆண்டு பதிவாகிய கணிசமான சரிவைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டில் உலகளாவிய வெ.நே.மு. பாய்ச்சல் மிதமாக அதிகரித்தது. ஐ.அ.டொ. 1.54 டிரில்லியனில் உட்பாய்ச்சல்கள் 3 வீதம் உயர்ந்திருந்தது. அவை கடந்த 10 ஆண்டுகளின் சராசரிக்கும் குறைவாகவே இருந்ததுடன், சில 2015 இன் உச்ச மதிப்பிலிருந்து 25 வீதம் குறைவடைந்திருந்தன. 2019 இல் உலகளாவிய வெ.நே.மு. உட்பாய்ச்சலைக் கருத்தில்கொள்ளும்போது 52% வளர்ந்த பொருளாதாரங்கள் மூலம் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து வளரும் பொருளாதாரங்கள் (44.5%) மற்றும் இடைக்கால பொருளாதாரங்கள் (3.6%) மூலமும் கிடைக்கப்பெற்றன.

பொருளாதாரங்களின் குழுக்களின்படி வெ.நே.மு உட்பாய்ச்சல்கள் 2019



(மூலம்: உலக முதலீட்டு அறிக்கை 2020)

வெ.நே.மு. இன் அதிகரிப்பு முக்கியமாக வளர்ந்த பொருளாதாரங்களுக்கு மற்றும் இடைக்கால பொருளாதாரங்களுக்கு அதிக பாய்ச்சலின் விளைவாகும். வளர்ந்துவரும் பொருளாதாரத்திற்கான வெ.நே.மு. 2% இனால் ஓரளவு குறைந்து, ஐ.அ.டொ. 685 பிலி. ஆகியது. பூகோளரீதியான வெ.நே.மு. பாய்ச்சல் 30% க்கு மேலாக கொண்டு, ஆசிய பிராந்தியம் ஒரு முக்கிய வெ.நே.மு. இலக்காக இருந்தபோதும், 2019 ஆம் ஆண்டில் ஆசியாவிற்கான பாய்ச்சல்கள் 5 வீதத்தினால் குறைந்து ஐ.அ.டொ. 474 பிலி. ஆகியது. 2019 ஆம் ஆண்டில் தெற்கு ஆசியாவின் பூகோள ரீதியான வெ.நே.மு. 3.7% உடன், வெ.நே.மு. உட்பாய்ச்சலும் சேர்ந்து ஐ.அ.டொ. 57 பிலி. ஆகியது. இது 2018 இன் பெறுமதியுடன் ஒப்பிடும்போது 9.96% அதிகரிப்பைக் காட்டுகிறது.

பிரதேச ரீதியாக உட்பாய்ச்சல்கள் (2018 எ 2019)



(மூலம்: உலக முதலீடு அறிக்கை 2020)

வே.நே.மு. வெளிப்பாய்ச்சல்கள்

2019 இல் வளர்ந்த பொருளாதாரத்திலிருந்து பன்னாட்டு நிறுவனம் ஐ.அ.டொ. 917 பிலி. ஐ வெளிநாட்டில் முதலீடு செய்தது. இது முன்னைய ஆண்டைவிட 72% அதிகமானது. வளர்ந்துவரும் மற்றும் இடைக்கால பொருளாதாரங்களின் வெளிப்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த போக்குகள் உலக வெ.நே.மு. இன் வெளிப்பாய்ச்சல்களின் வளர்ந்த பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த பங்கில் 2018 ஆம் ஆண்டின் 54% இருந்து 2019 ஆம் ஆண்டில் 70% ஆக அதன் பங்கில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. வளர்ந்துவரும் ஆசியாவிலிருந்து வெளிப்பாய்ச்சல்கள் 19% வீழ்ச்சியடைந்ததுடன், சீனாவிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டும் வீழ்ச்சியடைந்தது. தெற்காசியாவிலிருந்தான வெளிப்பாய்சசல்கள் இந்தியாவிடமிருந்தான முதலீட்டின் மூலம் 6% அதிகரித்தது. இருந்தபோதும் அவை பூகோளரீதியான வெளிப்பாய்ச்சல்களின் 1% மாத்திரம் பிரதிநிதிப்படுத்துவதால், அவை மிகவும் குறைவாகவே இருந்தன.

பிரதேச ரீதியாக வெளிப்பாய்ச்சல்கள் (2018 எ 2019)



(மூலம்: உலக முதலீடு அறிக்கை 2020)

முதலீட்டுச் செயலாற்றுகை 2019

1. 2019 இல் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மீதான முன்னேற்றம்



மூலம்: இமுச வின் மு.த.மு (21 மே, 2020)

2019 ஆம் ஆண்டு புதிய கருத்திட்டங்களுக்காக 70 விண்ணப்பங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த 70 விண்ணப்பங்களில் 50 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றுள் 2 கருத்திட்டங்கள் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பதுடன், 15 கருத்திட்டங்கள் செயல்படுத்தும் நிலையில் உள்ளன.

இவை தவிர, தற்போதுள்ள கருத்திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக 90 விண்ணப்பங்கள் 2019 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றுள்ளன.

2. நிலை வாரியாக கருத்திட்டத்தின் விபரங்கள்

■ 2019 இல் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களும், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களும்

2019 இல் மொத்த முதலீட்டுப் பெறுமதி ஐ.அ.டொ. 29.4 பிலி. (ரூபா 4,729 பிலி.) உடனான அங்கீகாரம் வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 144 ஆக இருந்தது. 2019 ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட மொத்த தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை 31,800 க்கு மேலாகும்.

2019 இல் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் முதலீடு மற்றும் தொழில் பங்கு - துறை வாரியாக

துறை	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	மதிப்பிடப்பட்ட முதலீடு (ரூபா மிலி.)	தொழில் (எண்ணிக்கை)
சேவைகள்/உள்கட்டமைப்பு	26	787,737.72	7,384
வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி	4	6,224.66	121
ஹோட்டல்கள், உணவக சேவைகள் மற்றும் பொழுதுபோக்கு வளாகம்	5	7,941.40	466
கடைத்தொகுதி மற்றும் அலுவலக வளாகம்	7	63,332.10	1040
பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம்	1	693,000.00*	1,358
கொள்கலன் சேவைகள், குதம் மற்றும் சரக்கு அனுப்புதல்	1	315.70	55
ஏனையவை	8	16,923.86	4,344
உற்பத்தி	27	59,286.21	7,071
விவசாயம்	5	5,708.21	658
ஏற்கெனவே உள்ள கருத்திட்டங்களை விரிவாக்கல்	85	105,583.61	10,262
மொத்தம்	**143**	**958,315.75**	**25,375**

மூலம்: இமுச

(சுகி பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தின் மதிப்பிடப்பட்ட முதலீட்டு தொகை ரூபா 3,771 பிலி. தவிர்த்து)

2019 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த முதலீட்டில் சேவைகள் / உட்கட்டமைப்பு துறை அதிகூடிய பங்களிப்பை (82%) உம் அதனைத் தொடர்ந்து விரிவாக்கல்களிலிருந்தான முதலீடுகளும் (11%), உற்பத்தித் துறையிலான முதலீடுகளும் (6%) பங்களிப்புச் செய்துள்ளன.

2019 இல் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த மதிப்பிடப்பட்ட தொழில்வாய்ப்பில் 29% ஆனவை சேவைகள் / உட்கட்டமைப்புத் துறையிலிருந்து உருவாக்கப்பட்டுள்ள அதேவேளை, 28% உற்பத்தித் துறையிலிருந்துமாகும்.

2019 இல் இமுச வுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட மொத்த எண்ணிக்கையான 105 கருத்திட்டங்களில் 46 புதிய கருத்திட்டங்களும், 59 தற்போதுள்ள கருத்திட்டங்களின் விரிவாக்கங்களுமாகும். இந்தக் கருத்திட்டங்களின் மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு ஐ.அ.டொ. 4,895 மிலி. (ரூபா 865,861.72 மிலி.) ஆகும். இந்தக் கருத்திட்டங்கள் 17,979 இற்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

■ 2019 இல் கட்டுமானம்/அமுல்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் 36 புதிய கருத்திட்டங்களும், 40 விரிவாக்கல் திட்டங்களும் கட்டுமானத்தை/அமுல்படுத்தலை ஆரம்பித்தன. அமுல்படுத்த ஆரம்பித்த கருத்திட்டங்களின் மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு ஐ.அ.டொ. 912 மிலி. (ரூபா 146,158.85 மிலி.) ஆக இருந்தது, எதிர்பார்க்கப்பட்ட தொழில் உருவாக்கத்தின் எண்ணிக்கை 16,935 க்குக் கூடுதலாக இருந்தது.

அட்டவணை 2: 2019 இல் கட்டுமானம்/அமுல்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட முதல் 10 கருத்திட்டங்கள் (மதிப்பிடப்பட்ட முதலீடு அடிப்படையில்)

கருத்திட்டத்தின் பெயர்	வியாபார நடவடிக்கை	மதி. தொழில்வாய்ப்பு (எண்.)	மதி. முதலீடு (ரூபா மிலி.)	துறை	அமைவிடம்
பிரேபுரூக் றெசிடென்ஷல் ரவர்ஸ் (தனியார்) லிமிடட்	குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் வளாகம் ஒன்று அமைப்பதற்கு	1,445	15,125.88	உட்கட்டமைப்பு	கொழும்பு 2
மொனறாச் இம்பீரியல் (தனியார்) லிமிடட்	ஒரு கலப்பு அபிவிருத்திகருத்திட்டம் ஒன்று அமைப்பதற்கு	895	11,374.86	உட்கட்டமைப்பு	தலபத்பிற்றிய
சண்டல் கொழும்பு (தனியார்)லிமி	அப்பார்ட்மென்ட் கொம்பிளெக்ஸ	306	6,637.58	உட்கட்டமைப்பு	கொழும்பு 10
பேல்லேவுவே றெசிடென்சீஸ் (தனியார்) லிமிடட்	ஒரு அபார்ட்மென்ட் கொம்பிளெக்ஸ் அமைப்பதற்கான கருத்திட்டம்	458	3,902.60	உட்கட்டமைப்பு	ஜா-எல
சிமாக்வின் றியல் எஸ்ரேர் (தனியார்) லிமிடட்	அலுவலக வளாகம் ஒன்று அமைப்பதற்கு	220	3,759.53	உட்கட்டமைப்பு	கொழும்பு 2
சிலோன் ப்ரொன்ரியர் ப்ரபட்டீஸ் (தனியார்) லிமிடட்	அலுவலக வளாகம் ஒன்று அமைப்பதற்கு	136	2,460.00	உட்கட்டமைப்பு	கொழும்பு 3
லொகிபார்க் இன்ரல் (தனியார்) லிமிடட்	குதம்	171	2,443.00	சேவைகள்	வத்தளை
எச்.என்.ஜே.ரவர்ஸ் (தனியார்) லிமிடட்	கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் ஒன்று அமைப்பதற்கு	34	2,297.57	உட்கட்டமைப்பு	கொழும்பு 3
சிலோன் பிவறேஜஸ் இன்ரல் (தனியார்) லிமிடட்	பழச்சாறும் காபன் ஏற்றப்பட்ட பானங்களும் நிரப்பப்பட்ட கான்களில் (Filled Cans)	103	2,287.50	உற்பத்தி	ஹொரண
வைல்ட் பீச் றிசோட்ஸ் (தனியார்) லிமிடட்	42 அறைகளைக் கொண்ட ஹோட்டல்	124	2,076.00	சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு	யால

■ 2019 இல் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த கருத்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் மொத்தம் 60 கருத்திட்டங்கள் (36 புதிய கருத்திட்டங்களும், 24 விரிவாக்கல் கருத்திட்டங்களும்) வர்த்தக செயற்பாட்டை ஆரம்பித்துள்ளன. புதிய கருத்திட்டங்களின் மொத்த உணரப்பட்ட முதலீடு ஐ.அ.டொ.267,28 மிலி. (ரூபா 47,784.52 மிலி.) என கணக்கிடப்பட்டதுடன், சுமார் 2,341 தொழில்வாய்ப்புகள் இந்த கருத்திட்டங்களினால் உருவாக்கப்பட்டன.

2019 இல் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த கருத்திட்டங்களின் துறைவாரியான பரம்பல்

2019 இல் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த 60 கருத்திட்டங்களில், 27 கருத்திட்டங்கள் உற்பத்தித் துறையிலும் (தைத்த ஆடைகள் உட்பட), அதனைத் தொடர்ந்து ஒன்பது கருத்திட்டங்கள் உட்கட்டமைப்பு துறை, ஒன்பது கருத்திட்டங்கள் பயன்பாடுகள் துறை, ஐந்து கருத்திட்டங்கள் சேவைகள் துறை, நான்கு கருத்திட்டங்கள் சுற்றுலா மற்றும் உல்லாசத் துறை, மூன்று கருத்திட்டங்கள் விவசாய துறை மற்றும் மூன்று கருத்திட்டங்கள் அறிவு சேவைகள் துறையிலுமாகும்.



மூலம்: இமுச

2019 இல் பிரதேச ரீதியாக வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த கருத்திட்டங்களின் பரம்பல்

2019 இல் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த கருத்திட்டங்களில் 53% ஆனவை கொழும்பு மற்றும் கம்பஹாவில் அமைந்துள்ளன. மீதியான கருத்திட்டங்கள் புவியியல் ரீதியாக ஏனைய 15 மாவட்டங்களிலும் பரந்துள்ளன.



மூலம்: இமுச

3. 2019 இல் கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள்

2019 ஆம் ஆண்டில் பதியப்பட்ட வெ.நே.மு. வெளிநாட்டு கடன்கள் தவிர்த்து ஐ.அ.டொ. 743 மிலி. உம், வெளிநாட்டு கடன் கூறு அடங்கலாக ஐ.அ.டொ. 1,189 மிலி. உம் ஆகும்.

2019 இல் துறைரீதியாக கிடைக்கப்பெற்ற வெ.நே.மு.

2019 இல் கிடைக்கப்பெற்ற மொத்த வெ.நே.மு. இல் வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தித் துறை அதிகூடிய தொகையான ஐ.அ.டொ. 455 மிலி. (38%) ஐப் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து உற்பத்தித் துறை ஐ.அ.டொ.319 மிலி. (27%) ஐயும், ஹோட்டல் துறை ஐ.அ.டொ. 154 மிலி.(13%) ஐயும், தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்புத் துறை 138 மிலி. (12%) ஐயும், துறைமுக அபிவிருத்தித் துறை ஐ.அ.டொ.47 மிலி. (4%) ஐயும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வ.செ.மூ (BPO) துறை ஐ.அ.டொ. 40 மிலி. (3%) போன்றவற்றையும் பெற்றுக்கொண்டன.



மூலம்: இமுச

வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் முக்கிய மூலங்கள் - 2019

2019 இல் சீனாவே ஐ.அ.டொ. 293 மிலி. உடன் முக்கிய மூலமாக இருந்தது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (ஐ.அ.டொ. 157 மிலி.), இந்தியா (ஐ.அ.டொ. 139 மிலி.), ஹொங்கொங் (ஐ.அ.டொ. 137 மிலி), சிங்கப்பூர் (ஐ.அ.டொ. 97 மிலி.), மலேசியா (ஐ.அ.டொ. 54 மிலி.), நெதர்லாந்து (ஐ.அ.டொ. 43 மிலி.), ஐ.அ.எ (ஐ.அ.டொ. 41 மிலி.), அவுஸ்திரேலியா (ஐ.அ.டொ. 33 மிலி.), ஜப்பான் (ஐ.அ.டொ.32 மிலி.), லக்ஸம் - பேர்க் (ஐ.அடொ. 29 மிலி.), பிரான்ஸ் (ஐ.அ.டொ.28 மிலி.), ஐக்கிய நாடுகள் (ஐ.அ.டொ. 26 மிலி.), சுவீடன் (ஐ.அ.டொ. 23 மிலி.), இத்தாலி (ஐ.அ.டொ. 13 மிலி.), என்பன உள்ளன. 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த வெ.நே.மு.ல் 96% இந்த 15 நாடுகளும் சேர்ந்ததென கணக்கிடப்பட்டது.



மூலம்: இமுச

4. தேறிய முதலீடு - (திரண்ட)



மூலம்: இமுச

2019 ஆம் ஆண்டு முடிவில் இருந்தவாறு திரண்ட தேறிய மொத்த முதலீடு ரூபா 3,752 பிலியனாக இருந்தது, இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% அதிகரிப்பைக் காட்டியது. ரூபா 3,752 பிலியனில் 61% (ரூபா 2,282 பிலி. வெளிநாட்டு கூறுகளைக் குறிக்கிறது. மீதி 39% (ரூபா 1,470 பிலி.) உள்ளூர் தனியார் முதலீடுகளைக் குறிக்கிறது.

உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் துறை மொத்த தேறிய திரண்ட முதலீட்டின் 75% ஆகக் கணக்கிடப்பட்டுள்ளதுடன், மீதி 25% தைத்த ஆடைகள் உட்பட உற்பத்தி துறையிலிருந்தாகும்.

5. தொழில்வாய்ப்பு - (திரண்ட)



மூலம்: இமுச

2019 டிஸம்பரில் உள்ளவாறு இ.மு.ச.வின் கருத்திட்டங்களின் திரண்ட வேலைவாய்ப்பு 521,438 ஆக பதிவாகியுள்ளது.

இ.மு.ச.வின் கருத்திட்டங்களின் மொத்த திரண்ட வேலைவாய்ப்பின் 60% புடவை, ஆடை மற்றும் தோல் துறையிலிருந்தும், 19% ஆனவை ஏனைய உற்பத்தித் துறையிலிருந்துமாகும். விவசாயம் அடங்கலான சேவைகளும் மற்றும் உட்கட்டமைப்பு துறை 2019 இல் மொத்த திரண்ட வேலைவாய்ப்பில் 21% ஐப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

6. ஏற்றுமதி செயலாற்றுகை

2019 இல் இ.மு.ச. வின் தொழில்முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி ஐ.அ.டொ.8,811 மிலி. ஆகும். இது தேசிய ஏற்றுமதியின் 68% ஐயும், தேசிய கைத்தொழில் ஏற்றுமதியின் 86% ஐயும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.



மூலம்: இமுச



மூலம்: இமுச

2019 ஆம் ஆண்டில் இ.மு.ச.வின் மொத்த ஏற்றுமதிகளில் ஆடைகள் துறை ஏற்றுமதியின் அதி கூடிய வீதத்தை (64%) பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், அதனைத் தொடர்ந்து உற்பத்தித் துறை (ஆடை தவிர்ந்த) 28% ஆகும். சேவைகள் மற்றும் விவசாயத் துறைகள் 8% ஐப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளன.

பிரிவுகளின் செயலாற்றுகை

1. முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவு

இ.மு.ச. வின் கூட்டாண்மைத் திட்டத்தினால் அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் (வெ.நே.மு.) கவருவதே முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவின் பிரதானமான பணியாகும். முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவு தற்போதுள்ள முதலீட்டாளர்களின் முன்னேற்றத்தை அறிந்துகொள்வதுடன், அவர்களின் கூடுதல் முதலீடுகளின் அடிப்படையில் விரிவாக்கங்களை எளிதாக்குவதற்கும் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துகிறது.

பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- சந்தைகளை இலக்கு வைப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு பணிகளை ஏற்பாடு செய்தல்:

  இந்தப் பணிகள் பிற அரச நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கூட்டங்கள் போன்றனவாக இருக்கலாம் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட வருங்கால முதலீட்டாளர்களுடன் இலக்குடனான பணியுடன் நேருக்கு நேர் சந்திப்பது என்ற கவனத்துடன், இலங்கையில் முதலீடு செய்வது என்ற அடிப்படையில் ஒரு பேரவை அல்லது கருத்தரங்கு போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தலைப்பு நிகழ்வுகளால் பூர்த்தி செய்யப்படுகிறது.

  ஒரு பணி பொதுவாக வர்த்தக சம்மேளனங்கள், எதிர் நிறுவனங்கள், தொழில் கூட்டுகளுடன் துறை சார்ந்த குறிப்பிட்ட கலந்துரையாடலை உள்ளடக்கியதாகவும், ஏற்கெனவே உள்ள முதலீட்டு கம்பனிகளுடன் கூட்டங்களை நடத்தியும் இலங்கையில் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு / விழிப்புணர்வை அதிகரிப்பதற்குமான ஒட்டுமொத்த நோக்கத்துடன் இலங்கையில் உள்ள வியாபார மற்றும் முதலீட்டு காலநிலை பற்றி இற்றைப் படுத்தி வழங்குவதாகவும் இருக்கும்.

- அடையாளம் காணப்பட்ட உந்துதல் துறைகளில் கவனம் செலுத்தி நிகழ்வுகளில் பங்கேற்றல்:

  இலங்கையில் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை உருவாக்குவது / விழிப்புணர்வை அதிகரிப்பது என்ற ஒட்டுமொத்தமான நோக்கத்துடன் சர்வதேச பேரவைகள், மகாநாடுகள் மற்றும் கண்காட்சிகளில் இ.மு.ச. வைப் பிரதிநிதித்துவப்படுத்துதல். அத்தகைய பங்குபற்றல்கள் பொதுவாக கவனம் செலுத்தப்படும் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரச முகவர்கள் மற்றும் கைத்தொழில் / துறைசார்ந்த நிறுவனங்களின் ஒத்துழைப்புடனாகும்.

- இலங்கையின் முதலீட்டுத் திறன் பற்றி நேரடியான அனுபவத்தை வழங்குவதுடன், உள்ளூர் முதலீட்டு காலநிலை பற்றி ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ளச் செய்வதுடன், இலங்கைக்கு வருகின்ற முதலீட்டாளர் பிரதிநிதிகளுக்கு வசதி வழங்குவதுமாகும். உதவி மற்றும் வசதி வழங்குதல் என்பது விசாவிற்கான பரிந்துரைகள், பங்குதாரர்களின் கூட்டங்களை நடத்துதல், தளங்களுக்கான விஜயம், ஏனைய கள சுற்றுலாக்கள் என்பன அடங்கலாகும்.

- இலங்கையில் காணப்படுகின்ற வியாபார மற்றும் முதலீட்டு காலநிலை பற்றி ஆராய்வதற்காக இலங்கைக்கு வர்த்தக பிரதிநிதிகள் வருவதற்கான ஒழுங்குகள் செய்தல். அத்தகைய வருகைகள் பொதுவாக வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களினதும், வருகை தரும் நாட்டிலுள்ள வர்த்தக / வியாபார சம்மேளனங்களின் உதவியுடன் ஒழுங்குபடுத்தப்படும். உதவி மற்றும் வசதி என்பது விசாவுக்கான பரிந்துரை, பங்குதாரர்களின் கூட்டத்தைக் கூட்டுதல், தளங்களுக்கு விஜயம் செய்தல், மற்றும் ஏனைய கள சுற்றுலாக்கள் என்பன உள்ளடக்கியதாகும்.

- உள்ள முதலீட்டாளர்களுடன் வருகின்ற முதலீட்டாளர் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து, நடைபெற்றுக்கொண்டிருக்கும் வியாபாரம் சம்பந்தமான மற்றும் எதிர்கால வர்த்தக சம்பந்தமான திட்டங்களிலுள்ள சிக்கல்களைத் தீர்த்தல். கலந்துகொள்ளும் கௌரவ அமைச்சருடன் இமுச தலைவர் தலைமை தாங்கும் கூட்டங்களில் பொதுவாக மல்ரிபிள் கோஎஸ் எல் (Multiple GoSL) பங்குதாரர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

பொதுவான ஊக்குவிப்பு செயற்பாடுகள்

துறை/நாட்டின் பொறுப்பான அதிகாரிகள் ஊடாக அடையாளம் காணப்பட்ட நாடுகளில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இந்த நடவடிக்கைகள் கவனம் செலுத்துகின்றன. இமுச வின் உள்ளகத் துறைகள், வெளி நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் என்பவற்றுடன், கூட்டாளி நிறுவனங்கள், சம்மேளனங்கள் மற்றும் ஏனைய கைத்தொழில் கூட்டுக்கள் ஊக்குவிப்புப் பிரிவிற்கு அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குகின்றன. வெளிநாட்டு சந்தைகளிலிருந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கு இலக்குவைத்த துறைகளை அடையாளம் காணுதல் மற்றும் அத்தகைய சந்தைகளில் இலக்குவைத்த கம்பனிகளை அடையாளம் காணுதல் என்பனவற்றிற்கு இமுச இன் ஆய்வுப் பிரிவு ஆதரவு அளிக்கின்றது.

இந்தப் பொதுவான நடவடிக்கைகள், அந்தந்த வர்த்தக சம்மேளனங்கள், வர்த்தக சபைகள், வங்கிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான பொருத்தமான நிறுவனங்களுடன் தொடர்புகளையும், வலையமைப்புகளையும் கட்டியெழுப்புதல், இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களுடன் ஒருங்கிணைப்பு, கைத்தொழில் சங்கங்கள், இசுஅஅ (SLTDA), ஏஅச (EDB) மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை போன்ற அரச நிரல் முகவர்கள்/அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்துதல் என்பன அடங்கலாகும். அவ்வாறான நடவடிக்கைகள் மீள் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு வெளிநாடுகளில்/நாட்டில் வசிக்கின்ற மற்றும் தொழில்பார்க்கும் ஆர்வமுள்ள அந்தந்த குழுக்களுடன் ஒருங்கிணைந்து, தற்போதுள்ள இமுச கம்பனிகளுடன் வலையமைப்பை ஏற்படுத்துவதுமாகும்.

இலங்கையில் முதலீட்டு பேரவைகள்/கருத்தரங்குகள் மற்றம் கண்காட்சிகள்

பொருத்தமான சம்மேளனங்கள் மற்றும் எதிர் நிறுவனங்களுடன் இணைந்து வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பங்கேற்பவர்கள் இருசாராரிற்கும் உள்ளூர் முதலீட்டு பேரவைகளை ஒழுங்குசெய்து, பங்குபற்றுதல். இதில் தொடர்புடைய முதலீட்டு வாய்ப்புகள் மீதான தகவல்களைப் பரப்புவதற்கு வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றுவதுடன், ஆதரவளித்தலும் அடங்கலாகும்.

உள்ளூர் மாநாடுகள்

இலங்கையில் முதலீட்டு காலநிலை மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உள்ளூர் மாநாடுகளில் பிரதிநிதித்துவப்படுத்தி, வெளிநாட்டு பங்கேற்பவர்களுடன் செயல்ரீதியாகப் பங்கேற்பதுடன், வலையமைப்பை ஏற்படுத்துதல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

வெளிப்புறப் பணிகள்
இந்தியா : 12 - 13 ஜனவரி
த கொன்பெடரேஷன் ஒப் இந்தியன் இண்டஸ்ற்றி (CII), அதன் வருடாந்த முதன்மை சர்வதேச நிகழ்வின் 25 வது ஆண்டுவிழா பதிப்பான CII கூட்டு உச்சி மாநாட்டை தொழில்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை, வர்த்தக மற்றம் கைத்தொழில் அமைச்சு, இந்திய அரசு மற்றும் மஹாராஷ்டிர மாநில அரசு என்பவற்றுடன் இணைந்து ஒழுங்குசெய்தது. அந்த நிகழ்வின்போது இமுச, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இந்தோ லங்கா வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் அழைப்பின்பேரில் "தெற்காசியாவில் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவித்தல்" என்ற தலைப்பில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி சமர்ப்பித்தது.
கொரியா: 19 - 22 பெப்ரவரி
இந்தப் பணி வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து, அதன் பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சி ஊடாக ஒழுங்குசெய்யப்பட்டது. கொரியன் சேம்பர் ஒப் கொமெர்ஸ் அன்ட் இன்டஸ்ற்றி (KCCI) மற்றும் கொரிய ட்ரேட்-இன்வெஸ்ற்மென்ற் ப்ரமோஷன் ஏஜென்ஸி (KOTRA) என்பன ஆதரவு வழங்கிய நிறுவனங்களாகும். KCCI கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற முதலீட்டாளர் கருத்தரங்கு தலைப்பு நிகழ்வாக இருந்தது.
சீனா: 10 - 14 ஜூன்
கொழும்பிலுள்ள யுனான் கொமர்ஷியல் நெட்வர்க்கிங் ஒபிஸின் அழைப்பின்பேரில் இமுச குன்மிங்கில் 2வது சைனா-சௌத் ஏசியா கோப்பரேஷன் பேரவையில் பங்குபற்றியது. சைனா-சௌத் ஏசியா பிஸினஸ் பேரவையில் இமுச இலங்கையில் முதலீடு செய்வது மற்றும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்படும் துறைகள் பற்றி சமர்ப்பித்திருந்தது. இது ஏனைய நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த பிரதிநிதிகளிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்றது.

துபாய்: 7 - 11 ஜூலை

துபாயில் இடம்பெற்ற எக்ஸ்போ 2020 இல் இலங்கை பங்குபற்றுவதை முறைப்படுத்துவதே இந்தப் பணியின் பிரதான நோக்கமாகும். சார்ஜா சேம்பர் ஒப் கொமெர்ஸ் அன்ட் இன்டஸ்ற்றி இனால் அவர்களின் சம்மேளன வளாகத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட வர்த்தக பேரவையில் இலங்கைப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து துபாயில் இலங்கைத் தூதரகத்தினால் ஸ்ரீலங்கா பிஸினஸ் கவுன்ஸில் (SLBC), இலங்கை பட்டயக் கணக்காளர் சங்கம் - யுஏஈ (UAE) பிரிவு (CA-SL), இலங்கை தொழில்துறைசார் சங்கம் (SLPA) ஆகியவற்றுடன் ஒழுங்குசெய்யப்பட்ட வலையமைப்பு கூட்டம் இடம்பெற்றது.

இந்தியா: 8 - 9 ஆகஸ்டு

அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக கௌரவ அமைச்சரின் (MODSIT) குஜராத்திற்கான உத்தியோகபூர்வ விஜயத்தையொட்டி இந்தியா, அஹமதாபாத்தில் இலங்கை வியாபார மற்றும் முதலீட்டு பேரவை நடாத்தப்பட்டது. இந்தப் பேரவை புது தில்லியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம், மற்றும் மும்பாயிலுள்ள இலங்கை பிரதிநிதி அலுவலகம் என்பவற்றுடன் குஜராத் நெருக்கமாக இணைந்து குஜராத் சேம்பர் ஒப் கொமெர்ஸ் அன்ட் இன்டஸ்ற்றி (GCCI) இனால் ஒழுங்குசெய்யப்பட்டது..

சிங்கப்பூர்: 21 - 23 ஆகஸ்டு

இந்தப் பணி இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஸ்ரீலங்கா-சிங்கப்பூர் வியாபார கவுன்ஸிலுடன் சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராயலத்தின் உதவியுடன், கூட்டாக மேற்கொள்ளப்பட்டது. பணியின் சிறப்பம்சங்கள் சிங்கப்பூர் பிஸினஸ் பெடரேஷன் (SBF) இல் ஒரு முதலீட்டு பேரவையும். ஒரு கருத்தரங்கும், அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர்-இந்தியன் சேம்பர் ஒப் கொமெர்ஸ் அன்ட் இன்டஸ்ற்றி (SICCI) இல் ஒரு வலையமைப்பு அமர்வும், சிங்கப்பூர்-சைனிஸ் சேம்பர் ஒப் கொமெர்ஸ் அன்ட் இன்டஸ்ற்றி (SCCCI) உடன் ஒரு கூட்டமும் உள்ளடக்கியதாகும்.

சீனா: 26 - 30 ஆகஸ்டு

இந்தப் பணி, இலங்கையில் முதலீட்டு வாய்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பேய்ஜிங்கிலுள்ள அவர்களின் கூட்டாண்மை வாடிக்கையாளர்களை இலக்குவைத்து சிற்றி பாங்க் ஸ்ரீலங்காவுடன் இணைந்ததாகும். சீன வர்த்தக சம்மேளனத்தின் ஆதரவுடன் இயந்திரம் மற்றும் மின்னணுவியல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பதற்கான ஒரு பேரவையே தலைப்பு நிகழ்வாக இருந்ததுடன், அதனைத் தொடர்ந்து ஆட்டோ உதிரிப்பாகங்கள், மின்சார மற்றும் மின்னணுவியல் உபகரணங்கள் துறையிலிருந்தான சாத்தியமான முதலீட்டாளர்களுடன் நேருக்கு நேர் சந்திப்பும் இடம்பெற்றது.

தாய்லாந்து : 2 - 6 செப்டம்பர்

தாய்லாந்து, பாங்கொக்கிலுள்ள இலங்கை தூதரகம் இமுச உடன் நெருக்கமாக இணைந்து, முன் அடையாளம் காணப்பட்ட முதலீட்டு துறைகளை இலக்கு வைப்பதற்கு ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்தது. இமுச அதிகாரிகள் இலக்கு கம்பனிகளுடனும், தொழில்துறை கூட்டுக்களுடனும் பல நேருக்கு நேர் சந்திப்புகளை ஒழுங்குசெய்வதற்கு இலங்கை தூதரகத்துடன் நெருக்கமாகச் செயல்பட்டனர்.

ஜப்பான் 9 - 13 செப்டம்பர்

அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு இமுச இன் முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவு ஜப்பானுக்கு முன்னைய வருகைகளின்போது உருவாக்கப்பட்ட தடங்களைப் பின்பற்றும் அதேவேளை, ஜப்பானின் வியாபார சமூகத்துடன் தொடர்ந்து ஈடுபடுவதற்கு ஒரு முதலீட்டு ஊக்குவிப்புப் பணியை ஒழுங்குசெய்தது. ரோக்யோவில் JETRO வினால் நடத்தப்பட்ட முதலீட்டு கருத்தரங்கே இந்த பணியின் சிறப்பம்சமாகும்.

ஐக்கிய இராச்சியம் : 9 - 10 அக்டோபர்

லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் ஆதரவுடன், லண்டன் ஸ்ரொக் எக்ஸ்சேன்ஜ் (LSE) இல் இலங்கை முதலீட்டு பேரவை ஒன்றை இந்த பணியின் தலைப்பு நிகழ்வாக இமுச ஒழுங்குசெய்தது. இமுச இந்த நிகழ்வை ஒழுங்கமைப்பதற்கு ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம், லண்டன் ஸ்ரொக் எக்ஸ்சேன்ஜ் (LSE), இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம், மற்றும் பிரித்தானியாவுடனான கவுன்ஸில் போ பிஸினஸ் என்பவற்றுடன் நெருங்கி செயற்பட்டதுடன், இந்த நிகழ்வைத் தொடர்ந்து நேரடி சந்திப்புகள், ஒரு வலையமைப்பு அமர்வு என்பனவும், மறுநாள் மன்செஸ்ரர் சேம்பர் ஒப் கொமர்ஸில் த.தொ. (IT) துறையில் ஒரு வட்டமேசை உரையாடலும் இடம்பெற்றது.

உட்புறப் பணிகள்
சீனா
■ அசோசியேஷன் போ இன்ர்நஷனல் எக்கனோமிக் கோப்பரேஷனிலிருந்து பிரதிநிதிகள் - பெப்ரவரி
■ ப்ரமோஷன் ஒப் இன்ர்நஷனல் ட்ரேட் சங்காய் ப்ரொவின்ஷல் கொமிற்றிக்கு சைனா கவுன்ஸிலிலிருந்து பிரதிநிதிகள் - மே
■ ப்ரமோஷன் ஒப் இன்ர்நஷனல் ட்ரேட் ஜிலின் ப்ரொவின்ஷல் கொமிற்றிக்கு சைனா கவுன்ஸிலிலிருந்து பிரதிநிதிகள் - ஆகஸ்டு
■ செங்குடு அசோசியேஷன் போ பொறின் ட்ரேட் அண்ட் எக்கனோமிக் கோப்பரேஷனிலிருந்து பிரதிநிதிகள் (CAFTEC) - செப்டம்பர்
■ ப்ரமோஷன் ஒப் இன்ர்நஷனல் ட்ரேட் ஸியாமென் ப்ரொவின்ஷல் கொமிற்றிக்கு சைனா கவுன்ஸிலிலிருந்து பிரதிநிதிகள் - செப்டம்பர்
கொரியா
■ கொரியா அக்ரிகல்ஷரல் மெஷினரி இன்டஸ்ற்ரி கோப்பரேற்றிவ் (KAMICO) - இலிருந்து பிரதிநிதிகள் - மே
ஜப்பான்
■ சொஜிற்ஸிலிருந்து பிரதிநிதிகள் - பெப்ரவரி
ஐ.இ.
■ ஐ.இ. இலிருந்து ட்ரேட் அண்ட் இனவேஷன் டிப்பாட்மென்ற் ஒப் இன்ர்நஷனல் ட்ரேட் (DIT) சவுத் ஏசியாவிலிருந்து பிரதிநிதிகள் - ஜுலை
ஐ.ஒ.
■ ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரதிநிதிகள் GSP + கண்காணிப்பு பணி – ஆகஸ்டு
இந்தியா
■ சதேன் குஜாரத் சேம்பர் ஒப் கொமர்ஸ் அண்ட் இன்டஸ்றியிலிருந்து பிரதிநிதிகள் - செப்டம்பர்

முதலீட்டு ஊக்குவிப்பு ப் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட உள்ளூர் நிகழ்வுகள்

1. ஜப்பான் / இலங்கை அரச தனியார் கூட்டு பேரவை, அக்டோபர் 2019

தற்போதுள்ள முதலீட்டாளர்களும், இமுச அல்லாத கம்பனிகளும் தங்களுடைய வியாபாரம் மற்றும் கைத்தொழில் முகம்கொடுக்கும் பிரச்சனைகளைத் தெரிவிக்க, இமுச அவற்றில் தலையிட்டு வசதிகள் செய்வதன் மூலம் அவற்றைத் தீர்த்துவைத்தல்.

2. ஐ.ஒ. - இலங்கை முதலீட்டாளர் உரையாடல் - மார்ச், அக்டோபர் 2019

ஐரோப்பிய ஒன்றிய தோற்றம் கொண்ட கம்பனிகள் தங்களுடைய வியாபாரம் மற்றும் கைத்தொழில் முகம்கொடுக்கும் பிரச்சனைகளைத் தெரிவிக்க, இமுச வசதி வழங்குவதன் மூலம் அவற்றில் தலையிட்டு தீர்த்துவைத்தல்

2. முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை விரைவில் அடைவதற்கான தேவையை அங்கீகரித்ததுடன், அந்தக் குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு இமுச இன் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு, குறைந்தபட்ச காலஅளவுக்குள் முதலீடுகளுக்கு வசதியளித்து, பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகள் மூலம் அந்நிய செலவாணியை மேம்படுத்துதல், தொழில்வாய்ப்பை ஏற்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப திறன்களை உயர்த்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல், தொழில்நுட்பங்களின் பரிமாற்றம் என்பனவற்றிற்காக ஊக்குவித்தல், கவருதல், மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு (FDI) வசதி வழங்குதல் ஆகிய பொறுப்புக்கள் இந்தப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

வசதி வழங்குதல் செயல்முறையானது நாட்டின் வியாபார தரவரிசை செய்தலை உயர்த்துவதிலும், வியாபாரங்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு முதலீட்டு நம்பிக்கையை ஏற்படுத்துவதிலும் பெரும் பங்காற்றுகிறது.

அரசாங்கத்தின் தற்போதைய கொள்கையின்படியும், விரைவாக மாறும் உலகளாவிய சூழலை எதிர்கொள்வதற்கும் வெவ்வேறு முன்னுரிமை துறைகளை அடையாளம் காணும்வகையில் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் ஏற்றுக்கொண்ட நிலையிலிருந்து கருத்திட்டங்கள் இலங்கையில் உள்ளவரை தொடர்ந்து எளிதாக்கும் நடவடிக்கையே முதலீட்டுப் பிரிவின் பாகமாகும்.

முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு இமுச இன் இதயமாக இருப்பதுடன், நிறுவனத்திற்கும், நாட்டிற்கும் அதன் முக்கியத்துவத்தை அறிந்திருப்பதால் மற்றைய உள்ளக பிரிவுகளின் உதவியுடன் மகத்தான பங்களிக்கிறது.

இமுச இன் நோக்கங்களையும், அரசின் பொருளாதார இலக்குகளை அடைவதற்கும், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், கருத்திட்ட பிரேரணைகளை மதிப்பீடு செய்தல், இமுச இன் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் என்பன முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பாகும்.

கருத்திட்டங்கள் இமுச இன் சட்ட பிரிவு 17 இன் விதிகளின் கீழும், நாட்டின் தற்போதைய சட்டங்களின் கீழுள்ள மற்றைய விதிகளின் கீழும் அங்கீகரிக்கப்பட்டன.

தற்போதுள்ள 2500 எண்ணிக்கைக்கும் (பிரிவு 17 - 1926 மற்றும் பிரிவு 16 - 623) மேற்பட்ட கருத்திட்டங்களுக்கு தொடர்ந்து வசதிகளை வழங்கும் அதேவேளை வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் உள்ளூர் புதிய முதலீடு இரண்டையும் கவர்வதற்கு இப்பிரிவு குறிப்பிட்டளவு பங்காற்றியுள்ளது. கைத்தொழில் ஏற்றுமதி வீதத்தை 80% இற்கும் கூடுதலாக மேம்படுத்துவதற்கு இமுச இன் கீழ் தொழிற்படும் தற்போதுள்ள கம்பனிகளுக்கு வசதியளிப்பதில் இப் பிரிவு பங்களித்து வருகிறது. சராசரி 500,000 நேரடி வேலை வாய்ப்பை உருவாக்கி, நாட்டின் வேலையில்லா விகிதத்தைக் குறைப்பதற்கு இப் பிரிவின் வசதி வழங்கும் செயற்பாடு அதிகளவு பங்களித்துள்ளது.

1992 இல் அரசாங்கத்தின் கொள்கையின் பல்வகைப்படுத்தலுடன் இமுச ஏற்றுமதி சார்ந்த கருத்திட்டங்களுக்கு வசதி வழங்குவதற்கு மேலாக, உட்கட்டமைப்பு, சுற்றுலா, கல்வி போன்ற துறைகள் அடங்கலாக உள்நாட்டு சந்தை சார்ந்த துறைகளை மேம்படுத்துவதற்கும், வசதிகள் வழங்குவதற்கும், சலுகைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆரம்பத்திலிருந்து முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு, இப் பிரிவின் மனித மூலதனத்தின் அறிவையும், பெற்றுக்கொண்ட நடைமுறை அனுபவத்தையும் பயன்படுத்தி. முதலீட்டு பகுதிகளை அடையாளம் காண்பதிலும், கைத்தொழில் கொள்கைகளை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றிவருகிறது.

இப்பிரிவு பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையிலும், தலைமைத்துவத்தின் கீழும் தொழிற்படுகிறது.

நாட்டின் தற்போதைய கொள்கையின்படி இமுச மற்றும் நாட்டினதும் நோக்கங்களை அடைவதற்கு பின்வரும் துறைகள் அடையாளம் காணப்பட்டு, அவை ஊக்கப்படுத்தவேண்டுமென இப்பிரிவு கட்டமைக்கப்பட்டுள்ளது.

அறிவு சேவைகள்	- த.தொ./வி.செ.அ.(BPO)/அ.செ.அ.(KPO)/ உயர் கல்வி/தொழில் பயிற்சி/ஆ. & அ.
சேவைகள்	- மையம்/சேவைகள் ஏற்றுமதி/வர்த்தக நிலையங்கள்(ஆடைகள் தவிர்ந்தவை)/ தளவாடம் மற்றும் பண்டகசாலை/பிராந்திய செயற்பாட்டு தலைமையகம்
உற்பத்தி	- ஆடைகள் தவிர்ந்த சகல உற்பத்தி கருத்திட்டங்களும்.
ஆடைகள்	- ஆடைகள் மற்றும் புடவை, ஆடைகள் தொடர்பான வர்த்தக நிலையங்கள் உட்பட
உட்கட்டமைப்பு	- குடியிருப்புகள்/வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி/கலப்பு அபிவிருத்தி (ஹோட்டல் + சேவை குடியிருப்பு + ஏனைய சேவைகள்)/கடைத் தொகுதிகள்/ வைத்தியசாலைகள்/வீதிஅபிவிருத்தி/விமான நிலையங்கள் / துறைமுகங்கள் / கைத்தொழில் வலயங்கள்.
சுற்றுலாத் துறையும் பொழுதுபோக்கும்	- ஹோட்டல்கள்/விடுதிகள்/நீர் பூங்காக்கள்/பொழுதுபோக்கு பூங்காக்கள்/சாகச சுற்றுலாத்துறை/விமான சேவை/கலப்பு அபிவிருத்தி (ஹோட்டல் + சேவை குடியிருப்பு)
பயன்பாடுகள்	- தொலைத்தொடர்பு/சக்தி மற்றும் எரிசக்தி/கழிவு முகாமைத்துவம்/வெகுசன தொடர்பாடல்/நீர் முகாமைத்துவம்
விவசாயம்	- விவசாய பதனிடல்/பால்உற்பத்தி/சாகுபடி/கால்நடை/நன்னீர் மீன்பிடி/ஆழ்கடல்/மீன்பிடி/மீன் பதனிடல்

முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவின் செயல்பாடுகள்

- இலங்கையின் மத்திய வங்கியின் அந்நிய செலாவணி பிரிவினால் வெளியிடப்பட்ட இமுச இன் கொள்கைள் மற்றும் ஒழுங்குமுறைகள் என்ற முதலீட்டு கொள்கை ஆவணம் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைக்கும் அமைவாக முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்.
- முதலீட்டு முன்மொழிவுகளை அங்கீகரித்து, அமுல்படுத்துவதற்கு வசதி வழங்கி குறிப்பிட்ட செயற்பாடு, கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையின் அடிப்படையில் கொள்கைகளை வகுத்தல்.
- பணிப்பாளர் சபை/தலைவர்/பணிப்பாளர் நாயகம் என்போரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்டங்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- இமுச சட்டத்தின் அட்டவணை (B) இல் காட்டப்பட்டுள்ளபடி சுங்கத் தீர்வையும் ஏனைய விலக்குகளையும் வழங்கி கருத்திட்டங்களுக்கு வசதி வழங்குதல்.
- வியாபார நோக்கத்தின் மாற்றத்திற்கு அங்கீகாரம் வழங்குதல்.
- அமைவிடம், உற்பத்திப்பொருள், நடவடிக்கை போன்றவற்றின் அடிப்படையில் விரிவாக்கத்திற்கான அங்கீகாரம் வழங்குதல்.
- செயற்பாட்டு பிரச்சனைகளான சுங்க விசாரணைகள், கைத்தொழிலுடன் சம்பந்தமான பிரச்சனைகள் போன்றவற்றைத் தீர்த்தல் மற்றும் தலையிடுதல்.
- வெ.நே.மு. எதிர்வுகூறல்களைத் தயாரித்தல்.
- வெளிநாட்டவர்களுக்கு (முதலீட்டாளர்கள் மற்றும் ஊழியர்கள்) விசாக்களுக்கு பரிந்துரை செய்தல்.
- முதலீடு சம்பந்தமான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு முதலீட்டாளர் பேரவைகளில் பங்குபற்றி உரையாற்றல்.

- நிதி அமைச்சு மற்றும் நிரல் நிறுவனங்களுடன் கொள்கைகளை வகுக்கும் குழுவில் பங்குபற்றுதல்.
- முகாமைத்துவத்தின் அறிவுறுத்தலின்படி அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரித்து, கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்கு அனுப்புதல்.
- நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை தேயிலை சபை, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம், இலங்கை சுங்கத் திணைக்களம், பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு, வன திணைக்களம், போன்ற கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் முன்னரும், பின்னரும் சகல நிரல் முகவர் நிறுவனங்கள் மற்றும் நிரல் அமைச்சுக்களுடன் தொடர்புகொண்டு, ஒருங்கமைத்தல்.
- சட்டத்தை அமுல்படுத்தும் அதிகார நிறுவனங்கள், இலங்கை சுங்கம் மற்றும் ஏனைய அரச முகவர்கள் நிறுவனங்கள் போன்றவர்கள் உட்பட பல்வேறு அரச முகவர் நிறுவனங்களின் விசாரணைகளைக் கவனித்து, பதிலளித்தல்.
- கருத்திட்ட விபரங்களுடன் மு.த.மு. (MIS) ஐ இற்றைப்படுத்தல்.

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

புதிய கருத்திட்டங்கள்

	கருத் திட்டங்களின் எண்ணிக்கை	உத்தேசிக்கப்பட்ட முதலீடு		வேலைவாய்ப்பு (எண்ணிக்கை)
		வெளி நாடு (ரூபா மிலி.)	உள்ளூர் (ரூபா மிலி.)	
கிடைக்கப்பெற்ற புதிய கருத்திட்ட முன்மொழிவுகள்	70	55,487	108,389	15,860
ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்டங்கள்	59	4,535,801	87,757	21,587
கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள்	46	706,700	60,631	8,872

விரிவாக்கங்கள்

	கருத் திட்டங்களின் எண்ணிக்கை	உத்தேசிக்கப்பட்ட முதலீடு		வேலைவாய்ப்பு (எண்ணிக்கை)
		வெளி நாடு (ரூபா மிலி.)	உள்ளூர் (ரூபா மிலி.)	
கிடைக்கப்பெற்ற புதிய விரிவாக்கல் முன்மொழிவுகள்	88	37,372	41,614	15,574
ஒப்புதல் வழங்கப்பட்ட விரிவாக்கங்கள் (முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் அடங்கலாக)	83	46,600	57,090	16,273
கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள்	56	39,929	59,017	14,027

3. ஆய்வு மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவு

பிரிவின் செயல்பாடுகளும். கடமைகளும்

ஆய்வு மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவிற்கு (ஆ மற்றும் கொ ஆ) இமுச இன் நோக்கமான வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவருவதற்குப் பங்களிக்கக்கூடிய அத்தியாவசிய கொள்கைத் திருத்தங்களுடன், வர்த்தகம் மற்றும் முதலீடு சம்பந்தமான தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. கைத்தொழில், விவசாயம், மற்றும் சேவைகள் துறைகளில் தேசிய முதலீட்டு ஊக்குவிப்பு கொள்கையை செயல்படுத்தி, ஆதரிப்பதற்கு குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதற்கான பொறுப்பு இதனுடையதாகும். தேவையான கொள்கை, ஒழுங்குமுறை மற்றும் சட்ட மாற்றங்களை ஏற்றுக்கொள்வது, நிலையான சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பின் மூலம் முதலீட்டாளர்களை வழிநடத்தி, உதவி, இமுச இன் ஆற்றலில் விளைவை ஏற்படுத்துவதுடன், செயலாற்றுகையையும் அதிகரிக்கச்செய்கிறது.

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- முதலீட்டு விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டு செயல்முறையை ஒழுங்குபடுத்தி, எளிதாக்கவேண்டிய தேவையை அடையாளம் கண்டு, இந்தப் பிரிவு முதலீட்டு மதிப்பீட்டிற்குப் பொருத்தமான சகல சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அடங்கலான துறை குறித்த வழிகாட்டுதல் ஆவணங்களுடன், முதலீடு சம்பந்தமான கொள்கை கையேட்டைத் தயாரித்து, சட்ட ஒழுங்கை முறைப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து முதலீட்டு விண்ணப்பம், தள விண்ணப்பம் மற்றும் நிகழ்நிலை (Online) முதலீட்டு விண்ணப்பத்திற்கான சரிபார்க்கும் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டன.
- 2019 ஆம் ஆண்டுக்கான முதலீட்டு வழிகாட்டுதல்கள் 2020 ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்ட ஊக்கத்தொகை திட்டத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டது.
- ஏற்கெனவே உள்ள ஒழுங்குமுறை மற்றும் ஊக்கத்தொகையை ஆராய்ந்த பின்னர், பெரிய அளவிலான கம்பனிகள் மற்றும் த.தொ.துறை கம்பனிகளுக்கும் இந்த முதலீட்டு ஊக்குவிப்புத் தொகை கிடைக்கக்கூடியதாக ஒழுங்குபடுத்தும்படி இந்தப் பிரிவினால் நிதி அமைச்சிற்கு முன்மொழியப்பட்டது.
- இமுச இன் வரலாற்றில் இது போன்று முதல் தடவையாக ஆ.மற்றும் கொ.ஆ. பிரிவு, வலய கண்காணிப்பு கணக்கெடுப்பு ஒன்றை ஆரம்பித்தது. இதன்போது கஏசெவ (KEPZ) கம்பனிகள் அவற்றின் ஒட்டுமொத்த செயலாற்றுகை, நில பயன்பாடு, பராமரிப்பு அனைத்தையும் உள்ளடக்கிய கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்டன. இது மற்றைய பிரிவுகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.
- த.தொ. துறையில் ஒரு நாட்டின் ஒப்பீடு உட்பட, பல்வேறு பிராந்திய ஒப்பீடுகளும், ஆய்வும் மேற்கொள்ளப்பட்டன; கப்பல் மற்றம் படகு கட்டடத்திற்கு வழங்கப்படும் முதலீட்டு சலுகைகள்; மற்றும் சமாந்திரமான பிராந்திய போட்டியாளர்களுடன் ஒப்பிட்டு சுற்றுலாத் துறை பற்றிய ஆய்வுமாகும்.
- EUGSP+ அதன் அனுகூலங்கள்; கல்வி த.தொ.துறை; சுற்றுலாத்துறை; இலங்கையில் முதலீடு செய்வதற்கான 10 காரணங்கள், ஐ.இ. முதலீட்டாளர்களுக்கான சிற்றேடுகள் என பல்வேறு துறைகளில் சிற்றேடுகள் தயாரிக்கப்பட்டதுடன்; "இலங்கையில் ஏன் முதலீடு செய்யவேண்டும்" என்ற விளம்பர சிறு நூலும் 2019 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.
- வியட்னாம், ஆஸ்றியா, துருக்கி, ஜோர்தான், சிங்கப்பூர், கனடா, பாறென், பாகிஸ்தான், வெனுஸேலா, நெதர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கான இற்றைப்படுத்தப்பட்ட நாட்டு புள்ளிவிபரங்களுடன், ஐக்கிய அமெரிக்கா, துருக்கி. ஜேர்மனி, தாய்லாந்து, பாகிஸ்தான், கம்போடியா, லாவோஸ், பிலிப்பைன்ஸ், மற்றும் வியட்னாம் ஆகிய நாடுகளுடன் இலங்கையின் இருதரப்பு உறவுகள் பற்றி பல்வேறு சுருக்கமான குறிப்புகள் தயாரிக்கப்பட்டன.
- இப் பிரிவு இமுச இற்காக பல்வேறு விடயப் பரப்புகளின் கீழ் ஊக்குவிப்பு விளக்கக் காட்சிகளைத் தயாரித்தது.
    - "முதலீட்டு வர்த்தகத்தில் மாற்றம்; போக்குவரத்து மற்றும் தளவாடம் எதிர்காலத்தை வடிவமைத்தல்"
    - இலங்கைக்கு முதலீட்டு ஊக்குவிப்பு விளம்பரக்காட்சிகள் பங்காளதேஷ் வியாபார குழு
    - பொதுநலவாய கொத்தணி கூட்டங்களுக்காக - "இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள்"
    - தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தின் (NES) கீழ் முதலீட்டு வாய்ப்புகள்
    - "துறைமுக நகரம் - இலங்கை ஒரு முதலீட்டுக்கான இடம்"

- அவுஸ்திரேலியா - இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தத்தின் 2வது இணைக் குழு கூட்டத்திற்காக "வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை சீர்திருத்தங்கள் - இலங்கை"
- "இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான முதலீட்டு உறவு"

- இப் பிரிவு ஆண்டுக்கான ஒவ்வொரு பிரிவினதும் முக்கிய இலக்கையும், பணிகளையும் அடையாளம் கண்டு, 2019 ஆம் ஆண்டுக்கான இமுச இன் செயல் திட்டத்தையும், கூட்டாண்மைத் திட்டத்தையும் தொகுத்தது.
- 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையைத் தயாரித்தது.
- இப் பிரிவு பின்வருவன அடங்கலாக ஏராளமான இணைக் குழு கூட்டங்கள், இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் (BITs), வர்த்தக கலந்துரையாடல், நாட்டு உரையாடல்கள் மற்றும் ஏனைய கூட்டங்களில் பங்குபற்றி, பல உள்ளீடுகள், அவதானிப்புகள் மற்றும் கருத்துக்களை வழங்கி பங்களிப்பு செய்துள்ளது:
  - ஐரோப்பிய ஒன்றியம் (EU) - இலங்கை வர்த்தக சம்பந்தமான உதவி நிகழ்ச்சியின் கீழ் முதலீட்டு சட்டங்களிலுள்ள இடைவெளி பகுப்பாய்வு
  - தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (SAFTA) முக்கிய பட்டியலில் குறைப்பு பற்றி இமுச இன் அவதானிப்புகள்
  - ஆசிய பசுபிக் வர்த்தக ஒப்பந்தத்தின் (APTA) முதலீடு சம்பந்தமான கட்டமைப்பு ஒப்பந்தம் மீதான திருத்தங்கள் பற்றி இலங்கையின் நிலைப்பாடு பற்றிய கருத்துக்கள்
  - சுல்தானேற் ஒப் ஓமான் அரசாங்கத்திற்கும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீடு மீதான ஊக்குவிப்பு மற்றும் பரஸ்பர பாதுகாப்பு பற்றிய இறுதி வரைவு ஒப்பந்தம்
  - முதலீட்டு சூழல் பற்றி இணை ஆய்வு : இலங்கை மற்றும் பங்காளதேஷ்
  - இலங்கை - ஐஅஎ பிற் (UAE BIT) சம்பந்தமான - கலந்துரையாடல்களின் 3 வது சுற்று
  - ஆப்கானிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையேயான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பரஸ்பர பாதுகாப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம்
  - இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையேயான அரசியல் ஆலோசனையின் முதல் அமர்வு பற்றி இமுச இன் அவதானிப்புகள்
- இப் பிரிவு பின்வருவன அடங்கலாக பல்வேறு சர்வதேச மற்றும் பிராந்திய வர்த்தக உரையாடல்களிலும் பங்குபற்றியுள்ளது:
  - 56 வது ஸ்ரான்டிங் கொமிற்றி மீற்றிங், ஆ.ப.வ.ஒ. (APTA) இன் 05 வது பணிக் குழுக் கூட்டம், மற்றும் 10 வது தெ.சு.வ.ஒ. (SAFTA) இன் ஒப்பந்தத்தின் நிபுணர்களின் குழு கூட்டம்
  - புரூசெல்லில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் பணிக் குழு கூட்டம்.
  - நவம்பர் 8 ஆம் திகதி இலங்கை - ஹங்காரி இணைந்த பொருளாதார கூட்டம்
- மேற்குறிப்பிடப்பட்டவற்றுடன், ஆ. மற்றும் கொ.ஆ. பிரிவு பின்வருவனவற்றிலும் ஈடுபட்டிருந்தது:
  - சலுகைகள், முதலீட்டு கொள்கைகள், துறை மேன்நோக்குகள், முன்னுரிமை மற்றும் இலக்கு துறைகள், உள்ள சட்டங்கள் என்பனவற்றிற்கு உள்ளடக்க விபரங்கள் தயாரித்து, இமுச இணையத்தளத்தை இற்றைப்படுத்துவதற்கு உதவியது.
  - இலங்கைக்கும், மொறக்கோவிற்கும் இடையில் வரிச் சலுகைகள் பற்றிய ஓர் ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
  - உலகளாவிய மதிப்பு சங்கிலியில் (GVC) தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு கொள்கைகள் மீதான உயர் மட்ட கொள்கை உரையாடலுக்காக கொரிய பொருளாதார மேம்பாட்டு கூட்டு (EDP) பணிக்கு அறிக்கையும், விளம்பரக் காட்சியும் தயாரித்ததற்கு சமாந்திரமாக கொரியா - இந்தியா விரிவான பொருளாதார கூட்டு உடன்படிக்கை (CEPA) மீதான ஆழமான பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது.

- இமுச இன் முக்கிய செயலாற்றுகையை இற்றைப்படுத்துவதற்கு காலாண்டு அடிப்படையில் வெ.நே.மு. மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

- நிகழ்நிலை வெ.நே.மு. மதிப்பீட்டை மேற்கொண்டு, வெ.நே.மு. புள்ளிவிபரங்களை பராமரிக்கும்போது இப் பிரிவு முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) முகாமைத்துவம் செய்தது. உணரப்பட்ட முதலீட்டை உருவாக்குதல் முறை ஒன்றை விருத்திசெய்து அதன்படி முறைமையை இற்றைப்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒரு புதிய நியம பதவி பட்டியல், வேகப்படுத்தும் பட்டியல் என்பவற்றைத் தயாரிப்பதுடன், விசா முறைமைக்கு ஒரு அறிக்கை வசதியையும் ஏற்படுத்துவதற்கு விசா முறைமையை மீளாய்வு செய்வதற்கு வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளையும் இப் பிரிவு மேற்கொண்டது.

4. முதலீட்டாளர் சேவைகள் பிரிவு

முதலீட்டாளர் சேவைகள் பிரிவு இமுச சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறைகளில் பதிவுசெய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு கவனிப்புக்குப் பின்னரான சேவைகளை இலகுபடுத்துகிறது. மேற்கூறப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக ஒன்பது சரக்குப்பொருள் சரிபார்த்தல் நிலையங்களுக்கு மேலாக இந்தப் பிரிவிற்கு உ.வ.மை. (WTC) கொழும்பு, கட்டுநாயக்க, பியகம, ஹொக்கல ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் ஐந்து முதலீட்டாளர்கள் சேவைகள் மையங்கள் உள்ளன.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- இறக்குமதி / ஏற்றுமதி CUSDECS செயலாக்கம்
- இறக்குமதி / ஏற்றுமதி சரக்குப்பொருள்களை சரிபார்த்தல்
- ஐ.ஒ. நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புடவை மற்றும் ஆடைகள் உற்பத்திப்பொருட்களுக்கு தோற்ற சான்றிதழ் வழங்குதல்
- இணைந்த குதங்களிலிருந்து பொருட்களைத் தீர்வைப்படுத்துவதற்கான ஒப்புதல்
- உப ஒப்பந்தங்கள், இடமாற்றங்கள், உள்ளூர் விற்பனைகள் மற்றும் மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்களுக்கான கடன்களுக்கு ஒப்புதல்
- பொருட்களின் மீள் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றமதிக்கு ஒப்புதலளித்தல்
- இமுச தொழில்முயற்சிகள் முகம்கொடுக்கும் பிரச்சனைகள் தொடர்பாக அரச நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளல்
- மறைமுக ஏற்றுமதிகளுக்கு பொருட்கள் கையேற்றல் குறிப்புகளைச் (GRN) செயலாக்கி, ஒப்புதலளித்தல்
- த.தொ./பிபீஓ (BPO) கருத்திட்டங்களுக்கு வெப் மூலம் சமர்ப்பித்தவற்றை செயலாக்குதல்
- குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு வெளிநாட்டவர் விசாக்களை (வலய தொழில் முயற்சிகளுக்கு மாத்திரம்) பரிந்துரைத்தல்

2019 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம்

இமுச இன் தொழில்முயற்சிகளுக்கு அனுப்பப்பட்ட மொத்த இறக்குமதி TUEs	100,427
இமுச இன் தொழில்முயற்சிகளால் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த TUEs கள்	115,116
இறக்குமதி பெறுமதி (ஐ.அ.டொ. மிலி.)	4,834
ஏற்றுமதி பெறுமதி (ஐ.அ.டொ. மிலி.)	7,940
மைய கம்பனிகளின் இறக்குமதி பெறுமதி (ஐஅடொ. மிலி.)	214
மைய கம்பனிகளின் ஏற்றுமதி பெறுமதி (ஐஅடொ. மிலி.)	150

5. கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவு

இமுச ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றிய அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை ஆராய்வதே கருத்திட்ட கண்காணிப்புப் பிரிவின் முக்கிய செயற்பாடாகும். இது வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்ளும் இமுச அங்கீகாரம் பெற்ற கருத்திட்டங்களின் காலம் முழுவதையும் உள்ளடக்கியதாக இப் பிரிவின் ஒழுங்கானதும், நிலையானதுமான செயற்பாடாக உள்ளது.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- இமுச இன் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் பிரிவு 17 இரண்டினதும் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகள், அவற்றின் கருத்திட்டங்களைப் பொறுத்தவரை கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள், ஆண்டுக்கு இருமுறையான செயலாற்றுகைக் கூற்றுக்கள், மற்றும் தொழில்வாய்ப்பு புள்ளிவிபரங்கள் என்பவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட கால தகவல் சேகரிப்பு மூலம் ஆராயப்படுகிறது.

- வரிச் சலுகைக்குத் தகுதியான கம்பனிகளுக்கு வரி சான்றிதழ் வழங்குவது, வாழ்க்கைச் சுழற்சியில் முடிவை எட்டிய கருத்திட்ட ஒப்பந்தங்களையும், இமுச ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்காதவற்றையும் முடிவாக முடித்தல், இமுச இன் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் பிரிவு 17 இரண்டினதும் கீழ் சம்பந்தப்பட்ட பிரிவுகளால் தீர்மானம் மேற்கொள்வதற்கு செயலாற்றுகை அறிக்கை வழங்குவதற்கு கருத்திட்டங்களை ஆய்வு செய்தல், ஒப்பந்தம் முடிவுற்ற கருத்திட்டங்கள் தொடர்பாக அக் கம்பனிக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கி அலகுகள் (FCBU) வசதிகளை மீளப்பெறுவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு ஒவ்வொரு காலாண்டும் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

மீளாய்வுக்கான ஆண்டில் அந்தந்த ஒப்பந்தங்களில் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்க இமுச இல் பதிவுசெய்யப்பட்ட 111 எண்ணிக்கையான கம்பனிகளுக்கு வருடாந்த வரி சான்றிதழ் வழங்கப்பட்டன.

2019 இல் கம்பனிகளிடமிருந்து மொத்தமாகச் சேகரிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் எண்ணிக்கை 1594 ஆகும். இந்த ஆண்டில் ஒரு ஒருங்கிணைந்த கண்காணிப்புத் திட்டத்தைப் பின்பற்றி, 185 கம்பனி நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன.

மீளாய்வுக்கான ஆண்டில் கம்பனிகள் முகம்கொடுத்த நிதிப் பிரச்சனைகள், சந்தைப் படுத்தலில் உள்ள சிரமங்கள் காணி ஆதாரம் போன்றவற்றால் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காத காரணிகளால் 158 ஒப்பந்தங்களை முடிவுக்குக்குக் கொண்டுவருவதை செயற்படுத்தி, செயற்படாத திட்டங்களின் பின்னிணைப்பை அழிப்பது முறைப்படுத்தப்பட்டது. வருங்கால முதலீட்டாளர்களால் சொத்துக்கள் கையகப்படுத்தியது மற்றும் நிறுவனங்கள் ஒன்றிணைதல் அல்லது ஒன்றுசேர்தல் என்பவற்றின் விளைவாலும் முடிவுக்கு வரவேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

6. கருத்திட்டம் அமுல்படுத்தும் பிரிவு

இமுச இன் கருத்திட்டம் அமுல்படுத்தும் பிரிவு முதலீட்டாளர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதன் மூலம் கருத்திட்டங்கள் சுமூகமாக செயல்படுவதை எளிதாக்குகிறது. இமுச உடனான ஒப்பந்தங்களில் ஒத்துக்கொள்ளப்பட்ட அமுல்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கு அமைய கருத்திட்டங்களுக்கு வெற்றிகரமான வசதிகளை உறுதிப்படுத்துவது கருத்திட்டம் அமுல்படுத்தும் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- கருத்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையிலும், முதலீட்டாளரின் கோரிக்கைக்கும் அமைய அமுல்படுத்தும் நடவடிக்கைகளை சம்பூரணப்படுத்துவதற்கு கருத்திட்டம் அமுல்படுத்தும் கால நீடிப்புகளை வழங்குகிறது.
- கருத்திட்டங்களை அமுல்படுத்தும்போது அவற்றை அமுல்படுத்துவதிலுள்ள சிக்கல்களை /தடங்கல்களை/பிரச்சனைகளை அடையாளம் கண்டு, அமுல்படுத்தும் கால எல்லைக்குள் அத்தகைய சிக்கல்களை/தடங்கல்களை/பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு உதவுதல்/வசதிகளை வழங்குதல்
- கருத்திட்டத்தை அமுல்படுத்தும் கால எல்லைக்குள் பின்பற்றவேண்டிய காரியக்கிரமங்களை முதலீட்டாளர்களுக்குத் தெரிவித்து, பின்பற்றவேண்டிய வழிமுறைகளை அனுப்புதல்
- பிரச்சனைகளைத் தீர்க்கும் எண்ணத்துடன் முதலீட்டாளர்கள், உள்ளக பிரிவுகள் மற்றும் தொடர்புடைய நிரல் முகவர்களுடன் கூட்டங்களை ஒழுங்குசெய்து, ஒருங்கிணைத்தல்
- இமுச உடன் புதிதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட முதலீட்டாளர்களுக்கு இமுச இன் தொடர்புடைய பிரிவுகளின் பணிகள் பற்றி, விசேடமாக கருத்திட்டம் அமுல்படுத்தும் பிரிவு சம்பந்தமாக தெரிவிப்பதற்கு ஆரம்ப முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (IIAP) நடத்துதல்
- கருத்திட்டங்கள் மீது பௌதீகரீதியான பரிசீலனைகளை மேற்கொண்டு, அவர்களுடைய கருத்திட்டங்களிலுள்ள குறைபாடுகள் பற்றி முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- கருத்திட்டம் அமுல்படுத்தும் காலஎல்லை முழுவதும் கவனித்தல்/பின்பற்றவேண்டிய வழிமுறைகளை வழங்குதல்/அறிவுறுத்தல்களை வழங்குதல்/வசதி வழங்குதல்
- அமுல்படுத்தும் காலஎல்லைக்குள் தற்போதுள்ள கருத்திட்டங்களின் முதலீட்டாளர்களுடன் தொடர்ந்து தொடர்பை ஏற்படுத்தி, இமுச இனால் வழங்கப்படும் வசதிகளை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு முதமு (MIS) இல் கருத்திட்டங்களின் நிலையை இற்றைப்படுத்துதல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- 27 கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன, 65 கருத்திட்டங்கள் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு, 91 கருத்திட்டங்கள் அமுல்படுத்தும் காலஎல்லை நீடிப்பு 91 கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை அறிந்துகொள்வதற்கு 119 தள பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- கருத்திட்டங்களின் செயற்பாட்டை எளிதாக்குவதுடன், சுமூகமாக அமுல்படுத்துவதற்கு மற்றைய பிரிவுத் தலைவர்களுடன் சேர்ந்து க.அ. பிரிவின் பணிகளை அறியச்செய்வதற்கும், இமுச இன் பல்வேறு பிரிவுகளின் அதிகாரிகளுடன் பரிச்சயமாகுவதுடன், அவர்களின் பணிகளை அறிந்துகொள்வதற்கும் 3 ஆரம்ப முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை (IIAP) க.அ. பிரிவு ஒழுங்குசெய்தது. 2019 இல் 29 கம்பனிகள் கூட்டங்களில் பங்குபற்றின.

7. சட்டப் பிரிவு

சபை மற்றும் முதலீட்டாளர்களுக்கு தொழில்துறைசார் ஆலோசனை / சேவை வழங்கும் பொறுப்பு இலங்கை முதலீட்டு சபை (BOI) இன் சட்டப் பிரிவினதாகும். இமுச சட்டத்தின் பிரிவு 17 இன் கீழும், 2008 ஆம் ஆண்டின் மூலோபாய அபிவிருத்தி கருத்திட்டங்கள் திருத்தப்பட்டவாறு சட்ட இல. 14 கீழும் அங்கீகாரம் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு முதலீட்டிற்குப் பொருந்தக்கூடிய சட்ட ஆட்சியில் முதலீட்டாளர்கள் சம்பந்தமான சேவைகள் வழங்குவதும், முதலீட்டு ஒப்பந்தங்களை எளிதாக்குவதும் பிரதானமான பாகமாகும்.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- இந்தப் பிரிவு இமுச இற்கு எதிரான நிறுவன வழக்குகளில் கூட்டாண்மை சட்ட விவகாரங்களில் அதன் பொறுப்புக்களான கடமைகளைச் செய்வதுடன், இமுச இன் சட்ட உரிமையைப் பாதுகாப்பதற்காக இமுச இன் சார்பில் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்குகிறது.

- ஆலோசனை இயல்புடைய முதலீட்டாளர்களுக்கு வசதி வழங்கும் சட்ட சேவை, இமுச இன் சட்டம் பிரிவு 17 இன் அனுசரணையின் கீழும் மற்றும் மூ.அ.க. (SDP) சட்டத்தின் கீழும் கருத்திட்டங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான இலங்கையின் சட்ட ஆட்சி பற்றிய தகவல்களைப் பரப்புதலை உள்ளடக்கியதாகும்.

- இமுச சட்டத்தின் பிரிவு 17 இன் படி இலங்கையில் கருத்திட்டங்களை நிறுவுவதற்கு கம்பனிகளின் நிறுவனத்தின் சரத்தினைக் கவனமாகப் பார்வையிட்டு அங்கீகரித்தல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

இமுச இன் சட்டம் பிரிவு 17 இன் கீழ் 2019 ஆம் ஆண்டில் இலங்கையில் புதிய வர்த்தக முயற்சிகளை நிறுவுவதற்கு இமுச 46 முதன்மை ஒப்பந்தங்களை ஒப்பந்தம் செய்துகொண்டது. செயல்படுத்திய பாரிய கருத்திட்டங்களாவன :

- சில்வர் பார்க பெற்றோலியம் (பிறைவேற்) லிமிடட் - ஏற்றுமதி சந்தைக்காக அம்பாந்தோட்டையில் ஒரு 10 MMTPA கிறீன் பீல்ட் (Green field) எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு
- சீ எஸ் ரீ காமன்ஸ் (CST Garments) (பிறைவேற்) லிமிடட் - ஏற்றுமதிக்கு ஆடைகள் தயாரிப்பதற்கு
- பெயர்வே வேஸ்ற் மனேஜ்மென்ற் (Fairway Waste Management) (பிறைவேற்) லிமிடட் - 10 MW கழிவிலிருந்து சக்தி திட்டம் ஒன்றை நிறுவுவதற்கு

இவற்றுடன் 197 துணை ஒப்பந்தங்கள் வியாபாரத்தின் நோக்கம், இடமாற்றம், கையகப்படுத்தல் மற்றும் இணைதல் ஆகியவற்றின் மேலும் முதலீட்டு மாற்றங்கள் தொடர்பாக ஏற்கெனவே உள்ள இமுச கருத்திட்டங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டன.

இது கணிசமான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கும் பின்வரும் கருத்திட்டங்களை உள்ளடங்கியதாகும்

- ஈடொற்கோ சேர்விஸஸ் லங்கா(Edotco Services Lanka) (பிறைவேற்) லிமிடட் -
    - 349 அமைவிடங்களில் பல்நோக்கு கம்பங்கள் அமைத்தல் அடங்கலாக ஸ்மாட் சிற்றி (Smart City) செயல்பாட்டின் பரந்த அளவினை உள்ளடக்கியதாக ஒரே கம்பத்தில் பல்வேறு தொழிற்பாடுகளுக்கு இடமளிக்கும் பல்நோக்கு கம்ப தீர்வு, தெரு கம்பங்களை அமைத்து செயற்படுத்துதல்
    - உள்ள கருத்திட்டத்தின் விரிவாக்கமாக 451 ஆற்றல் தளங்களுடன் டெலிகொம் செயற்பாடுகளுக்கு DC சக்தி தீர்வுகளை வழங்குதல்
- லங்கா ரெலிகொம் பீஎல்சீ (PLC)
    - இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தினால் பரிந்துரைக்கப்பட்டவாறு வலையமைப்பு விரிவாக்கும் கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கும், 72 தளங்களை உள்ளடக்குவதற்கும் அனுமதியளிப்பது.
    - மேற்குறிப்பிட்டவை தவிர, சட்டப் பிரிவு இமுச இற்குச் சொந்தமான காணிகளை முதலீட்டாளர்கள் தங்களின் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு குத்தகைக்கு வழங்குவதன் மூலம் தனது முதலீட்டாளர் சம்பந்தமான சேவைகளை விரிவிாக்குவதில் ஈடுபட்டுள்ளது.

ஆக்கிரமித்தவர்களை துல்ஹிரிய எம்.ஏ.எஸ் பப்ரிக் பார்க்கிலிருந்து (MAS Fabric Park) சட்டப்படி வெளியேற்றுதல்

துல்ஹிரிய எம்.ஏ.எஸ் பப்ரிக் பார்க்கில் சட்டவிரோதமாகக் குடியிருந்தவர்களை சட்டப்படி வெளியேற்றுவதற்கு 2007 ஆம் ஆண்டு இமுச அரச காணிகள் (உடைமைகளை மீட்பது) சட்டத்தின் கீழ் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு தொடங்கியது. நீண்டகால மேல்முறையீட்டு நடவடிக்கைகளுக்குப் பின்னர் இமுச இற்குச் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டு, சட்டவிரோதமாகக் குடியிருந்தவர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு கட்டளை இடப்பட்டது.

இமுச சட்டவிரோதமாகக் குடியிருந்தவர் அனைவரையும் அந்த இடத்திலிருந்து வெளியேற்றி, இடையூறுகள் எதுவும் இல்லாது எம்.ஏ.எஸ் பப்ரிக் பார்க் (தனியார்) லிமிடட் ("தொழில்முயற்சி") க்குக் கையளித்தது.

சட்டவிரோதமாகக் குடியிருந்தவர்கள் அனைவரையும் வெளியேற்றிய பின்னர் தொழில்முயற்சியினால் திறைசேரிக்குச் செலுத்தவேண்டிய இறுதித் தவணைப் பணமான ஐ.அ.டொ. 5 மில்லியனில் பகுதி தொகையான ஐ.அ.டொ. 2.5 மில்லியன் இமுச இனால் பெறப்பட்டது. மிகுதித் தொகை தொழில்முயற்சியினால் உரிய நேரத்தில் செலுத்தப்படும்.

இமுச எ. மிலியன் காமன்ற்ஸ் (தனியார்) லிமிடட்

18.12.2014 திகதியிடப்பட்டு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட நிறைவேற்றுவதற்கான உத்தரவின்படி ஒரு நடுவர் தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு இமுச இன் ரூபா 102,138,350/- தொகை பறிமுதல் செய்யப்பட்டது. மில்லியன் காமன்ற்ஸ் (தனியார்) லிமிடட் இன் முகாமைத்துவ பணிப்பாளருக்கு எதிராக வர்த்தக மேல் நிதிமன்றத்தினால் செயற்படுத்தப்பட்ட சொல்லப்பட்ட நடுவர் தீர்ப்புக்கு பொய் கையொப்பமிட்டதற்காக மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. (வழக்கு இல. 3127/2006)

மேலும் இமுச இழக்கப்பட்ட உரிமையை மீளப் பெறுவதற்கு (CA/RI/08/16) ஒரு வழக்கைத் தாக்கல் செய்ததுடன், வர்த்தக மேல் நீதிமன்றத்தின் குறிப்பிட்ட கட்டளையை விட்டு, இமுச யை முன்னர் இருந்தவாறு உண்மையான நிலைக்கு மீட்டமைப்பதற்காக உத்தரவைப் பெறுவதற்கு நீதிமன்றை அணுகி, வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் இறுதி ஆணையில் நுழைந்து பணத்தை மில்லியன் காமன்ற்ஸ் (தனியார்) லிமிடட்டிற்கு விடுவிப்பதற்கு தடைவிதிக்கும் இடைக்கால உத்தரவைக் கோரியிருந்தது.

2019 நவம்பரில் இமுச சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. றோனால்ட் பெரேரா பீ.சீ. இனால் சமர்ப்பித்ததற்கு, நீதிபதி குழாம் இவ்விடயம் சம்பந்தமாக மேல் நீதி மன்றத்திலுள்ள வழக்குகள் முடியும்வரையிலும், மேல் நீதி மன்றத்தின் தீர்ப்புகள் வழங்கும்வரையிலும் விவாதத்தை ஆரம்பிப்பதை தாமதப்படுத்துவதற்குத் தீர்மானித்தது. பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை மில்லியன் காமன்ற்ஸ் (தனியார்) லிமிடட்டிற்கு விடுவிப்பதற்கான இடைக்கால உத்தரவு ஒன்றுள்ளது.

8. தொழில்நுட்ப சேவைகள் பிரிவு

இமுச இனால் முகாமைத்துவம் செய்யப்படும் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் மற்றும் கைத்தொழில் பூங்காக்கள் சம்பந்தமான கட்டமைப்பு அபிவிருத்திகளின் செயல்திட்டத்தின் ஒட்டமொத்த கட்டுப்பாட்டிற்கு தொழில்நுட்ப சேவைகள் பிரிவு பொறுப்பாகும்.

இப் பிரிவின் முக்கிய பணிகளாவன: புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுதல், நிர்மாணிப்பதற்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கல், செயற்பாடு, வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல் மற்றும் நிர்ணயம், புதிய முதலீட்டு கருத்திட்டங்களுக்கு முதலீட்டாளர்கள் தெரிவுசெய்வதற்கு கிடைக்கக்கூடிய காலியான நிலங்களை விளம்பரம் செய்தல், அரசிற்குப் பிரிக்கப்பட்ட சொத்துக்களை மாற்றுவதில் தகுதிவாய்ந்த அதிகார சபைக்கு உதவுதல் என்பனவாகும்.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

தொழில்நுட்ப சேவைகள் பிரிவு பிரதானமாகப் பொறுப்பாக உள்ளது:

- இமுச இனால் முகாமைத்துவம் செய்யப்படும் ஏ.செ.வ. மற்றும் கை.பூ. போன்றவற்றின் கட்டமைப்பு அபிவிருத்திகளின் செயல்திட்டத்தின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாடு
- புதிய முதலீட்டு வலயங்கள் / கருத்திட்டங்களுக்கு களத்தை அடையாளம் காணுதல்
- புதிய முதலீட்டு வலயங்களைத் திட்டமிடுதலும், அபிவிருத்தியும்
- வலயங்களுக்கு வழங்கவேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை நிர்ணயித்தல்
- புதிய முதலீட்டு வலயங்களுக்கு ஆரம்ப அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளல், வலய அலுவலகங்களை நிறுவுதல், வலயங்களின் செயற்பாட்டை வலய முகாமைத்துவ பிரிவுகளுக்குக் கையளித்தல்
- விசேட முதலீட்டு கருத்திட்டங்களுக்கு காணி விடயங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வழங்குவது சம்பந்தமாக உதவியும், தொழில்நுட்ப உள்ளீடுகளும் வழங்குதல்
- முன்மொழிவுகள் தயாரித்தல், தளங்களை அடையாளங்காணுதல், வலயங்களுக்குள் இணைந்த திண்ம கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் / கைத்தொழில் பூங்கா, நீர் மறுசுழற்சி, கழிவு நீர் முறைமைகள் என்பன நிறுவுவதற்கு வேண்டிய ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல்
- ஏற்கெனவே உள்ள ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்/கைத்தொழில் பூங்காக்களினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளுக்கு வேண்டிக்கொள்ளும் நேரங்களில் தொழில்நுட்ப உதவி வழங்குதல்
- தற்போதுள்ள ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் / கைத்தொழில் பூங்காக்களுக்கு நீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் திண்ம கழிவு முகாமைத்துவ திட்டங்களுக்கு தொழிற்பாடு மற்றும் பராமரிப்புக்காக தொழில்நுட்ப உதவி வழங்குதல்
- சூழல் பிரச்சனைகள் மற்றும் பொது அக்கறைகள் தொடர்பான முரண்பாடுகளை எதிர்கொண்டுள்ள கைத்தொழில் பூங்காக்களைப் பார்வையிட்டு, தொழில்நுட்ப அம்சங்கள் சம்பந்தமான பரிந்துரைகளை வழங்குதல்
- வலயங்களில் காலியாக காணிகள் கிடைப்பதை விளம்பரம் செய்வதுடன், காணி ஒதுக்கீட்டுக் குழு மூலம் பொருத்தமான முதலீட்டாளர்களை மதிப்பீடு மூலம் தெரிவு செய்து, அதனைத் தொடர்ந்து திரையிடல் குழுவினதும், இமுச இன் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரத்தைப் பெறுதல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- தற்போதுள்ள ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் / கைத்தொழில் பூங்காக்களின் பிரதானமாக உட்கட்டமைப்பைச் சீர்ப்படுத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக மொத்தம் ரூபா 604.936 மிலி. இமுச இனால் செலவு செய்யப்பட்டுள்ளது.
- வடிவமைப்பு, மதிப்பிடுதல் மற்றும் தற்போதுள்ள வலயங்கள் என்பனவற்றிற்கு உரிய ஆவணங்களைத் தயாரித்தல் உட்பட வீதி வலையமைப்புகள், கட்டடங்கள், வேலி அமைத்தல் மற்றும் கழிவுநீர் திட்டங்களின் கட்டுமானம் மற்றும் சீர்படுத்தல்கள் போன்றவை
- ஹொரண, வகவத்த கைத்தொழில் வலயத்தில் புதிய வலயங்களுக்காக உட்கட்டமைப்பை மேம்படுத்தல், குருநாகல் மாவட்டத்தில் பிங்கிரியவில் உத்தேசிக்கப்பட்டுள்ள கைத்தொழில் வலயம், பண்டாரகமவில் உத்தேசிக்கப்பட்டுள்ள மில்லானிய வலயம் மற்றும் அம்பாந்தோட்டையில் உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளக வீதி வலையமைப்பு, நீர் வழங்கல் திட்டம், எல்லை அமைத்தல் என்பவற்றைக் கொண்ட விசேட பொருளாதார வலயம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கு மொத்தமாக ரூபா 110.388 மிலி. செலவு செய்யப்பட்டது.

அ) வகவத்த கைத்தொழில் வலயம் (2014 இல் தாபிக்கப்பட்டது)

வீதிகள், பெரு மழைநீர் கால்வாய்கள், HEPZ இலிருந்து WIZ இற்கு நீர் அனுப்பும் வரிசையை வழங்குதல் மற்றும் அமைத்தல், வீதி விளக்குகள் வழங்குதல், புற எல்லை வேலி அமைத்தல், அலுவலக கட்டடம் அமைத்தல் போன்றவை என்பன 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன.

ஆ) பிங்கிரியவில் உத்தேசிக்கப்பட்ட கைத்தொழில் வலயம் (2019 இல் தாபிக்கப்பட்டது)

உயர் அழுத்த மற்றும் குறைந்த அழுத்த மின் வழங்கும் கம்பிகள் அமைத்தல், புற எல்லைவேலி அமைத்தல், அளவை வேலைகள், சுற்றாடல் தாக்க மதிப்பீடு, நெற்காணிகள் போன்றவை சுவீகரித்தல் என்பன 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன.

செயல்திட்டம் 2019 இன் கீழ் மொத்தம் ரூபா 828.625 மிலி. பின்வருமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது :

i) இமுச இன் நிதிப் பிரிவு, நிர்வாகப் பிரிவு மற்றும் சூழல் பிரிவு சம்பந்தமான கொள்ளலுக்கு ரூபா 113.031 மிலி.

ii) புதிய வலயங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக ரூபா 110.38 மிலி.

iii) தற்போதுள்ள வலயங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக ரூபா 604.936 மிலி.

இவற்றுடன், தொழில்நுட்ப சேவைகள் பிரிவினால் காலியான காணிகளை பல புதிய கருத்திட்டங்களுக்கும், தொழில்முயற்சிகள் மூடப்பட்டதன் காரணமாக காலியானவற்றை தொழில்முயற்சிகளின் விரிவாக்கத்திற்கும், பங்கிட முடிந்தது. 2019 ஆம் ஆண்டு ஏறத்தாழ 10 ஏக்கர்கள் விஸ்தீரணமுள்ள ஆறு காணித் துண்டுகள் புதிய தொழில்முயற்சி கருத்திட்டங்களுக்கு பங்கிடப்பட்டுள்ளன.

9. வலய முகாமைத்துவப் பிரிவு

இமுச வலயங்களுக்குள் செயற்படும் முதலீட்டாளர்களுக்கு சகல கைத்தொழில் சம்பந்தமான சேவைகளையும் வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் ஒரு தனி அமைவிடத்திலிருந்து மத்திய வசதிகளை வழங்கி, கைத்தொழில் நிறுவனங்கள் தடையின்றி செயற்படுவதில் வலய முகாமைத்துவப் பிரிவு கவனம் செலுத்துகிறது.

வலய முகாமைத்துவப் பிரிவு இமுச இன் கீழ் தொழிற்படும் அனைத்து 12 வலயங்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது. இமுச இன் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் / கைத்தொழில் பூங்காக்கள் என்பவற்றின் பணிகளின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக்குப் பொறுப்பாக உள்ளது.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- இந்தப் பிரிவு வலயங்கள் சம்பந்தமான முகாமைத்துவ தகவல்களை வழங்குவதுடன், அவற்றின் தொழில்நுட்ப மற்றும் பணிகளிலுள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் உதவுகிறது.
- இந்தப் பிரிவு சூழல் சம்பந்தமானவை, காணிப் பிரச்சனைகள், என்பவற்றிற்கு வழிகாட்டுதலை வழங்குவதுடன், வலயங்களிலுள்ள தொழில்முயற்சிகளுக்கு சிறந்த வாய்ப்புக்களுக்கான வசதிகளை வழங்குகிறது.
- இவற்றுடன், இப்பிரிவு வளங்களின் தேவைகளை மதிப்பீடு செய்து, வலயங்கள் / பூங்காக்களுக்கு வளங்களைப் பங்கிடுவதில் தலையிடுகிறது.
- சூழல் கண்காணிப்பு, ஆலோசனை மற்றும் ஆய்வுகூட சேவைகள்
- பகல் காப்பு நிலையங்கள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் மற்றம் ஓய்வுநேர பூங்காக்கள்
- உள்ளக போக்குவரத்து வசதிகள், பேரூந்து முனையங்கள்
- மையப்படுத்தப்பட்ட திண்ம கழிவு கையாளும் பொறிமுறை
- வருங்கால கருத்திட்டங்களுக்கு ஏ.செ.வ. இல் காணி வழங்குதல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

2019 இல் இமுச வலயங்கள் தொடர்ச்சியான வளர்ச்சியை மெய்ப்பித்துள்ளதுடன், பல்வேறு விடயங்களில் பின்வருமாறு முன்னேற்றம் அடைந்துள்ளது.:

2019 இல் இமுச வலயங்களால் தங்களுக்கு அதிகாரமுள்ள பிரதேசங்களில் 281 தொழில்முயற்சிகளில் பல்வேறு வியாபாரங்களுக்கு வசதிகளை வழங்க முடிந்ததுடன், வேலைவாய்ப்பு அடிப்படையில், சகல ஏற்றுமதி செயலாக்க வலயங்களிலும் 143,000 க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புகள் 2019 முடிவில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், 2018 முடிவில் இந்த எண்ணிக்கை முறையே 291 ஆகவும், 142,283 ஆகவும் இருந்தன. சில தொழில்முயற்சிகள் மூடப்பட்ட தொழிற்சாலைகளை வாங்கி, செயற்பாடுகளை விரிவாக்கியதுடன், ஏற்றுமதியும் அகரித்துள்ளது. எவ்வாறாயினும் இன்னும் வெவ்வேறு அளவிலான சுமார் 16 தொழில்முயற்சிகள் மூடப்பட்டுள்ளதுடன், அந்தத் தொழில்முயற்சிகளை புதிய முயற்சிகளுக்கு ஊக்குவிப்பதென முகாமைத்துவம் தீர்மானம் எடுத்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பாளர்களாக இமுச இன் வலய தொழில்முயற்சிகள் 2019 இல் மொத்த ஏற்றுமதியாக ரூபா 572.76 பில்லியனை அடைந்துள்ளது. இது 2018 ஏற்றுமதியுடன் ஒப்பிடும்போது 14% அதிகரிப்பாகும். இறங்குவரிசையில் கஏசெவ, பிஏசெவ, சீஏசெவ, கொஏசெவ என்பன பிரதானமாக ஏற்றுமதி வருமானத்திற்குப் பங்களித்துள்ளன.

சகல வலயங்களினதும் செயற்பாடுகளினதும் வருமான உருவாக்கம் 2018 உடன் ஒப்பிடும்போது 2019 இல் 19% அதிகரிப்புடன், ரூபா 3,166.3 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. செயற்பாடுகளின் வருமானத்திற்கான மிகப்பெரிய பங்களிப்பாளர் கஏசெவ 2019 இல் மொத்த செயற்பாடுகளின் வருமானமாக ரூபா 1,087.6 மில்லியனாக உருவாகியுள்ளது. இது மொத்த செயற்பாடுகளின் வருமானத்திற்கு 34% பங்களிப்பாகும்.

வலய செயற்பாடுகளின் செலவினம் 9% ஆக அதிகரித்து, 2019 இல் ரூபா 2,149.1 மிலி. பெறுமதிக்கு அதிகரித்துள்ளது. 2018 உடன் ஒப்பிடும்போது 44% அதிகரிப்பைப் பதிவு செய்து, வலய செயற்பாடுகளின் இலாபமாக ரூபா 1,017.2 மிலி. ஐ 2019 இல் அடைந்துள்ளது. 2017, 2018 களில் செயற்பாடுகளின் இலாபம் படிப்படியாகக் குறைந்து, அந்தந்த முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது முறையே 8% மற்றும் 13% சரிவைப் பதிவுசெய்துள்ளது. எவ்வாறாயினும் இந்த இலாபச் சரிவின் போக்கு 2019இல் மாறி, 44% செயற்பாடுகளின் இலாப அதிகரிப்பு இமுச வலயங்களால் அடையப்பெற்றுள்ளது.

மஏசெவ உம், வஏசெவ உம் 2019 இல் நட்டமடைந்திருந்தபோதும் இரண்டு வலயங்களும் 2018 உடன் ஒப்பிடும்போது

குறைவான தொகையான இழப்பை ஏற்படுத்தி, தங்களுடைய பொருளாதார நிலையை சீர்திருத்தியுள்ளன. கடந்த சில வருடங்களாக இழப்புகளைச் சந்தித்தபோதும் கொஏசெவ 2019 இல் ரூபா 8.0 மிலி. செயற்பாடுகளின் இலாபத்தைச் சம்பாதித்துள்ளது.

வலயங்களின் நிலையை உயர்த்துவதற்கும், வலயங்களின் ஆரம்ப நோக்கங்களை அடைவதற்கும் இமுச 2019 இல் பல திட்டங்களை ஆரம்பித்தது.

- கஏசெவ இலிருந்து ஆரம்பித்து, வலயங்களைச் செம்மையாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- வலயங்களின் பாதுகாப்பையும், பாதுகாப்பைக் கண்காணிக்கும் செயல்திறனையும் அதிகரிக்கும் நோக்கத்துடன், மின்னணு நுழைவாயில் அனுமதிச் சீட்டு முறைமைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது..
- 2019 இல் பல இமுச வலயங்களில் கழிவு முகாமைத்துவ செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.
- கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு சக்தியை சேமிக்கும் மற்றும் பசுமைத் திட்டங்கள்
- கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் பெருக்குதல், நீர் வழங்குதல், தெரு விளக்குகள், கட்டடங்களைப் புதுப்பித்தல், இமுச கட்டடங்களின் கூரைகளில் சூரிய கதிர் பனல் (Solar panel) அமைத்தல், புதிய வசதிகளுடைய கட்டடங்கள் போன்ற பல்வேறு துறைகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளை சராசரி ரூபா 1 பிலி. செலவில் தொடர்தல்

10. சூழல் முகாமைத்துவப் பிரிவு

இமுச இன் எல்லைக்குட்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பான சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான பணிகள் சூழல் முகாமைத்துவப் பிரிவினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (CEA) ஆலோசனையுடனும், உடன்பாட்டுடனும் நிறைவேற்றப்படுகிறது.

சூழல் முகாமைத்துவப் பிரிவின் பணிகளாவன: கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் ஒப்புதல் வழங்கல், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல், சுற்றாடல் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரணைசெய்து, அவற்றைத் தீர்த்துவைத்தல், இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மற்றும் சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் போன்ற ஏனைய முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுடன் இணைந்து செயற்படுதல்

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- இமுச சட்டம் 17வது பிரிவின் கீழ் தொழிற்படும் கருத்திட்டங்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (CEA) உடன்பாட்டுடன் சூழல் அனுமதி வழங்குதல்
- தேசிய சுற்றாடல் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான நடைமுறைகள்) விதிமுறைகளின் அடிப்படையில் சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு செயல்முறை (EIA) தேவைப்படும் கருத்திட்டங்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கும் கூட்டங்களில் பங்குபற்றி, அதன்மூலம் ஒப்புதல் நடைமுறையை எளிதாக்குதல்
- மசுஅ (CEA)இ இமுச ஐ நியமிக்கும் பட்சத்தில் கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் முகவராகவும் தொழிற்படல்
- மசுஅ இன் உடன்பாட்டுடன் சூழல் பாதுகாக்கும் அனுமதிப்பத்திரம் (EPLL) வழங்கல்
- தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு (TRC) தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தளங்களில் அமைப்பதற்கு சுற்றாடல் பரிந்துரைகள் (ERR) வழங்கல்
- இமுச கருத்திட்டங்கள் சம்பந்தமான சூழல் மாசடைதல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதுடன், தேவையான மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் அவற்றைத் தீர்த்தல்
- ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் வெளியேற்றப்பட்ட தொழில்துறை கழிவுகளைக் கண்காணித்தல்

மேற்கூறப்பட்டவற்றுடன்

- இலங்கை கையொப்பமிட்ட சூழல் / இரசாயனப்பொருட்கள் சம்பந்தமான சர்வதேச பிரகடனங்களைப் பின்பற்றும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட தேசிய குழுக்களில் சேவையாற்றியது
    - பஸல் (BASEL), றொற்ரேடம் (Rotterdam), ஸ்ரொக்ஹோம் (Stockholm), மற்றும் மினமற்ற (Minamata) ஆகிய பிரகடனங்களின் தேசிய ஒருங்கிணைப்பு
    - ஓஸோன் அடுக்குகளைக் குறைக்கும் பொருட்கள் மீதான மொன்றியல் பிரகடனம்
    - யுனைற்ரட் நேஷன் ப்ரேம்வேர்க் கென்வென்ஷன் ஒன் கிளைமேற் சேன்ஜ் (UNFCCC).

சகல இமுச கருத்திட்டங்களும் இந்த சர்வதேச பிரகடனங்களுக்கு இணங்க செயற்படுமென உறுதிசெய்யப்பட்டது.

போதை மருந்துகள் மற்றும் சைக்கோட்ரொபிக் பொருட்களின் சட்டவிரோத போக்குவரத்துக்கு எதிரான பிரகடனம். இதற்கு முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபை (Precursor Control Authority) தலைமை தாங்கியது.

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

பணி	எண்ணிக்கை
1. (அ) கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட சூழல் அனுமதிகளின் எண்ணிக்கை	62
(ஆ) விரிவாக்கல்/இடமாற்றங்களுக்காக வழங்கப்பட்ட சூழல் அனுமதிகளின் எண்ணிக்கை	36
2. வழங்கப்பட்ட/புதுப்பிக்கப்பட்ட சூ.பா.அ. (EPLL) களின் எண்ணிக்கை	*987
3. தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தளங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட சு.ப. (ERR) களின் எண்ணிக்கை	**266
4. சூழல் சம்பந்தமாக சிக்கல்களைக் கவனித்து, தீர்த்துவைத்த பிரச்சனைகளின் எண்ணிக்கை	138
5. சுற்றாடல் கண்காணிப்பு	
(அ) கைத்தொழில் நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வெளிப்படும் மாதிரிகளின் எண்ணிக்கை	
(ஆ) பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியிலிருந்து சேகரிக்கப்பட்ட வெளிப்படும் மாதிரிகளின் எண்ணிக்கை	1,325
(இ) நீர் மாதிரிகளின் எண்ணிக்கை	247

* வருமானம் ரூபா . 10,198,150/- சூபாஆ (EPL) செயலாக்கத்திலிருந்து
* * வருமானம் ரூபா . 7,581,000/- தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவுவதற்கான சுஅ (ER) கட்டணம்

அனைத்து இமுச கருத்திட்டங்களும் இந்த சர்வதேச பிரகடனங்களுக்கு அமைவாகச் செயற்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் (EPLL) வழங்குதல் மூலமும், தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு சுற்றாடல் பரிந்துரைகள் (ERR) வழங்குதல் மூலமும் வருமானமாக ரூபா 17.779 மிலி. சம்பாதிக்கப்பட்டது. பிங்கிரிய ஏசெவ இன் சுபாம (EIA) பூர்த்தியாக்கப்பட்டதுடன், வடமேல் மாகாண சபையின் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறது.

ISO 9001:2008 தரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு முகாமைத்துவ முறைமையின் கீழ் 2017 ஆம் ஆண்டு இலக்கு அடையப்பெற்றது. இதன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கானது 98% சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தப்பட்டதாகும். இந்த இலக்கு அடையப்பட்டது.

பின்வரும் தொழில்நுட்பக் குழுக்களைப் பிரதிநிதிப்படுத்தியதுடன், அதன் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயல்முறைகளிலும் செயலூக்கத்துடன் பங்களிப்புச்செய்துள்ளது.

- ஏற்றுமதி செயலாக்க வலயம் மற்றும் கைத்தொழில் பூங்காக்கள் ஆகியவற்றிற்கு வெளியேயுள்ள உயர்ந்த, மற்றும் நடுத்தர அளவு சுற்றாடல் மாசடைதல் கைத்தொழில்களை தீர்மானிப்பதற்கான குழு
- பசல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு
- கைத்தொழில் இரசாயனங்களின் முகாமைத்துவத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (TACMIC)

இந்த மூன்று தொழில்நுட்பக் குழுக்கள் எல்லாவற்றிற்கும் மசுஅ தலைமை தாங்கியது.

11. பொறியியல் அங்கீகார மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு

பொறியியல் அங்கீகார மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு (பொஅ மற்றும் விக) பொறியியல் அங்கீகாரப் பகுதி, காணிகள் பகுதி என இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது. பொறியியல் அங்கீகாரப் பகுதி இமுச இன் அமைவிடங்கள் தொடர்பான அங்கீகாரங்களுக்கு ஒழுங்குபடுத்தும் கரமாக விளங்குவதுடன், இமுச இன் சட்டப் பிரிவு 17 இன் கீழ் செயற்படும் கருத்திட்டங்களுக்கான அமைவிடங்களை அங்கீகரித்தல், கட்டட வரைபடத்தை அங்கீகரித்தல், அளவையியல் சான்றிதழ் மற்றும் ஒப்பீட்டுச் சான்றிதழ் வழங்கல் என்ற நான்கு அடிப்படை சேவைகளை வழங்குகிறது. காணிப் பிரிவானது முதலீட்டு கருத்திட்டங்களுக்கு வழங்குவதற்காக வலயங்களில் உள்ளடக்கப்படாத இமுச க்குச் சொந்தமான காணிகள், அரச காணிகள், மற்றும் தனியார் காணிகள் பற்றிய காணி வங்கி ஒன்றைப் பராமரிப்பதற்கும், இற்றைப்படுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளது.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

பொறியியல் அங்கீகாரப் பகுதி

அமைவிடங்களை அனுமதித்தல் - அமைவிடங்களுக்கு அனுமதி வழங்குவது இமுச க்கும் முதலீட்டாளருக்குமிடையில் கைச்சாத்திடுவதற்கான முற்தேவைப்பாடாகும். பொஅ மற்றும் விக பிரிவானது சுற்றாடல் முகாமைத்துப் பிரிவுடன் இணைந்து ஆரம்ப அமைவிடப் பரிசீலனையை மேற்கொள்கிறது. அதன் பின்னர் ஏனைய தொடர்புடைய வெளி நிறுவனங்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, அமைவிடத்தின் பொருந்தக்கூடிய தன்மையை அடையாளம் காண்பதற்கு சுருக்கமான மதிப்பீடு மேற்கொள்ளப்படும். இறுதியாக, தொடர்புடைய சகல ஒப்புதல்களும் தொடர்புடைய நிரல் நிறுவனங்கள்/அதிகாரசபைகளிலிருந்து பெற்றுக்கொண்ட பின்னர் தள அங்கீகாரக் கடிதம் வழங்கப்படும்.

கட்டட அமைப்பு அனுமதித்தல் - கட்டட வடிவமைப்பு அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் மாத்திரமே உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டங்களின் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டும். தொடர்பான ஒழுங்குவிதிகளுக்கு தேவையான சகல நியமங்களுக்கும் அமைய உத்தேசிக்கப்பட்ட கட்டடங்களின் வரைபடங்கள் இருந்தால் கட்டட வரைபடத்துக்கான அனுமதி வழங்கப்படும்.

நிர்மாணப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அளவுச் சான்றிதழ் - இமுச இன் சட்ட 17 வது பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்ட பட்டியலிலுள்ள பொருட்களையும், பண்டங்களையும் வரி விலக்கு அடிப்படையில் இறக்குமதி செய்ய முடியும். பொஅ மற்றும் விக பிரிவின் பொறுப்பானது கருத்திட்டத்திற்காக நிர்மாணப் பொருட்களை / பண்டங்களை இறக்குமதி செய்யும்போது அவை தொடர்பான அளவுகளைச் சான்றுப்படுத்துவதாகும். கருத்திட்டத்திற்குத் தேவையென தற்போது இறக்குமதி செய்யப்பட்ட கப்பற் சரக்கின் அளவைப் பரிசீலனை செய்து, இதற்கு முன்னர் இறக்குமதி செய்த அளவுடனும், கருத்திட்டத்திற்குத் தேவையான மொத்தத் தேவையையும் மதிப்பீடு செய்த பின்னர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

இணக்கச் சான்றிதழ் - நிர்மாணம் முடிவடைந்தபின்னர் அது அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பொஅ மற்றும் விக பிரிவினால் தள பரிசீலனை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, இந்தப் பரிசீலனையின்போது வரி விலக்கு வசதிகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் / பண்டங்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக அவை பௌதீக ரீதியில் பரிசீலனை செய்யப்படுகின்றன.

காணிப் பகுதி

காணிப் பகுதி இமுச இன் கீழுள்ள முதலீட்டு கருத்திட்டங்களுக்கு காணியைப் பெற்றுக்கொள்வதற்கு முதலீட்டாளர்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது,

- இமுச வலயங்களை நிர்மாணிப்பதற்காக தேவையான சந்தர்ப்பத்தில் அரச காணிகளை/தனியார் காணிகளைச் சுவிகரித்தல்
- புதிய முதலீட்டாளர்களின் பாவனைக்காக அரச மற்றும் தனியார் காணிகள் பற்றிய காணி வங்கியொன்றைப் பராமரித்தல்
- காணி தொடர்பான விடயங்களில் இமுச இன் சட்டப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு உதவிகளை வழங்கல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- பிங்கிரியவில காணி சுவீகரிப்பு
- 2019 ஆம் ஆண்டு பிங்கிரிய ஏசெவ த்தை அமைப்பதற்காக இமுச இற்கு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து சுமார் 440 ஏக்கர் காணி சுவீகரிப்பு செய்யப்பட்டு, சுவீகரிப்பு செயற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டன.
- பலதக்ஷி மாவத்தையிலுள்ள காணி தொடர்பான உரிமையாக்கும் நடவடிக்கைகள் நடப்பாண்டில் பூர்த்தியாக்கப்பட்டது
- அம்பாந்தோட்டையில் காணிகள் சுவீகரிப்பு
- அரபொக்க, அம்பாந்தோட்டையிலிருந்து சுமார் 950 ஏக்கர் விஸ்தீரணமான காணித் துண்டின் அளிவையிடல் மற்றும் உரிமையாக்கல் அனேகமாகப் பூர்த்தியாக்கப்பட்டு, இலங்கை மகாவலி அதிகார சபையினால் உரிமையாக்கும் கட்டளைகள் பூர்த்தியாக்கப்பட்டு ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- மொத்தமாக சுமார் 107 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெல் வயல் காணிகளின் சுவீகரிப்பு நடந்துகொண்டிருக்கிறது
- மில்லானிய ஏசெவ இற்காக காணிகள் சுவீகரிக்கப்படல்
- சுமார் 240 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணிகள் சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் தோட்டக் கம்பனிகளால் ஆட்சேபனை தெரிவித்ததன் காரணமாக பூர்த்திசெய்ய முடியவில்லை

12. கைத்தொழில் உறவுகள் பிரிவு

இமுச தொழில்முயற்சிகளின் உயர்ந்த செயல்திறன் மற்றும் உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்கு உகந்த கைத்தொழில் உறவுகளைச் சிறந்த முறையில் பேணுவதில் இமுச இன் கைஉ (IR) பிரிவு முக்கிய பாகத்தை வகிக்கிறது.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- இமுச இன் அதிகார வரம்புக்கு உட்பட்ட தொழில்முயற்சிகளின் தொழில் முகாமைத்துவ ஒத்துழைப்பு, கைத்தொழில் அமைதி மற்றும் ஐக்கியம், மற்றும் உயரிய மட்டத்திலான உற்பத்தித் திறன் என்பவற்றைப் பேணுவதை ஊக்குவிப்பதுடன், வசதியும் வழங்குதல்.

- தேவையான இடங்களில் முகாமைத்துவத்திற்கும், இமுச தொழில்முயற்சிகளின் தொழிலாளர்களுக்கு தொழில் சட்டம்/ஒழுங்குமுறைகள் மற்றும் கைஉ நடைமுறைகள் தொடர்பான ஆலோசனைச் சேவைகள் மற்றும் வழிகாட்டல்களையும் வழங்குதல்

- ஏசெவ களில் இயங்கும் இமுச இன் வேலைவாய்ப்பு சேவை அலகின் மூலம் முதலீட்டாளர்கள் தங்களுடைய மனித சக்தி தேவையை நிவர்த்திசெய்வதற்கு உதவுவதுடன், ஆட்சேர்ப்புக்கு உதவுதல் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல்.

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- தொழில் தரத்தை பேணுதல்

  தொழில் சட்டங்கள்/ஒழுங்குமுறைகள் மற்றும் இமுச இன் தொழில் தரங்கள் மற்றும் தொழில்வாய்ப்பு சம்பந்தமான கையேட்டில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் தரங்களுக்கு இணங்க உள்ளனவா என்பதைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் வலயங்களைச் சேர்ந்ததும், இமுச இன் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்ததுமான கைத்தொழில் உறவுகள் உத்தியோகத்தர்களினால் இமுச கருத்திட்டங்களில் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொழில் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகிறது.

  2019 ஆம் ஆண்டில் வலயங்களிலும், வலயங்களுக்கு வெளியேயும் அமைந்துள்ள 1119 இமுச தொழில்முயற்சிகளில் தொழில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்குறிப்பிட்ட கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள் / தவறுகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தொழில் முகாமைத்துவ ஒத்துழைப்பை மேம்படுத்தல்

  இமுச தொழில்முயற்சிகளில் தொழில் முகாமைத்துவ ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான கருவி ஊழியர் சபைகளாகும். தொழிற்சங்கங்களுடன் ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தலை மேற்கொள்கின்ற அதேவேளை இமுச தொழில்முயற்சிகளில் தொழில் முகாமைத்துவ ஒத்துழைப்புகளில் ஊழியர்கள் பரந்த அளவில் பங்குபற்றுவதை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஊழியர் சபைகள் வழிகாட்டப்படுகின்றன

  2019 ஆம் ஆண்டில் தைக்தொழில் உறவுப் பிரிவினால் 206 ஊழியர் சபைகள் ஏற்படுத்தப்பட்டு, செயற்படுவதற்கு வசதியளிக்கப்பட்டன.

- தொழிலாளர் வசதிவழங்கும் நிலையங்கள் தாபித்தல்

  2019 ஆம் ஆண்டில் கட்டுநாயக்க, பியகம, ஹொக்கல வத்துபிற்றிவல ஏசெவ கள் மற்றும் கண்டி தொழில்நுட்பப் பூங்காவில் தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் அந்தந்த வலயங்களில் சேவையாற்றும் அவர்களின் அங்கத்தவர்களை அவர்களுக்குத் தேவையானபோது சுதந்திரமாகவும், தனிப்பட்டமுறையிலும் சந்திப்பதற்குப் பயன்படுத்துவதற்காக வசதிவழங்கும் நிலையங்கள் ஐந்து (5) செயற்படுகின்றன.

- விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல்

  பொருத்தமான அரச முகவர் நிறுவனங்களுடன் இணைந்து 2019 ஆம் ஆண்டில் இமுச தொழில்முயற்சிகளின் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கு சமூக உரையாடல், பொதுவான விழிப்புணர்வு, வேலைத் தள ஒத்துழைப்பு, மதிப்புடன் வேலை செயற்பாடுகள், சுகாதாரமும் பாதுகாப்பும் போன்ற பல்வேறு தரப்பட்ட விடயங்களில் 264 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

■ கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக தலையீடு/இணக்கப்பாடு

இமுச தொழில்முயற்சிகளில் கைத்தொழில் அமைதி மற்றும் ஐக்கியத்தைப் பேணும்போது, தொழில் முயற்சிகளில் ஏற்பட்ட எந்தவொரு கைத்தொழில் பிணக்கினையும் தீர்ப்பதற்கு கைஉ உத்தியோகத்தர்கள் தலையிடுவர். 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 14 கைத்தொழில் பிணக்குகள்/வேலைநிறுத்தங்கள் தேவையான இடத்தில் தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் தீர்த்துவைக்கப்பட்டன.

■ ஆட்சேர்ப்பு உதவித் திட்டம்

2019 ஆம் ஆண்டில் 75,022 எண்ணிக்கையிலான தொழில் தேடுவோர் ஏசெவ களிலுள்ள தொழில்வாய்ப்பு சேவைப் பிரிவுகளில் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 74,447 எண்ணிக்கையிலானோர் அதற்கான நேர்முகப் பரிட்சைக்காக தொழில்முயற்சிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக இப் பிரிவு, இமுச இன் தொழில்முயற்சிகளில் காணப்படும் தொழில்வாய்ப்புக்களுக்கு கூடுதலான தொழில் தேடுவோரைக் கவரும் நோக்கத்தில் வேறு உரிய முகவர் நிறுவனங்களுடன் இணைந்து தொழில் சந்தை/தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்வதற்கு உதவுகிறது. மீளாய்வுக்கான கால எல்லைக்குள் நாடு பூராகவும் அவ்வாறான தொழில் சந்தைகள்/தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் 21 நடாத்தப்பட்டுள்ளன.

■ பகற் காப்பு நிலையம் (Creche) மற்றும் முன் பள்ளி

கஏசெவ மற்றும் பிஏசெவ இலும் பகல் காப்பு நிலையங்கள் தாபித்து, தங்களுடைய குழந்தைகளை வலயங்களுக்குள் ஒரு பாதுகாப்பான இடத்தில் தங்கவிட்டு, தங்களுடைய வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்கு விரும்பிய ஊழியர்களுக்கு ஒரு உறுதியான தீர்வாக அமைந்ததுடன், இவை உயர்ந்த தொழில் பிறழ்வை. (turnover) க் குறைப்பதற்கான ஒரு தீர்வை வழங்குவதாகவும், புதிதாகச் சேர்ந்துகொள்கின்றவர்களுக்கு (new recruits) வலயத்தைப் பற்றி கவரக்கூடிய அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. ஆண்டு முடிவில் கஏசெவ இல் 60 பிள்ளைகளுக்கு வசதி அளிக்கப்பட்டதுடன், அவர்களுள் 45 பேர் முன்பள்ளியில் பங்குபற்றினார்கள். பிஏசெவ இல் 29 பிள்ளைகளுக்கு வசதியளிக்கப்பட்டதுடன், அவர்களில் 15 பேர் முன் பள்ளியில் பங்குபற்றினார்கள். மாவத்தகம ஏசெவ இல் 27 பிள்ளைகளுக்கு வசதியளிக்கப்பட்டதுடன், அவர்களுள் 16 பேர் முன் பள்ளியில் பங்குபற்றினார்கள்.

13. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

இமுச இற்குத் தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், மதிப்பிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிற்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் த.தொ.தொ(ICT) வளங்களின் பெறுகை, நிறுவுதல் மற்றும் பராமரித்தல் என்பனவற்றையும் இப் பிரிவு ஒருங்கமைக்கிறது.

ததொ பிரிவு தொடர்பாடலுக்கான வன்பொருள் மற்றும் மென்பொருளுடனான த.தொ. (IT) உட்கட்டமைப்பை வழங்குவதுடன், அதன் பயன்படுத்துனர்களுக்குத் தேவையான சகல த.தொ. தேவைகளையும் இரவு பகலாக வழங்குவதற்குமாக நிறுவனத்தின் இணைந்த வலயமைப்பை முகாமைத்துவம் செய்கிறது.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- நிறுவனத்திற்கு த.தொ. தீர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல், நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
- இமுச இன் த.தொ.தொ. வளங்களைத் திட்டமிடுதல், பரிந்துரைத்தல், பெறுகைகளை ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல்.
- இணைந்த வலைப்பின்னல்கள் மற்றும் தரவு தொடர்பாடல்கள் வசதிகளை மேம்படுத்துதலும், முகாமைத்துவம் செய்தலும்.
- நிறுவனத்தினால் வேண்டப்படும் மென்பொருள் பிரயோக முறைமையை வடிவமைத்தல், அபிவிருத்திசெய்தல். நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல்.
- வன்பொருள், மென்பொருள் தொடர்பாடல், வலையமைப்பு, மின்னஞ்சல் மற்றும் வைரஸ் தாக்கல் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பயன்படுத்துனர் உதவியை வழங்கல்.
- வியாபாரத்தை மீண்டும் தயாரிக்கும் முயற்சிகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு ஏனைய பிரிவுகளுக்கு உதவி வழங்குதல்.
- இணைந்த தரவு அகராதி, தரவுத்தளம் மற்றும் தொடர்புடைய முறைமை ஆவணப்படுத்தலை அபிவிருத்தி செய்தலும், பராமரித்தலும்.

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

த.தொ. வளங்களையும் உட்கட்டமைப்பையும் மேம்படுத்துதல்

- இரண்டு எண்ணிக்கையான 15 KVA UPS களைத் தாபிப்பதன் மூலம் இமுச சேவையகம் (Server Room) மேம்படுத்தப்பட்டது.
- வலைப் பிரயோகங்களுக்கும், தரவுத் தள காப்புகளுக்கமாக இரண்டு எண்ணிக்கையிலான உயர்முடிவு சேவையகங்களை இமுச நிறுவியது.
- மூன்று எண்ணிக்கையிலான புதிய தரவு கேபிள்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் இமுச இன் CVT அலுவலகத்தின் இமுச வலையமைப்பு விரிவாக்கப்பட்டது.
- UTP மற்றும் இழை (fiber) உடனான 14 எண்ணிக்கையினாலான தரவு கேபிள்கள் தாபிக்கப்பட்டு, ஒரு புதிய கணனி வலையமைப்புடன் க.ஏ.செ.வ. அனுமதி (Permit) அலுவலகம் அமைக்கப்பட்டது.
- ஏழு எண்ணிக்கையான புதிய வலையமைப்பு கேபிள்களின் விரிவாக்கத்தைப் பதிப்பதன் மூலம் சீஏசெவ (SEPZ) இன் வலையமைப்பானது மேம்படுத்தப்பட்டது.
- வலயங்கள் உட்பட இமுச அலுவலகங்களுக்கு 134 எண்ணிக்கையான தனியார் கணனிகள், பத்து எண்ணிக்கையான மடிக் கணனிகள் மற்றும் 48 எண்ணிக்கையான அச்சு இயந்திரங்கள் பெறுகை செய்து தாபிக்கப்பட்டது
- பயன்பெறுனர்களின் உற்பத்தித் திறனையும், நிறுவக வலையமைப்பையும் மேம்படுத்துவதற்கு 194 எண்ணிக்கையிலான UPS களும், அதனுடன் தொர்பான வலையமைப்பு கருவிகளும் (NIC ஊடக மாற்றிகள் போன்றவை) பெறுகை செய்து தாபிக்கப்பட்டது.

மென்பொருள் இடுகைகளின் அபிவிருத்தி மற்றும் அமுல்படுத்தல்

- முற்கொடுப்பனவு கணக்கு மற்றும் விலைப்பட்டியல் இணக்கப்படுத்தல் தேவைகளுக்காக ஒரு LPOPP அமுல்படுத்தப்பட்டது.
- ஓறாக்கிள் நிதி முறைமை (EBS) உடன் இமுச கொடுப்பனவுகள் தொடர்பான சேவை முறைமை ஒருங்கிணைக்கப்பட்டது,
- ஒருங்கிணைப்பு கணக்கீட்டு முறைமையை அமுல்படுத்துவதற்கு நிதிப் பிரிவிற்கு உதவியது.

தற்போதுள்ள முறைமையை முன்னேற்றுதல்

- விசாக்களைப் பரிந்துரைக்கும் முறைமை - பயன்படுத்துனரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முறைமைக்குப் பல்வேறு மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலும் விரிவான தீர்மானங்களை எடுக்கும் தகவல்களுடன் முகாமைத்துவத்திற்கு வசதிகளை வழங்குவதற்காக பல அறிக்கை மாற்றியமைவும் வழங்கப்பட்டன.
- நே.வெ.மு. பின் அலுவலக முறைமை (back office system) மற்றும் இணையவழி முறைமை: இரண்டு முறைமைகளும் இணைத்து, அதன்படி நே.வெ.மு. இணைய வழியில் சமர்ப்பிக்கும் முறைமையின் அம்சங்களுடன் இணைப்பதற்கு மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- பயன்படுத்துனர் பிரிவுகளின் மாற்றமடையும் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய வகையில் மு.த.தொ.(MIS), நிலைமை மாற்றங்கள் முறைமை என்பனவற்றில் மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

14. ஊடக மற்றும் பிரச்சாரப் பிரிவு

இமுச ஊடக மற்றும் பிரச்சாரப் பிரிவு இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள், நாட்டின் வியாபாரச் சூழல், நிறுவனத்தின் வெற்றிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறுபட்ட ஊடகங்கள் மூலமாகப் பல்வேறு வகையான பார்வையாளர்களை நோக்கிக் கவனம் செலுத்தும் வெளித் தொடர்பாடலுக்குப் பொறுப்பாகவுள்ளது.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அடிக்கடி ஊடக அறிக்கைகளைப் பரப்புதல்
- துண்டுப் பிரசுரம், சிறு பிரசுரங்கள், ஆவணப்படங்கள் போன்ற ஊக்குவிப்பு பொருட்களை வடிவமைத்தலும் மேம்படுத்தலும்
- பெற்றுக்கொள்ளக்கூடிய காணி, விசேட நிகழ்வுகள் மற்றும் விழாக்கள் பற்றிய விளம்பரங்கள் பிரசுரித்தல்
- முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள், பிரதிமையினைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மற்றும் கண்காட்சிகள் போன்ற தேசியமட்ட நிகழ்வுகளில் பங்குபற்றல்.
- அசையா புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகள் உள்ளிட்ட பிரதிமை வங்கி ஒன்றைப் பேணுதல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

ஊடகப் பிரிவு 2019 ஆம் ஆண்டில் பல முக்கியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. கண்காட்சிகளில் பங்குபற்றியமை, ஊடகக் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தமை, அபிப்பிராயத்தை உருவாக்கும் பிரச்சாரங்கள், ஊடக வெளியீடுகள், சமூக ஊடக நடவடிக்கைகள், விளம்பரங்களையும் இமுச வெளியீடுகள் போன்றவற்றையும் வடிவமைத்தல் என்பன இவற்றுள் அடங்கும்.

அ) கண்காட்சிகளில் பங்குபற்றுதல்:

ஊடகப்பிரிவு 2019 இல் முக்கிய தேசிய கண்காட்சிகளில் பங்குபற்றியது.

- யாழ்ப்பாணத்தில் "என்ர்பிரைஸ் ஸ்ரீலங்கா" (Enterprise Sri Lanka) கண்காட்சியும், "ஜப்னாட்ரேட் பெயார்" உம்
- வீரவிலவில் "யுவன்புர நஷனல் ப்ரோகிராம்" கண்காட்சி
- கொழும்பு (BMICH)இல் "சில்பா சேனா" கண்காட்சி
- மாவனல்ல மற்றும் கலிகமுவவில் "BOI ஜொப் பெயார்" (BOI Job Fair)

இமுச இன் மேற்படி காட்சிக்கூடங்களின் மூலம் நேரடி வெளிநாட்டு முதலீடு, அந்நிய செலாவணி, ஏற்றுமதி மூலம் தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் தொழில்நுட்ப மாற்றுகள் என்பவற்றின் சாதகமான விளைவுகளையும், இவற்றின் அடிப்படையில் தேசிய பொருளாதாரத்தில் முதலீடு பற்றியும் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

ஆ) பத்திரிகையாளர் மாநாடுகளை ஒழுங்குசெய்தல்:

ஊடகப் பிரிவு மொத்தமாக 3000 புதிய புகைப்பட பிரதிமைகளைக் கொண்டு பிரதிமை வங்கி அமைத்து, அபிவிருத்தி செய்தது. இந்த புகைப்பட சுவடிகளான திறன் மேம்பாட்டிற்கான உதாரணங்கள் சபையின் பரந்த அளவிலான நடவடிக்கைகளையும், பலவிதமான பொருளாதார துறைகளையும் உள்ளடக்குவதனால் வெளியீடுகள் ஆவணங்கள் மற்றும் ஊடக அறிவித்தல்கள் ஆகியவற்றை விளக்குவதற்குப் பயன்படுத்தலாம்.

இதற்கு மேலதிகமாக இலங்கையின் வர்த்தக சூழலை மேம்படுத்துவதற்காக கொரிய மற்றும் ஜப்பானிய மொழிகளில் இரு குறும் திரைப்படங்கள் தாயரிப்பதற்கான தொடக்க முயற்சியை ஊடகப் பிரிவு மேற்கொண்டது.

இலங்கையை உலகில் முன்னிலைப்படுத்தும் முகமாக குமார் சங்கக்கார மற்றும் மகேல ஜயவர்தனவுடன் சேர்ந்து "துபாய் எக்ஸ்போ 2020" என்னும் குறும் வீடியோவும் இமுச இன் ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்டது.

இ) ஊடக அறிக்கைகள்:

தகவல்களைப் பரப்பும் பகுதியில் இமுச இன் ஊடகப் பிரிவு இமுச இன் வகிபாகம் மற்றும் முதலீட்டு முன்னணியில் செய்த சாதனைகள் பற்றி கணிசமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு 43 எண்ணிக்கையிலான ஆங்கில ஊடக அறிக்கைகளையும், 15 எண்ணிக்கையிலான சிங்கள ஊடக அறிக்கைகளையும், தமிழ் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

ஈ) சமூக ஊடக தொழிற்பாடுகள்:

பல நடவடிக்கைகளை உள்ளடக்கி ஏராளமான எண்ணிக்கையான ரூவீற்ஸ்களை (Tweets) ஊடகப்பிரிவு அனுப்பியுள்ளது.

■ **உள்ளக வடிவமைத்தல்**

விசேட நிகழ்வுகளுக்கான பல பின்னணி அமைப்புக்களையும், 2019 ஆம் ஆண்டு பணிப்பாளர் நாயகத்திற்காக புதுவருட வாழ்த்து மடல் ஒன்றையும், பங்குபற்றல் கையேடுகள், சிறு வெளியீடுகள், பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், அடையாள அட்டைகள், பென் டிரைவ்கள் (pen drives), நீட்டிவிடக்கூடியதான பதாதைகள், ஆண்டறிக்கை அட்டைப் பக்கம், ம.வ. பிரிவிற்கு குறிப்புப் புத்தக முன்அட்டை மற்றும் இமுச முதலீட்டு வழிகாட்டி 2019 சிற்றேடு என்பனவற்றை வடிவமைத்துள்ளது. இந்த ஆவணங்களுக்கான உள்ளக வடிவமைப்பு இமுச க்கு அதன் வளங்களில் கணிசமான அளவு சேமிப்பை ஏற்படுத்தியுள்ளது.

■ **ஊடக உள்ளடங்குகை:**

ஊடகப் பிரிவானது பின்வரும் முக்கிய நிகழ்வுகளுக்கு ஊடாக உள்ளடங்கையை ஒழுங்குசெய்துள்ளது:

- பிங்கிரிய ஏற்றுமதி செயற்பாட்டு வலய திறப்பு விழா
- மிரிஞ்சாவில ஏசெவ ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் சீமெந்து உற்பத்தி இயந்திரத்தை தாபிப்பதற்காக நில அகழ்வு விழா
- ஹொரணை ஏசெவ இல் கடின றப்பர் ரயர் தொழிற்சாலைக்கு அமைச்சர் சார்ந்த விஜயம்
- போகம்பரவில் பொழுதுபோக்கு திட்டத்தின் திறப்பு விழா

■ **விளம்பரங்கள்:**

2019 இல் ஊடகப் பிரிவினால் 05 புதினப்பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டன.

15. நிர்வாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவு இமுச இல் ஒரு முக்கிய பங்காற்றி வருவதுடன், நிறுவனத்தின் இலக்கினை அடைந்துகொள்வதற்காக ஏனைய சகல பிரிவுகளுக்கும் தளவாட ஒத்தாசை வழங்குகிறது. சுமுகமானதும், வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இப் பிரிவு பின்வரும் தொழிற்படும் உப அலகுகளைக் கொண்டிருக்கிறது: களங்சியம் மற்றும் வழங்கல் அலகு, போக்குவரத்து அலகு, பராமரிப்பு அலகு, அஞ்சல் மற்றும் பொது நிர்வாகம் என்பனவாகும்.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- இமுச க்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்புகளைத் துரிதப்படுத்துகின்ற உள்ளக மற்றும் வெளிவாரி அஞ்சல் சம்பந்தமான நடவடிக்கைகளைக் கையாளுதல்
- குடிநீர், தேநீர், துப்பரவு ஏற்பாட்டு சேவைகள், தொலைபேசி போன்றவற்றின் தடையற்ற தொடர்ச்சியான செயற்பாட்டைப் பராமரித்தல்
- தலைமையக அலுவலகத்தில் இமுச அலுவலக மாடிகளைப் பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் அன்றாட பொது நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
- நிலையான சொத்துக்களுக்கு காப்புறுதி காப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல்
- மின்சாரம், நீர். தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்ற தேவைகளை வழங்குனர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கான ஆவணங்களைத் தயாரித்தல்
- வாகனங்களைக் கொள்ளல் மற்றும் கைதவிர்த்தல், வாகனக் குழுமத்தை முகாமைத்துவம் செய்தல்
- கருத்திட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கல், வாகனங்களைப் பராமரிப்பதற்கு வலயங்களுக்கு உதவுதல்
- நிறுவனத்திற்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் கொள்ளல் (காகிதாதிகள், அலுவலக தளபாடமும் சாதனமும் உதவிச் சேவைகள் போன்றவை)
- தலைமை அலுவலகத்தின் பொதுக் களஞ்சியத்தைப் பராமரித்தல்
- அனுராதபுரத்திலும், நுவரெலியாவிலுமுள்ள இரண்டு சுற்றுலா விடுதிகளின் செயற்பாடுகள்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- பொருளாதார ரீதியில் இலாபமற்று, பாவனையில் இல்லாத வாகனங்களைத் தொடர்ச்சியான கட்டங்களில் கைதவிர்த்தலுக்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. வாகன குழுமத்திற்குப் புதிய வாகனங்களின் பெறுகைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பின்வரும் வாகனங்கள் இக் குழுமத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. (ஐந்து மோட்டார் வண்டிகள், ஆறு டபிள் கப்ஸ், எட்டு தீயணைப்பு இயந்திரங்கள் மற்றும் ஒரு நீர் பவுசர்)
- ததொ பிரிவிலுள்ள இமுச சேவையகத்தில் இரண்டு புதிய குளிரூட்டிய நீர்தொகுதி வகையான வாயு சீராக்கி அலகுகள் தாபிக்கப்பட்டன.
- தகவல் தொழில்நுட்பப் பிரிவின் சேவையகத்திற்கு புதிய மின் குழு பலகைகள் வழங்கல், கட்டருவாக்கல் (fabrication) மற்றும் தாபித்தலுடன் மின்சார கம்பி இணைப்பையும் மேற்கொள்ளல்
- CCTV கமரா முறைமை மற்றும் உட்புகல் கட்டுப்பாட்டுக் கதவு முறைமை என்பவற்றைத் தாபித்தல் மூலம் உலக வர்த்தக மையத்திலுள்ள இமுச இன் தலைமையகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- உவமை கட்டடத்திலுள்ள பல பிரிவுகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன.
- வழக்கமான கொள்வனவு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இவ் வருடத்தில் பூர்த்தியாக்கப்பட்ட பிரதான பெறுகைகள் வருமாறு: ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தின் புதிய தர கண்காணிப்பு ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் மற்றும் 49 எண்ணிக்கையிலான தனிப்பட்ட கணனிகள் வழங்கல்
- பிங்கிரிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் உள்ள இமுச அலுவலகத்தை மேம்படுத்தல்
- கட்டுநாயக்க விமான பொதி கிராமத்தில் விசகில (ACVU) மற்றும் ACDU அலுவலகங்களுக்கு அலுவலக தளபாடங்களையும் வழங்கி, பொருத்துதலுடன், ஏனைய மேம்பாடுகளையும் மேற்கொள்ளல்

16. மனித வள முகாமைத்துப் பிரிவு

நிறுவனத்தினதும், ஊழியர்களினதும் இலக்குகளை அடைவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் விருத்தி செய்து, அமுல்படுத்துவதன் மூலம் சபையின் மொத்த மனித வளங்களையும் முகாமைத்துவம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள பிரதான பிரிவு மனித வள முகாமைத்துப் பிரிவாகும். இதன் பிரதான கடமைகளாவன: மனித வளத்தைத் திட்டமிடல், செயலாற்றுகை மதிப்பிடு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி, ஒழுக்க விழுமியங்களைப் பராமரித்தல், வருகை மற்றும் விடுமுறை சம்பந்தமான ஆவணங்களைப் பராமரித்தல், ஊழியர் நலன்புரிச் சேவைகள் வழங்கல் என்பனவாகும்.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- நிறுவனத்தின் மொத்த கூட்டாண்மை ரீதியான நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பயனுள்ளதும், சாத்தியமானதுமான மனித வள கட்டமைப்பைப் பேணுதல்
- உறுதியான தலைமைத்துவம் / திறமைகளைக் கொண்ட அணியினை அடையாளம் காணுதல், மேம்படுத்தல் மற்றும் பேணுவதற்குமாக வலுவான மற்றும் வெளிப்படைத் தன்மையைக் கொண்ட பொறிமுறை ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஊழியர்களின் அறிவு, திறமைகள் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் மனித மூலதனத்தை மேம்படுத்துதல்
- ஊழியர்களுக்கான நலன்புரி நன்மைகளை வழங்குதல்.
- மனிதவள நடைமுறைகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு மனித வள நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- **புதிய ஆட்சேர்ப்புகள்:**

நிறைவேற்று உத்தியோகத்தர்கள்	19
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப வகுதி)	10
ஆரம்ப மட்டம் (தேர்ச்சி பெற்றோர் வகுதி)	01

- **நிரந்தர ஆளணிக்கு உள்வாங்கப்பட்டோர்**

முகாமைத்துவ பயிலுனர்கள்	48
ஒப்பந்த ஊழியர்கள்	87
அமைய ஊழியர்கள்	98

- **உயர் தரங்களுக்குப் பதவி உயர்வு**

நிறைவேற்று உத்தியோகத்தர்கள்	46
முகாமைத்துவ உதவியாளர்	49
ஆரம்ப மட்டம்	29

- **பதவியினர் பயிற்சி**

வெளிநாட்டுப் பயிற்சி	30
முதுமாணி பட்ட நிகழ்ச்சிகள்	09
உள்ளூர் பயிற்சி (மென் திறன்கள்)	217
நிறுவனத்திற்குள் பயிற்சி நிகழ்ச்சிகள்	827
மொத்தம்	1,083

- **தொழிலில் இருக்கும்போது பயிற்சி**

இமுச இன் நிறுவன ரீதியான சமூக பொறுப்பு எனக் கருதி ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களிலிருந்து 62 பயிலுனர்களுக்கு பல்வேறு துறைகளில் தொழிலில் இருக்கும்போது பயிற்சி வழங்கப்பட்டது.

17. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இமுச வின் கடமைகளில் மதிப்பு கூட்டலை உறுதி செய்வதுடன், அதன் செயற்பாடுகளை மேம்படுத்தி, நிறுவனத்தின் நோக்கங்களை ஒரு முறையான, ஒழுக்கமான அணுகுமுறையின் மூலம் சாதிப்பதற்கு உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் நிறுவன நிர்வாகத்தினை மதிப்பீடு செய்து செயல்திறனை மேம்படுத்துவதில் உள்ளக கணக்காய்வு கவனம் செலுத்துகிறது.

அதற்கிணங்க உள்ளக கணக்காய்வுப் பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொண்டது:

- சொத்துக்களின் இருப்பை மதிப்பீடு செய்து, அந்த சொத்துக்களைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான பாதுகாப்பு முறைமையை பரிந்துரைத்தது
- உள்ளக கட்டுப்பாட்டின் போதுமான அளவை மதிப்பீடு செய்து, அவற்றிற்கான மேம்பாடுகளைப் பரிந்துரைத்தது
- சட்டங்கள், விதிகள் ஒழுங்குமுறைகள், கொள்கைகள், நடைமுறைகள், ஒப்பந்த கடமைகள் போன்றவற்றுடன் இணங்குவது மதிப்பீடு செய்யப்பட்டது.
- முடிவுகள் நிறுவப்பட்ட குறிக்கோள்களுடன் ஒத்துப்போகின்றனவா என்பதையும், செயற்பாடுகள்/நிகழ்ச்சிச் திட்டங்கள் திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும், அவை வினைத்திறனுடனும், செயற்திறனுடனும் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும் கண்டறிவதற்கு செயற்பாடுகள்/நிகழ்ச்சிச் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- முறைப்பாடு செய்யப்பட்ட மோசடி, கையாடல், களவு, சேதம் போன்றவை விசாரணை செய்யப்பட்டது.
- வழிகாட்டுதல்களை வரைவதிலும், வடிவமைப்பு வேலையிலும் உதவி, ஆலோசனையும் வழங்கியதுடன், ஆபத்தைத் தணிக்கும் நோக்கத்துடன் அறிவுறுத்தல்களைச் செயல்முறைப்படுத்தல்
- நிதிசார் மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடலுக்கான நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல்
- கணக்காய்வு குழுவிற்கு அறிக்கையிடப்பட்டதுடன், கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- சட்டரீதியான அறிக்கையிடல் சரியான நேரத்தில் செய்யப்பட்டது (கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பொது தொழில்முயற்சிகளின் குழு (COPE), திறைசேரி மற்றும் நிரல் அமைச்சு போன்றன)

மேற்கூறப்பட்ட கடமைகளைச் செய்த வேளையில், நிறுவன நடவடிக்கைளில் ஆபத்தைக் குறைக்கும் நோக்கத்துடன், உள்ளகக் கட்டுப்பாடுகள் கொள்கைகளைப் பின்பற்றுதல், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் என்பன முறையாகச் செயல்படுகின்றதற்கான நியாயமான உத்தரவாதம் வழங்குவதற்காக முழு நிறுவனத்தையும் உள்ளடக்கியதாக குறிப்பிட்ட கால கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க, நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நோக்கத்துடன் முறைமைகளும், இணக்க கணக்கீடுகளும் உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்து, ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்யும் அதேவேளை வழமையான கடமைகளை மதிப்பீடு செய்ததுடன், நடவடிக்கைகள் / நடைமுறைகளில் நேர்மை மற்றும் நியாயத்தை உறுதி செய்வதற்கு நிதிசார், கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றுடன் உள்ளகக் கணக்காய்வு முகாமைத்துவத்தின் பணிப்பின் அடிப்படையில் பொதுச் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியமை / முறைகேடுகளைக் கண்டறியும்பொருட்டு விசேட விசாரணை கணக்காய்வுக்காக அதன் நேரத்தின் குறிப்பிட்டளவு பகுதியையும், வளங்களையும் செலவழித்தது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு கணக்காய்வாளர் / தலைமை அதிபதி, பொது தொழில்முயற்சிகளின் குழு (ஊழீநு) , நிரல் அமைச்சு மற்றம் வெளிவாரி தரப்பினர் என்பவர்களின் தேவைகளை ஒருங்கிணைத்ததுடன், அத்தகைய பங்குதாரர்களுக்கு சட்ட ரீதியான மற்றும் பிற தேவைகளின் அடிப்படையில் சமர்ப்பிப்புகளை மேற்கொண்டது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட அதேவேளை உள்ளகக் கணக்காய்வு, தலைவர் / பணிப்பாளர் நாயகத்திறகு நேடியாக அறிக்கையிடல் மூலம் சுதந்திரத்தைப் பேணியதுடன், கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்காக குழுவுடன் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது.

18. பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு

இமுச இன் பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு இமுச வலயங்களில் அமைந்துள்ள தொழில்முயற்சிகள் அடங்கலாக மனித உயிர்களின் பாதுகாப்பு மற்றும் சொத்து பாதுகாப்பு என்ற அடிப்படையான பாகத்தைக் கொண்டுள்ளது. பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பணியாளர்களை அமர்த்தி, இமுச இன் உள்ள முதலீட்டாளர்களுக்கு தேவையான நேரத்தில் அவர்களைப் பலப்படுத்தி, வசதிகள் செய்யும். வலயங்களுக்குள் அமைந்துள்ள இமுச தொழில்முயற்சிகள் இமுச பாதுகாப்பினராலும், தீயணைப்புப் படையினராலும் பாதுகாக்கப்படும்.

இந்தப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- CCTV கமரா உள்ளடங்கலுடன் பாதுகாப்பு முனைகளில் இரவு பகலாக சகலவித பாதுகாப்பும், தொழில்முயற்சிகளிலுள்ள பாதுகாப்பு அலுவலர்களுடன் ஒருங்கிணைத்தல்.
- ஒரு தொழில்முயற்சி சிறப்பு கோரிக்கை விடுக்கும் சமயத்தில் சாதாரணமான வழக்கத்திற்கு மேலாக உதவி வழங்கல்.
- புலனாய்வு சேவையைப் பேணி, தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
- வலயங்களுக்குள் அமைந்துள்ள தொழில்முயற்சிகளில் ஏற்பட்ட தீயணைப்பு அழைப்பு மற்றும் அவசர நிலைமைகளில் நடவடிக்கை எடுத்தல்.
- தொழில்முயற்சிகளில் தீ தடுப்பு, ஆய்வுகள் மற்றும் தீ விபத்து மதிப்பீடுகள் (அனைத்தும் அடங்கலாக).
- தொழில்முயற்சி ஊழியர்களுக்கு தீ அணைப்பு பயிற்சியும், விழிப்பணர்வு நிகழ்ச்சிகளும் நடத்துதல்.
- தொழிற்சாலை பணியாளர்களுக்கு தீ அணைப்பு உபகரணங்களைக் கையாளும் பயிற்சி.

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

- இப் பிரிவு அறிவை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பாதுகாப்பு தரப்பினருக்கு பயிற்சி நெறிகளையும், மாதாந்த பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடத்தியது. தீயணைப்பு உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு தீயணைப்புப் படையில் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய பரிந்துரைக்கப்பட்ட தீயணைப்பு நிறுவனங்களும் அவர்களுக்கு பரந்த அறிவைக் கொடுப்பதற்காக ஒழுங்குசெய்யப்பட்டது.
- இலங்கை போதைப்பொருள் தடுப்பு பணியகம், தொடர்புடைய காவல் நிலையங்கள், சமூக சேவைகள் மற்றும் சகல இமுச வலயங்களிலும் அமர்த்தப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உதவியுடன் இமுச வலயங்களுக்குள் அமைந்துள்ள தொழில்முயற்சிகள் அனைத்திலும் பரந்துகொண்டிருக்கும் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கு விசேட கருத்திட்டம் ஒன்று அமுல்படுத்தல்
- பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு தொழில்முயற்சிகளில் தீ தடுப்பு, ஆய்வு மற்றும் தீ விபத்து மதிப்பீடு என்பவற்றில் முக்கியமாகக் கவனம் செலுத்துகிறது. அத்துடன் தொழில்முயற்சிகளின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் வலயங்களில் ஏதாவது நிகழ்ந்தாலும் என்பதற்காக 24 மணித்தியாலங்களும் அழைப்பில் இருத்தல்

19. அறவீட்டு அலகு

பணிப்பாளர் சபையின் விசேட தேவைக்கமைய 2018 செப்டம்பரில் இமுச இன் அறவீட்டு அலகு நிறுவப்பட்டது. இமுச சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து நீண்டகாலமாகவுள்ள நிலுவைகளைச் சேகரிப்பதே இந்த அலகின் பிரதான நோக்கமாகும். இந்த அலகானது 2013 ஆம் ஆண்டிலிருந்து இமுச இற்குச் செலுத்தவேண்டிய 120 கடன்படுனரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியது ரூபா 22 மிலி. க்கும் மேலாகும். இமுச இன் நிதி மற்றும் கண்காணிப்புப் பிரிவுடன் இணைந்து இப் பிரிவினால் நிலுவையாகவுள்ளதில் ரூபா 1.5 மிலி. ஐ செப்டம்பர் 2018 இல் நிறுவப்பட்டதிலிருந்து சேகரிக்க முடிந்தது.

2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

	அனுப்பிய கடிதங்களின் எண்ணிக்கை	திரும்பி வந்த கடிதங்களின் எண்ணிக்கை
1வது நினைவூட்டல்	52	8
2வது நினைவூட்டல்	39	6
இறுதி நினைவூட்டல்	39	1

விஜயம் செய்த கம்பனிகள்	-	10 கம்பனிகள்
பத்து கம்பனிகளிலிருந்து மொத்த அறவீடுகள்	-	ரூபா 2,169,087
கம்பனிகளிலிருந்து கிடைத்த பதில் கடிதங்களின் எண்ணிக்கை	-	10 கம்பனிகள்
தீர்ப்பதற்கு இணக்கம் காணப்பட்டவை	-	3 கம்பனிகள்
சட்ட நடவடிக்கைக்காக சட்ட பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டவை	-	36 கம்பனிகள்

20. நிதிப் பிரிவு

நிதிப் பிரிவு முறையான நிதி / உள் கட்டுப்பாடுகளைப் பேணுவதன் மூலமும், அனைத்து நிதிசார் விடயங்களிலும் முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்குதல் மூலமும் தொடர்ந்து நிறுவனத்திற்கு உதவுகிறது. நிதி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முறையான கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணுதல், நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுதற்குத் தொடர்ந்தும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகித்தல், பெறுகை குழுவின் பணிகளுடன் ஒருங்கிணைதல் மற்றும் முறையான கடன் கட்டுப்பாட்டு அமைப்புகளை நிறுவுதல் என்பன நிதி பிரிவின் முக்கிய பணிகளாகும். சபையின் சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றது என்ற நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கு முறைமைகளும், நடைமுறைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பம் மூலம் உயர்ந்த தரத்திலான வாடிக்கையாளர் சேவைகள் வழங்கும் நோக்கத்துடன், நிதிப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் இமுச இனால் ஓறக்கிள் EBS முறைமையை அமுல்படுத்துவதைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இருக்கும். உண்மையான நேர அடிப்படையில் நிகழ்நிலை நிதிசார் சேவைகளை எளிதாக்குவதற்கு புதிய வாடிக்கையாளர் சேவைத் தளம் உதவும்.

நிதி செயலாற்றுகை - 2019

டிஸம்பர் 31 முடிவடைந்த ஆண்டின் நிதி முன்னேற்றம்	2019 (ரூபா மிலி.)	2018 (ரூபா மிலி.)	மாற்றம் (%)	2017 (ரூபா மிலி.)
வருமானம்	4,646	3,890	19.45	3,712
மொத்த தொழிற்பாட்டு செலவினம்	(3,773)	(3,375)	(11.81)	(3,211)
செயற்பாட்டு இலாபம்	873	515	69.56	501
நிதி வருமானம்	411	344	19.45	337
நிதி செலவு	(11)	(8)	(37.73)	(11)
வரிக்கு முன்னரான மிகை	1,274	851	49.58	827
வரி செலவுகள்	(115)	(92)	24.78	(71)
வரிக்குப் பின்னரான மிகை	1,158	759	52.59	756
ஏனைய விரிவான வருமானம்	(51)	(11)	(369.32)	(25)
மொத்த விரிவான வருமானம்	1,107	748	47.94	731
வருட முடிவில் நிதி நிலைமை (ரூபா மிலி.)				
மொத்த சொத்துக்கள்	44,158	43,269	2.06	42,412
மொத்த ஒப்புரவு	42,685	41,631	2.53	41,005

மிகை

சபையின் வரிக்குப் பின்னரான மிகை 2018 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 759.09 மி. உடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டு 52.59% இனால் ரூபா 1,158.3 மி. ஆக அதிகரித்துள்ளது.

வரிக்குப் பின்னரான மிகை

இ.ரூபா மிலி.



வருமானம்

மொத்த தொழிற்படுத்தல் வருமானத்தின் வளர்ச்சி ரூபா 756.48 மிலி.ஐ முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 19.45% அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. மீளாய்வுக்கான ஆண்டில் தொழிற்படுத்தல் வருமானம் ரூபா 4,646.09 மிலி. ஆகும். அதேவேளை 2018 ஆம் ஆண்டுக்கான பதிவுசெய்யப்பட்ட தொழிற்படுத்தல் வளர்ச்சி ரூபா 3,889.61 மிலி. ஆக இருந்தது. நில வாடகை, வருடாந்த கட்டணங்கள், இறக்குமதி /ஏற்றுமதி சேவைகள் கட்டணங்கள், நீர் என்பன சபையின் வருமானத்திற்கு மிக்பெரிய பங்களிப்பாளராக, மொத்த தொழிற்படுத்தல் வருமானத்தின் 82.08% ஆக கணக்கிடப்பட்டுள்ளது. சபையினால் சம்பாதிக்கப்பட்ட வட்டி வருமானம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 344,45 மிலி. இலிருந்து 2019 இல் 19.45% ஆக, ரூபா 411.44 மிலி. ஆக அதிகரித்துள்ளது. இது வினைத்திறன் மிக்க நிதி முகாமைத்துவம் மற்றும் முதலீட்டு பிரிவின் அதிகரிப்பினாலுமாகும். சபையின் மொத்த வருமானம் 2018 இல் ரூபா 4,234.06 மிலி. இலிருந்து 2019 இல் ரூபா 5,057.53 மிலி. ஆக அதிகரித்துள்ளது.

செயற்படுத்தல் வருமானம்

இ.ரூபா மிலி.



செயற்படுத்தல் செலவினங்கள்

மொத்த செயற்படுத்தல் செலவினங்கள் 2018 இல் ரூபா 3,374.9 மிலி. இலிருந்து 2019 ஆம் ஆண்டில் 11.81% ஆல் ரூபா 3,773.37 மிலி. ஆக அதிகரித்துள்ளது. இது முக்கியமாக 2019 இல் ஆளணி செலவினங்கள் 13.32% இனால் அதிகரித்த காரணத்தினாலாகும். சபையின் வருமான விகிதத்தின் செலவு 2018 இல் இருந்த 82.33% இலிருந்து 2019 இல் 78.11% ஆக குறைந்தது செயற்படுத்தல் வருமானம் அதிகரித்ததனலாகும். குறிப்பிட்ட காலத்தில் தேய்மான செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 6% இனால் அதிகரித்துள்ளது.

செயற்படுத்தல் செலவினங்கள்

இ.ரூபா மிலி.



வரிகளுக்கான பங்களிப்பு

இந்த ஆண்டு நேரடி மற்றும் மறைமுக வரிக்கான இமுச இன் பங்களிப்பு ரூபா 369.78 மி. ஆகும். முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 14.51% வளர்ச்சி உள்ளது. ஒரு செலவினமாக அடையாளம் காணப்பட்ட தடைசெய்யப்பட்ட பெ.சே.வ. (VAT) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 17.32 மி. ஆக 9.45% இனால் அதிகரித்துள்ளது. சபையின் மொத்த நேரடிவரிகள் வட்டி வருமானத்தின் மீதான வரியையும் உள்ளடக்கியதாகும்.

வரிவிதிப்பு

இ.ரூபா மிலி.



2019
நிதிக் கூற்றுக்கள்

(2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கானது)

இலங்கை முதலீட்டுச் சபை

வருமானக் கூற்று

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
வருமானம்	**4**	**4,646,091,668**	**3,889,614,384**
கழிக்க: செலவினங்கள்			
தொழிற்பாட்டு செலவினங்கள்	**6**	322,000,511	267,056,011
நிர்வாகச் செலவினங்கள்	**7**	3,165,507,062	2,846,961,667
அரச கட்டணங்கள் வரி	**8**	254,568,577	230,591,904
ஏனைய செலவினங்கள்	**9**	31,290,988	30,301,325
மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்		3,773,367,139	3,374,910,907
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் பெறுபேறுகள்		**872,724,528**	**514,703,477**
நிதி வருமானம்		411,444,914	344,450,042
நிதி செலவினங்கள்		10,657,560	7,737,398
தேறிய நிதி வருமானம்	**10**	**400,787,354**	**336,712,644**
வரிக்கு முன்னரான மிகை		**1,273,511,883**	**851,416,121**
வரிச் செலவினங்கள்		115,204,576	92,323,030
காலப்பகுதிக்கான மிகை		**1,158,307,307**	**759,093,091**

இலங்கை முதலீட்டுச் சபை

விளக்கமான வருமானக் கூற்று

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
காலப்பகுதிக்கான மிகை		**1,158,307,307**	**759,093,091**
ஏனைய விளக்கமான வருமானம்			
ஐஎப்ஆர்எஸ் சீராக்கல்கள் பணியாளர் கடன் வட்டி		38,509,576	35,794,021
கழிக்க: வரையறுத்த பயன்பாட்டுத் திட்டம்	**21.1**		
ஆயுட்கணக்கர் (இலாபம்)/இழப்பு		51,499,585	10,973,058
பணியாளர் கடன் மீதான பணியாளர் செலவு		(38,509,576)	(35,794,021)
காலப்பகுதிக்கான மொத்த விளக்கமான வருமானம்		**1,106,807,722**	**748,120,033**

இலங்கை முதலீட்டுச் சபை
நிதிசார் நிலைமை கூற்று

டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள்	11	5,310,547,630	5,291,650,634
முதலீட்டு சொத்து	12	31,073,365,587	31,029,263,620
அமூலிலுள்ள மூலதன பணிகள்	13	1,982,355,530	1,636,699,289
நிதிசார் சொத்துக்கள்	14	654,403,425	601,097,866
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்		**39,020,672,172**	**38,558,711,409**
நடைமுறை சொத்துக்கள்			
பதிவேட்டுப் பொருட்கள்		10,272,093	11,716,985
கைதவிர்த்தலுக்கான வீடுகள்		2,551,000	2,551,000
நிதிசார் சொத்துக்கள்	15	206,479,430	193,711,293
தொழில்முயற்சிகளிலிருந்து கிடைக்கவேண்டியவை	16	315,491,118	266,543,492
முற்கொடுப்பனவுகளும், கிடைக்கவேண்டிய ஏனையவையும்	17	264,288,415	484,442,579
காசும், காசுக்கு சமமானவையும்	18	4,338,222,775	3,750,853,033
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**5,137,304,831**	**4,709,818,381**
மொத்த சொத்துக்கள்		**44,157,977,003**	**43,268,529,790**
ஒப்புரவும் பொறுப்புக்களும்			
ஒப்புரவு			
திரண்ட நிதியம்		11,845,461,590	10,953,811,118
ஒதுக்கங்கள்		15,340,693,234	15,340,693,234
		27,186,154,824	**26,294,504,352**
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்	20	15,915,950,349	15,733,100,025
ஒத்திவைக்கப்பட்ட செலவினம்	19	(417,422,964)	(397,100,121)
		15,498,527,385	**15,335,999,904**
மொத்த ஒப்புரவு		**42,684,682,209**	**41,630,504,256**
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்			
ஓய்வூதிய பிரதிலாப கடப்பாடுகள்	21	329,992,061	272,788,724
நடைமுறை அல்லாத நிதிசார் பொறுப்புக்கள்	22	74,875,711	34,105,586
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்		**404,867,772**	**306,894,310**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நடைமுறை நிதிசார் பொறுப்புக்கள்	22	26,977,500	13,817,596
திரண்ட செலவினங்களும் செலுத்தவேண்டிய ஏனையவையும்	23	1,018,683,817	1,288,105,680
செலுத்தவேண்டிய வரி		22,765,703	29,207,948
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**1,068,427,020**	**1,331,131,224**
மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்		**44,157,977,003**	**43,268,529,790**

பக்கம் 6 - 26 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுக்களின் அத்தியாவசியப் பகுதியாகும்.

இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபைக்காகவும், அதன் சார்பாகவும் அங்கீகரித்து, ஒப்பமிடப்பட்டுள்ளது.

சுசன்த ரத்நாயக்க தலைவர்	டாக்டர் ஹர்ஷா கபரால் பணிப்பாளர் சபை அங்கத்தவர்	சீ.பீ.மலல்கொட பணிப்பாளர் நாயகம்	எஸ்.ஏ.டபிள்.கரவீர நிறைவேற்றுப் பணிப்பாளர்-நிதி

25-பெப்-2020

இலங்கை முதலீட்டுச் சபை

ஒப்புரவிலுள்ள மாற்றங்கள் பற்றிய கூற்று

2019 டிஸம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு

	திரண்ட நிதியம் ரூபா	மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபா	மொத்த ஒப்புரவு ரூபா
2018 ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி	**10,707,121,650**	**15,340,693,234**	**26,047,814,884**
காலப்பகுதிக்கான மிகை	748,120,033	-	748,120,033
திரட்டிய நிதியத்திற்குப் பங்களிப்பு	(500,000,000)	-	(500,000,000)
ஒப்புரவில் நேரடியாக திறைசேரியால் இனங்காணப்பட்டவைக்கான கொடுக்கல் வாங்கல்கள்	(1,430,565)	-	(1,430,565)
2018 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி	**10,953,811,118**	**15,340,693,234**	**26,294,504,352**
காலப்பகுதிக்கான மிகை	1,106,807,722	-	1,106,807,722
சொத்துக்களை அங்கீகரித்தல் [1]	248,192	-	248,192
வருமானத்தில் மாற்றத்தின் தாக்கம் -2018 [2]	(439,787)	-	(439,787)
கிடைக்கவேண்டிய சீராக்கல் ஒப்புரவிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்டதன் தாக்கம் -இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் [3]	(209,600,000)	-	(209,600,000)
ஒப்புரவில் நேரடியாக திறைசேரியால் இனங்காணப்பட்டவைக்கான கொடுக்கல் வாங்கல்கள்	(5,365,655)	-	(5,365,655)
2019 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி	**11,845,461,590**	**15,340,693,234**	**27,186,154,824**

பக்கம் 6 - 26 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்" நிதிக் கூற்றுக்களின் அத்தியாவசியப் பகுதியாகும்.

1 நேரடியாக அடையாளம் காணக்கூடிய நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்க்கப்படாத சொத்துக்கள். இந்தச் சொத்துக்கள் நிலையான சொத்துக்களின் கணக்காய்விற்கு அமைய இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

2. முன்னைய வருட வருவாய் மதிப்பீட்டின் மாற்றத்தின் விளைவானது அவ் வருட நிதிசார் கூற்றுக்களில் மீண்டும் குறிப்பிடாது ஒப்புரவு கணக்கிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்டது.

3. கொழும்பு 3 இல் அமைந்துள்ள மரமுந்திரிகை கூட்டுத்தாபன காணி என்று அழைக்கப்படும் காணிக் கணக்கில் பெறவேண்டிய ரூபா 209,600,000 தொகையானது விவேகமான எண்ணக்கருவின்படி ஒப்புரவு கணக்கிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்டது

4. மெகா கருத்திட்டத்திற்குரிய உட்கட்டமைப்பு வசதிக்காக ஏற்பட்ட செலவானது ஒப்புரவு கணக்கிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்டது.

இலங்கை முதலீட்டுச் சபை

காசுப் பாய்ச்சல் கூற்று

டிஸம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கானது	2019 ரூபா (மிலி.)	2018 ரூபா (மிலி.)
செயற்பாட்டு தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (குறிப்பு 24)	**924.84**	**1036.10**
செலுத்தப்பட்ட வருமான வரி	(121.65)	(82.61)
ஓய்வூதிய பிரதிலாப கடப்பாட்டுக் கொடுப்பனவுகள்	(37.94)	(46.94)
பணிக்கொடை - மீள் சீராக்கல்	1.27	0.48
பெற்றுக்கொண்ட ஒத்திவைக்கப்பட்ட வருமானம்	408.75	562.04
பெற்றுக்கொண்ட கொடை	-	18.15
செயற்பாட்டு தொழிற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	**1,175.27**	**1,487.21**
முதலிடும் தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
பெற்றுக்கொண்ட முதலீட்டு வருமானம்	411.13	368.12
பணியாளர் கடனும், நிதிசார் உதவியும்	(43.08)	(50.78)
நிலையான சொத்துக்கள் கொள்வனவு	(153.55)	(75.49)
நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து வரும்படி	18.94	11.03
அமுலிலுள்ள மூலதனப் பணிகள்	(791.58)	(620.91)
ஒத்திவைக்கப்பட்ட செலவினம்	(0.31)	(1.19)
ஜப்பானிய இராஜதந்திர மேம்பாட்டு சபைக்கு அனுப்பப்பட்ட நிதி	-	(14.63)
முதலிடும் தொழிற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	**(558.45)**	**(383.84)**
நிதியிடல் தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
செலுத்தப்பட்ட குத்தகை தவணைக் கட்டணம்	(29.45)	(20.77)
திறைசேரிக்கு நிதியத்தை மாற்றல்	-	(500.00)
நிதியிடல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	**(29.45)**	**(520.77)**
காசும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)	587.37	582.59
வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும்	3,750.85	3,168.26
வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்	**4,338.22**	**3,750.85**

இலங்கை முதலீட்டுச் சபை

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. அறிக்கைப்படுத்தும் நிறுவனம்

இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் 1978 இன் இல. 4 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இந் நிறுவனத்தின் பதிவு அலுவலகமும், பிரதான அலுவலகமும் கொழும்பு 1 எக்சலன் சதுக்கத்தில் உள்ள உலக வர்த்தக மையத்தின் மேற்குக் கோபுரத்தில் அமைந்துள்ளது.

2. தயாரித்தலுக்கான அடிப்படைகள்

2.1 இணக்கக் கூற்று

சர்வதேச கணக்கீட்டுத் தரச் சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்கீட்டுத் தரங்களுக்கு (SLFRS) அமைய நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானம், ஒப்புரவில் மாற்றங்கள், காசுப் பாய்ச்சல் மற்றும் குறிப்புக்கள் சபையின் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 மதிப்பீடுகள், நியாயப்படுத்துதல் மற்றும் ஊகங்களை உபயோகித்தல்

சபையின் நிதிசார் கூற்று தயாரிக்கப்படும்போது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் அசாதாரண பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் என்பவற்றில் அந்த அறிக்கையிடப்பட்ட திகதியில் அறிக்கையிடப்பட்ட தொகையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றவற்றிற்கு முகாமைத்துவம் நியாயப்படுத்துதல், மதிப்பிடுதல் மற்றும் ஊகங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த மதிப்பீடுகளும், அடிப்படை ஊகங்களும் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த ஊகங்களும், மதிப்பீடுகளும் நிச்சயமில்லாததால் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட சொத்துக்களில் அல்லது பொறுப்புக்களில் கொண்டுசெல்லப்பட்ட தொகையில் பொருள் சீராக்கல் மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்படலாம்.

2.3 தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம்

நிதிசார் கூற்றைத் தயாரிக்கும்போது சபை தொடர்ந்தும் இயங்குகின்ற ஒரு நிறுவனமாக இருக்கின்ற வல்லமை கொண்டதாக இருப்பதாக முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளது. சபை தொடர்ந்தும் செயற்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்வதற்குப் போதுமான வளங்கள் சபையிடம் உள்ளதென்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தையிட்டு கிடைத்த தகவல்கள் அனைத்தையும் கருத்தில் கொள்ளும்போது ஒழிக்கவேண்டிய அல்லது செயற்பாடுகளை நிறுத்தவேண்டிய தேவை எதனையும் சபை எதிர்பார்க்கவில்லை. அதற்கேற்ப சபை தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கிறது.

2.4 பாவனையிலுள்ள மற்றும் நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாணயம்

சபையின் பாவனையிலுள்ள நிதி இலங்கை ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், நிதிசார் கூற்றுக்களும் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

3. குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள்

3.1 நிதிச் சொத்துக்கள்

சபை அதன் நிதிச் சொத்துக்களைக் கடன்கள் மற்றும் கிடைக்கவேண்டியவையென வகைப்படுத்துவதுடன், நிதிச் சொத்துக்கள் முதலீட்டில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. ஆரம்ப இனங்காணலின்போது இந்த வகைப்படுத்தல் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டதுடன், இந்த முதலீடு எந்தத் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டு, பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதிலும் தங்கியுள்ளது.

(அ) வகைப்படுத்தல்

(i) *கடன்களும், கிடைக்கவேண்டியவையும்*

கடன்களும், கிடைக்கவேண்டியவையும் ஒரு தீவிரமான சந்தையில் தெரிவிக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுடனான ஒரு மூலத்திலிருந்து பெறப்படாத நிதிச் சொத்தாகும். பொதுவான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் கிடைக்கவேண்டியவையும் இவ்வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை இழப்பீடுகளுக்காக மீளாய்வு செய்யப்படுகிறது.

(ii) *நியாயமான பெறுமமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் செர்துக்கள் (முதிர்வடையும்வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்கள்*)

நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களாவன நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுடனானதும், ஒரு மூலத்திலிருந்து பெறப்படாததும், நிலையான முதிர்வு காலத்தைக் கொண்டிருப்பதுடன், சபையின் முகாமைத்துவம் அவற்றை முதிர்வடையும்வரை வைத்திருக்கமுடியுமென்ற சார்பான நோக்கத்தையும், வல்லமையையும் கொண்டுள்ளதுமாகும். இந்தச் நிதிச் சொத்துக்கள் வருமானக் கூற்றில் நியாயமான பெறுமதியில் வகைப்படுத்தப்பட்டதாக அடையாளம் காணப்பட்டது.

(ஆ) இழப்பீடுகள்

இழப்பீடுகள் பற்றிய அறிகுறிகள் ஏதாவது இருக்கின்றனவாவென ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலும் நிதிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான அறிகுறி ஏதும் இருப்பின் சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகை மதிப்பிடப்படும்.

இழப்பீட்டு நட்டங்களானது சொத்தின் மேற்கொண்டுசெல்லும் அளவு அல்லது அதன் காசு உற்பத்தி செய்யும் அலகுகள் அதன் அறவிடப்படக்கூடிய தொகையைத் தாண்டிச் செல்லும்போது அடையாளம் காணப்படுகிறது. இழப்பீட்டு நட்டங்கள் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(இ) அடையாளம் காணப்பட்டவை அகற்றல்

ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் திகதியிலும், முன்னரான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இழப்பீட்டு நட்டங்கள் குறைவடைந்துள்ளனவா அல்லது அகன்றுவிட்டனவாவென்ற அறிகுறிகளுக்காக மதிப்பீட்டுக்குள்ளாக்கப்படுகிறது. அறவிடப்படக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் ஏதாவது மாற்றம் இருப்பின், இழப்பீட்டு நட்டங்கள் அகற்றப்படும்.

3.2 ஆதனங்கள், பொறித் தொகுதிகள், சாதனங்கள்

(அ) கிரயம்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (இ.நி.அ.நி.SLFRS) 1 இன்படி, ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் சாதனங்களை மதிப்பீடு செய்யும்போது அதன் மேற்கொண்டு செல்லப்பட்ட பெறுமதியில் 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று திரண்ட தேய்மானத்தை கழித்து, வருகின்ற தொகையே 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று பெறுமதியாகக் கருதப்பட்டுவருகிறது.

(ஆ) தேய்மானம்

தேய்மானம், ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் சாதனங்கள் என்பவற்றின் கிரயம்/மதிப்பீடு நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது. சொத்துக்கள், பொறித் தொகுதிகள், சாதனங்கள் என்பவற்றின் ' பயன்பாட்டுக் காலத்தில் கொள்வனவு செய்த வருடத்திலேயே தேய்மானம் அறவிடப்படுகிறது. இறையில் காணிக்கு தேய்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

சொத்துக்களின் வகை	வருடாந்த தேய்மான வீதம்	காலப்பகுதி (ஆண்டுகள்)
கட்டடங்களும், கட்டமைப்புக்களும்	5	20
பொறித் தொகுதி, இயந்திரங்கள்	10	10
இணைப்பும், பொருத்துதலும்	10	10
அலுவலக தளபாடங்களும், சாதனங்களும்	10	10
கணனிகள்	33.33	3
மோட்டார் வாகனங்கள்	20	5 .

(இ) அடையாளம் காணப்பட்டவை அகற்றல்

சொத்துக்கள் மற்றும் சாதனங்கள் கைதவிர்க்கும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் எந்த பொருளாதார அனுகூலமும் எதிர்பார்க்கப்படாதவிடத்து, அவை அகற்றப்படுகின்றன. அடையாளம் காணப்பட்ட சொத்து, பொறித் தொகுதி, சாதனம் ஒன்றினை அகற்றுதலினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அதனை விற்று வரும் தொகைக்கும், அந்தச் சொத்தை மேற்கொண்டு செல்லும் தொகைக்குமிடையிலான வித்தியாசமாகத் தீர்மானிக்கப்படுவதுடன், இது வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

(ஈ) தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலை

இவ்வாண்டில் உண்டான மூலதன செலவினங்களில் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் பூரணப்படுத்தப்படாதவை தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலையாகக் காட்டப்பட்டுள்ளன. அதேவேளை ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டவையும், பயன்பாட்டிற்கு உள்ளவையுமான மூலதன சொத்துக்கள் ஆதனம், பொறித் தொகுதி, சாதனம் என்பதற்கு மாற்றப்பட்டுள்ளன.

(உ) குத்தகை சொத்துக்கள்

நிதிக் குத்தகைகளின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு, அதேயளவு நிதிசார் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டு, குத்தகைக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் என்ற வகையின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. நிதிசார் பொறுப்புக்களின் கீழுள்ள சொத்துக்கள் அவை பயன்படுத்தப்படும் காலம் பூராவும் தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.

(ஊ) கட்டமைப்புக்கள்

ஏழு பிரதான உப வகுதிகளின் கீழ் கட்டமைப்புகளின் நியாயமான பெறுமதிகள்

மதிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதான உப வகுதியுடனும் தொடர்புபட்ட சகல விடயங்களும், அங்கங்களும் ஒரு அலகின் பகுதியாகுவதாகக் கருதப்படுகிறது.

3.3 (அ) முதலீட்டுச் சொத்துக்கள்

முதலீட்டுச் சொத்துக்கள் அச் சொத்துக்கள் வகைப்படுத்தும் தினத்தில் காணப்படும் பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பான எதிர்காலப் பொருளாதார அனுகூலங்கள் சபைக்குக் கிடைக்கக்கூடியதானது சாத்தியமானாலும், கிரயமானது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியுமானதுமாக இருக்குமெனில், அத்தகையவை முதலீட்டுச் செர்துக்களாக அடையாளம் காணப்படும். வாடகை வருமானத்தை உழைப்பதற்காக வைத்திருக்கும் சொத்துக்களானது முதலீட்டுச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தேய்மானம் (கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு)

காணி தவிர முதலீட்டுச் சொத்துக்களின் தேய்மானம் மதிப்பீட்டில் நேர் கோட்டு அடிப்படையில் கணிக்கப்படும் கிரயம் / முதலீட்டுச் சொத்துக்கள் வருடந்தோறும் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தில் பின்வருமாறு தேய்மானம் மேற்கொள்ளப்பட்டது

சொத்துக்களின் வகை	**வருடாந்த தேய்மான வீதம்**	**காலப்பகுதி (ஆண்டுகள்)**
கட்டடங்கள்	**5**	**20**

3.4. பொருட்பதிவேடுகள்

சகல பொருட்பதிவேடுகளும் குறைவான ஆகுசெலவில் அல்லது தேறிய பெறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. முதல் உள்வரல் முதல் வெளியேறல் (FIFO) அடிப்படையில் கிரயம் தீர்மானிக்கப்படுகிறது.

3.5 ஏனைய சொத்துக்கள்

ஏனைய கடன்படுனர், கிடைக்கவேண்டியவை, முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்டவை என்பன ஏனைய சொத்துக்களில் அடங்கும்.

(அ) *முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்ட செலவினங்கள்*
ஒரு நிதியாண்டை விடக் கூடுதலான காலத்திற்கு அனுகூலமானதாக அல்லது சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் செலவினம் முற்பணங்கள், வைப்புக்கள், மற்றும் முற்செலுத்தப்பட்ட செலவினங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய செலவினம் கால விகிதாசார அடிப்படையில் அவை எவ்வளவு காலத்திற்கானதோ அதற்கேற்ப பதிவழிக்கப்படும்.

(ஆ)*ஏனைய கடன்படுனர்*

ஏனைய கடன்படுனர் செலவில் இழப்பீட்டு நட்டம் கழித்து, இனங்காணப்படுவர். ஏனைய பெற்றுக்கொள்ள வேண்டியவையின் கீழ் உள்ள மொத்தம் ரூபா 507,650.00 தலைமை அலுவலகத்தில் காசு குறைபாடாகக் காட்டப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு பூர்த்தியாகாத நிலையிலுள்ளது.

3.6 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானவையும் கையிருப்புக் காசு மற்றும் குறுகிய கால, துரித கதியில் மாற்றக்கூடிய மூலதனங்களை உள்ளடக்கியதாகும். இவை வேண்டிய நேரத்தில் உடனடியாக வேண்டிய அளவு மாற்றக்கூடியவையும், பெறுமதியில் எந்த குறிப்பிடப்பட்ட தீங்கு எதனையும் விளைவிக்காதவையுமாகும். குறுகிய கால காசு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இவை வைத்திருக்கப்படுகின்றன.

காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டு தரங்கள் இல.7 (LKAS) க்கு அமைய மறைமுகமான வழிமுறைகளைப் பயன்படுத்தி, காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

3.7 ஊழியர் அனுகூலங்கள்

(அ) *வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்*

முறைப்படியான நியதிச் சட்டங்களுக்கும், பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதி (EPF) பங்களிப்பிற்கும், ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) பங்களிப்பிற்கும் தகுதியுடையவர்களாவார்கள். சபை, ஊழியர்களின் மொத்த வரும்படியின் நிலையான பங்களிப்புகளை ஊழியர் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் செலுத்துகிறது. மேலும் தொகையினைச் செலுத்தவேண்டுமென்று சட்டரீதியானதோ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடோ எதுவும் இருக்காது.

(ஆ) *வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள்*

வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள் என்பவை வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த தொழிலுக்குப் பிற்பாடான தொழிற்பாடுகளாகும். 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடை கொடுப்பனவு சட்ட இல.12 நியதியின்படி சபை பணிக்கொடை செலுத்தவேண்டும். இச் சட்டத்தின் கீழ் ஆயுட்கணக்கர் மதிப்பீட்டின் அடிப்படையில் கடப்பாட்டிற்கான ஏற்பாடு தீர்மானிக்கப்படுகிறது.

3.8 பொறுப்புக்களும், ஏற்பாடுகளும்

கடந்தகால சம்பவங்களின் பயனாக கணக்குத் தீர்த்தலால் பொருளாதார அனுகூலங்கள் கொண்ட வளங்கள் வெளிச்செல்வதற்கு வழிவகுப்பதாக எதிர்பார்க்கப்படுவதால் தற்போதைய சட்டரீதியான /ஆக்கபூர்வமான கடப்பாடுகள் காணப்படும்போது நிதிசார் நிலைமைக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடன் கொடுனரின் கோரிக்கைக்கு அமைய செலுத்தவேண்டிய கடப்பாடுகள் அல்லது நிதி நிலைமை கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றுக்களின் நடைமுறைப் பொறுப்புக்களாகக் கருதப்படுகின்றன. ஒரு வருடத்திற்குப் பின்னரான செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்புக்களாகக் கருதப்படுகின்றன.

ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்கள் சேர்ந்த செலவினம் உட்பட ஏனைய கடன் கொடுத்தவர்களை உள்ளடக்கியதாகும். இவை அவற்றின் நியாயமான பெறுமதியாகக் கருதப்பட்டு, அவற்றின் வரலாற்றுப் பெறுமதியில் கூறப்பட்டுள்ளது.

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

3.9 வருமானம் அடையாளம் காணல்

(அ) *வருமானம்*

சேவைகள் /கட்டணத்திலிருந்தான வருமானமானது பெற்றுக்கொண்ட கைம்மாறு அல்லது பெற்றுக்கொள்ளவேண்டியவற்றின் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகிறது. உத்தரவுப் பத்திர கட்டணம் மற்றும் ஒப்பந்த செயலாக்கக் கட்டணம் என்பன காசு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(ஆ) *வட்டி வருமானம்*

இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியாக அளவிடப்பட்ட நிதிசார் கருவிகள் உட்பட்ட சகல வட்டியுடனான நிதிசார் கருவிகளுக்கான வட்டி வருமானம் வருமானக் கூற்றில் 'நிதி வருமானம்'' என்பதற்குள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

(இ) *ஏனைய வருமானம்*

ஏனைய வருமானம் ஒரு அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

3.10 செலவினங்கள்

செலவினங்கள் அடையாளம் காணல்

(அ) *வருமான செலவினம்*

சகல செலவினங்களும் வழங்கப்பட்ட கைம்மாற்றின் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டதுடன், அந்த செலவினங்கள் அவை சம்பந்தப்பட்ட காலத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. வருமான கூற்றில் சபையினால் உழைத்த மிகை சகல தெரிந்த பொறுப்புக்களுக்கும், ஆதனங்கள், பொறித் தொகுதிகள், சாதனங்கள் என்பவற்றின் தேய்மானத்திற்குமான ஏற்பாட்டின் பின்னரானவையாகும்.

(ஆ) *மூலதன செலவினம்*

நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் அல்லது நிறுவனத்தின் சேவை/உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் நிலையான தன்மையிலுள்ள சொத்துக்களை விரிவுபடுத்துவதற்கு அல்லது திருத்துவதற்குச் செலவிடப்படும் செலவினம் மூலதன செலவினமாகக் கருதப்படுகிறது.

3.11 வரி விதிப்பு

வரி விதிப்பானது நிதிசார் கூற்றில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளவாறு வட்டி வருமானத்தின் மூலங்களின் மீதான அடிப்படையிலும், 2017 ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரிச் சட்டம் இல.24 நியதியின்படியும், அதன் பின்னரான திருத்தங்களுக்கு அமைவாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

3.12 கணக்குக் கொள்கைகளில் மாற்றங்கள்

முன்னர் ஆதனங்கள் பொறித்தொகுகிகள் ,சாதனங்கள் என்பனவற்றிற்கு அவை கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தில் தேய்மானங்கள் மேற்கொள்ளப்படாது, கைதவிர்க்கும் வருடத்திலேயே தேய்மானம் கணக்கிடப்பட்டது. இம் முறை, 01ஜனவரி 2019 இலிருந்து மாற்றியமைக்கப்பட்டு, பயன்பாட்டுக் காலத்தில் கொள்வனவு செய்த வருடத்திலேயே தேய்மானம் அறவிடப்படுகிறது. .

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது		2019	2018
		ரூபா	ரூபா
4	**வருமானம்**		
	நில வாடகை	1,193,019,780	881,392,643
	வருடாந்தக் கட்டணம்	830,059,523	702,134,793
	இறக்குமதி அல்லது ஏற்றுமதி சேவைக் கட்டணங்கள்	1,428,114,025	1,148,966,443
	நீர் வழங்கல் மூலம் தேறிய வருமானம் (குறிப்பு 4.1)	362,177,762	419,735,183
	காணி கட்டுப்பணம்	218,799,859	213,007,727
	வாடகை வருமானம்	147,877,915	118,985,459
	உத்தரவுச்சீட்டு கட்டணம் - பிரிவு-16 தொழில்முயற்சிகள்	35,751,215	29,564,566
	பிரவேச அனுமதிச் சீட்டு விற்பனை	231,082,682	191,634,952
	உடன்படிக்கை செயலாக்க கட்டணம்	57,738,308	46,752,931
	வீடமைப்பு, ஏனைய செயற் திட்டங்களிலிருந்து வருமானம்	19,846,677	17,802,442
	நானாவித வருமானம்	121,623,922	119,637,245
		4,646,091,668	**3,889,614,384**
4.1	**தொழில் முயற்சிகளுக்காக நீர் வழங்கல் மூலம் தேறிய வருமானம்**		
	நீர் வழங்கல் மூலம் வருமானம்	1,344,160,694	1,384,650,022
	நீர் வழங்கல் தொடர்பான செலவு	(981,982,932)	(964,914,838)
	நீர் வழங்கல் மூலம் தேறிய வருமானம்	**362,177,762**	**419,735,183**
5	**செயற்பாடுகளிலிருந்து மிகை**		
	செயற்பாடுகளிலிருந்து பெற்ற மிகை பின்வரும் செலவினங்கள் உட்பட சகல செலவினங்களையும் அறவிட்ட (வைப்பிலிட்ட) பின்னர் கூறப்பட்டுள்ளது		
	செயற்பாட்டு செலவினங்கள் (குறிப்பு 6)	322,000,511	267,056,011
	நிர்வாகச் செலவினங்கள் (குறிப்பு 7)	3,165,507,062	2,846,961,667
	அரச அறவீடுகள் (குறிப்பு 8)	254,568,577	230,591,904
	ஏனைய செலவினங்கள் (குறிப்பு 9)	31,290,988	30,301,325
6	**செயற்பாட்டு செலவினங்கள்**		
	முதலீட்டு ஊக்குவிப்பு செலவினங்கள்	52,824,668	29,005,705
	வலயங்கள் பராமரிப்பு	149,880,895	124,609,414
	ஒளி மற்றும் சக்தி	49,031,390	48,292,995
	பாதுகாப்பு சேவைகள்	66,613,346	61,879,967
	வலயங்களின் ஊழியர்களின் நலன்புரி செலவுகள்	3,650,211	3,267,931
		322,000,511	**267,056,011**

இலங்கை முதலீட்டுச் சபை

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது		2019	2018
		ரூபா	ரூபா
7	**நிர்வாகச் செலவினங்கள்**		
	ஆளணி செலவு (குறிப்பு 7.1)	1,874,453,119	1,682,316,947
	பணியாளர் நலன்புரி செலவினங்கள்	291,602,225	229,210,751
	அச்சிடுதலும் காகிதாதிகளும்	27,711,635	25,691,436
	பொ/இ கணனி மற்றும் அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு	47,720,883	43,227,341
	கட்டட பராமரிப்பு	84,584,415	81,054,756
	போக்குவரத்து தொடர்பான செலவினங்கள்	118,132,411	101,303,145
	அலுவலக வாடகை மற்றும் சரிபார்த்தல் பிரிவு வாடகை	75,077,753	67,041,126
	பத்திரிகை அறிவிப்புகள்	7,806,512	7,976,180
	நீர் பாவனை	5,003,590	4,898,417
	தொடர்பாடல் செலவினங்கள்	35,377,098	36,584,507
	மாநகர சபை வரிப்பணம்	15,907,708	15,912,708
	பணியாளர் பயிற்சி	14,707,650	12,443,929
	சட்ட மற்றும் தொழில்துறைசார் கட்டணம்	4,886,126	11,281,562
	சட்ட கடப்பாடுகளுக்காக இழப்பீடு	1,300,968	-
	பிரயாண மற்றும் உணவு, தரிப்பிடச் செலவினம்	6,254,974	5,583,979
	கணக்காய்வுக் கட்டணம்	2,376,000	3,328,000
	கடன்படுனர் மீதான இழப்பீடு	25,041,516	21,419,229
	தேய்மானம்	527,562,480	497,687,654
		3,165,507,062	**2,846,961,667**
7.1	**ஆளணி செலவு**		
	பணிப்பாளர் சபை கட்டணம்	810,000	900,000
	தலைவர் / பணிப்பாளர் நாயகம்	12,015,533	10,086,667
	சம்பளங்களும் கூலிகளும்-நிறைவேற்று பணியாளர்	574,408,299	500,803,893
	சம்பளங்களும் கூலிகளும்-எழுதுவினைஞர்,சமமான பணியாளர்	105,363,890	102,415,301
	சம்பளங்களும் கூலிகளும் -பாதுகாப்பு பணியாளர்	60,872,496	54,368,727
	சம்பளங்களும் கூலிகளும் -சிற்றூழியர்	128,472,475	124,239,899
	மேலதிக நேரம்	167,353,921	147,753,776
	எஞ்சிய விடுமுறைக்கான கொடுப்பனவு	73,697,846	68,001,501
	ஊக்குவிப்பு நிதி	121,391,628	92,669,480
	ஓய்வூதிய பிரதிலாப கடப்பாட்டிற்கான ஏற்பாடு	15,065,355	13,965,287
	ஊழியர் சேமலாப நிதிக்கான பங்களிப்பு	125,379,459	111,331,049
	ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்பு	25,075,892	22,266,210
	ஏனைய பணியாளர் செலவு	464,546,326	433,515,159
		1,874,453,119	**1,682,316,947**

இலங்கை முதலீட்டுச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	2019	2018
	ரூபா	ரூபா
8 அரச அறவீடுகள்		
முத்திரை வரி	1,436,880	372,675
தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி	52,581,685	46,988,831
பெறுமதி சேர்வரி - தடைசெய்யப்பட்ட "வற்" உள்ளீடு	200,550,012	183,230,398
	254,568,577	**230,591,904**
9 ஏனைய செலவினங்கள்		
அடையாள அட்டைகள் வழங்கல் செலவினங்கள்	5,119,782	4,227,630
பல்வகை செலவினங்கள்	18,431,786	20,139,859
கொள்கலன்களின் திறப்பு	2,117,851	1,427,535
காப்புறுதி	3,225,728	3,301,780
சுற்றுச் சூழல் கட்டுப்பாடு செலவினங்கள்	1,656,295	394,196
கூட்டிணைந்த சமூக பொறுப்புக்கள் தொடர்பான செலவினங்கள்	25,534	-
உபசரணை	714,011	810,326
	31,290,988	**30,301,325**
10 தேறிய நிதி வருமானம்		
நிதி வருமானம்		
அழைப்பு வைப்பு/ஏனைய வைப்புக்கள் மீதான வட்டி வருமானம்	378,769,490	313,553,712
பணியாளர் கடன் மீதான வட்டி வருமானம்	32,675,424	30,896,330
மொத்த நிதி வருமானம்	411,444,914	344,450,042
நிதி செலவினங்கள்		
குத்தகை பொறுப்புக்கள் மீதான வட்டி	9,809,725	6,996,378
வங்கி கட்டணங்கள்	847,835	741,020
மொத்த நிதி செலவினங்கள்	10,657,560	7,737,398
தேறிய நிதி வருமானம்	**400,787,354**	**336,712,644**

இலங்கை முதலீட்டுச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2019 டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு

11 ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள்

	காணி	கட்டடங்கள்	கட்டமை-ப்புக்கள்	பொறித்-தொகுதி இயந்திரங்கள்	இணைப்பும் பொருத்-தலும்	தளபாட, அலுவலக உபக.	கணனிகள்	மோட்டார் வாகனங்கள்	மொத்தம் 31.12.2019	மொத்தம் 31.12.2018
முழுமையான உரிமைகொண்ட சொத்துச் செலவினம்	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**
ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி	662,541,639	1,817,372,898	6,014,448,563	70,819,444	909,263	171,223,615	234,427,933	224,804,797	9,196,548,152	8,740,232,359
ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டவை தற்போதுள்ள மூலதன நடைமுறை			5,578,693	2,473,874	51,088	14,913,163	26,361,048	30,595,300	79,973,166	75,485,233
வேலைகளிலிருந்து மாற்றம்		25,610,191	305,766,733	31,895,486		777,500		5,030,105	369,080,015	412,522,296
ஆண்டில் கைதவிர்க்கப்பட்டவை		6,796,000	5,061,852	1,198,646	78,682	2,479,921	5,060,442	14,252,000	34,927,543	31,691,735
முதலீட்டு சொத்துக்கு மாற்றப்பட்டவை	78,282,681	-	-	-	-	-	-	-	78,282,681	-
முதலீட்டு சொத்திலிருந்து மாற்றப்பட்டவை	18,343,000								18,343,000	
டிஸம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	602,601,958	1,836,187,089	6,320,732,137	103,990,158	881,669	184,434,357	255,728,539	246,178,202	9,550,734,109	9,196,548,153
தேய்மானம்										
ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி	-	877,900,685	2,631,135,225	44,562,400	404,999	95,154,465	158,608,855	190,397,889	3,998,164,518	3,576,576,527
ஆண்டுக்கான அறவீடு	-	91,014,984	304,412,554	4,366,594	94,615	17,574,835	35,589,620	19,260,324	472,313,526	452,196,175
